

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள்

**(2022 நவம்பர் 23 ஆம் திகதி வரை திருத்தப்பட்டது.)**

---

பாராளுமன்றச் செயலகத்தால் வெளியிடப்பட்டது.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள்

(2022 நவம்பர் 23 ஆம் திகதி வரை திருத்தப்பட்டது.)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 74 ஆவது உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவினால் இந் நிலையியற் கட்டளைகள் தயாரிக்கப்பட்டன. 2022 ஒக்டோபர் மாதம் 05 ஆம் மற்றும் 2022 நவம்பர் மாதம் 23 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களையும் உள்ளடக்கிய வகையில் பிரசுரிக்கப்படும் இத் திருத்தப்பட்ட நிலையியற் கட்டளைகள் 2022 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.
2022 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி.

# உள்ளடக்கம்


நி.க. இல. பக்கம்

**முதலாவது கூட்டம்**

| | | |
|---|---|---|
| 1 - 2 | பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தின் நடைமுறைகள் .. | 1 |
| 3 | உறுப்பினர்களின் இருக்கை ஒழுங்கு .. .. .. | 2 |
| 4 | சபாநாயகர் தேர்வு .. .. .. | 2 |
| 5 | பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை .. .. .. | 3 |
| 6 | பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் தேர்வு | 4 |
| 7 | சனாதிபதியொருவரின் தேர்வு .. .. .. | 4 |

**கூட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 8 - 9 | பாராளுமன்றத்தின் கூட்டங்கள் .. .. .. | 4 |
| 10 | செயலாளர் நாயகத்தின் கடமைகள் .. .. .. | 6 |
| 11 - 12 | கூட்ட நடப்பெண் .. .. .. | 7 |
| 13 - 14 | பாராளுமன்ற நடவடிக்கைகள் .. .. .. | 7 |
| 15 - 16 | ஒத்திவைப்புகள் .. .. .. | 8 |
| 17 - 18 | தடங்கற் பிரேரணைகள் .. .. .. | 9 |
| 19 | அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மீதான ஒத்திவைப்பு | 9 |
| 20 | ஒத்திவைப்பு வேளையில் பிரேரணைகள் அல்லது கேள்விகள் | 10 |
| 21 | புறத்தோர் .. .. .. | 11 |

**பொது அலுவல்கள்**

| | | |
|---|---|---|
| 22 | பாராளுமன்ற அலுவல்கள் .. .. .. | 11 |
| 23 | பொது அலுவல்கள் .. .. .. | 12 |
| 24 - 25 | தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் .. .. | 12 |
| 26 | பத்திரங்கள் .. .. .. | 13 |
| 27 -29 | முன்னறிவித்தல்கள் .. .. .. | 14 |
| 30 | பொது மனுக்கள் .. .. .. | 16 |
| 31 - 37 | கேள்விகள் .. .. .. | 17 |
| 38 | பிரதம அமைச்சரிடம் கேட்கப்படும் கேள்விகள் .. .. | 19 |

**விவாதம்**

| | | |
|---|---|---|
| 39 - 41 | விவாதத்திற்கான விடயங்கள் .. .. .. | 20 |
| 42 | எதிர்நோக்கல் .. .. .. | 21 |
| 43 - 45 | திருத்தங்கள் .. .. .. | 21 |
| 46 | விவாதமுற்றுக்கள் .. .. .. | 23 |
| 47 - 49 | வாக்களிப்பு .. .. .. | 24 |

**சட்டமூலங்கள்**

| | | |
|---|---|---|
| 50 | சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடைமுறை | 25 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 51 | அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் III இல் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலான சட்டமூலங்கள் | | | | 26 |
| 52 - 53 | தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் | | .. | .. | 27 |
| 54 | பாதிக்கப்பட்ட தரப்பினர்கள், சாட்சிகள், சான்றுகள் | | | .. | 29 |
| 55 | இரண்டாம் மதிப்பீடு | .. | .. | .. | 29 |
| 56 | இரண்டாம் மதிப்பீட்டில் விவாதம் | .. | .. | .. | 30 |
| 57 - 58 | சட்டமூலங்கள் மீதான குழுநிலை | .. | .. | .. | 30 |
| 59 - 66 | குழுநிலையிலுள்ள சட்டமூலங்கள் மீதான நடைமுறை | | | .. | 30 |
| 67 - 70 | சட்டமூலங்களின் மீதான குழுக்களின் அறிக்கைகள் | | | .. | 31 |
| 71 - 73 | மூன்றாம் மதிப்பீடு | .. | .. | .. | 32 |
| 74 | சபாநாயகரின் சான்றுரை | .. | .. | .. | 33 |
| 75 | ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்காகக் குறித்தொதுக்கப்பட்ட நாட்கள் | | | | 39 |
| | **ஒழுங்கு** | | | | |
| 76 | ஒழுங்குபேணல் விதிகளிற்கான பொறுப்பு | | .. | .. | 34 |
| 77 - 83 | பாராளுமன்றத்தில் ஒழுங்கு | .. | .. | .. | 35 |
| 84 - 85 | தன்னிலைப் பிரேரணை மீது குறித்த சில ஆட்களை அகற்றுதல் | | | | 38 |
| 86 - 90 | விவாத விதிகள் | .. | .. | .. | 40 |
| 91 | பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்ற உறுப்பினர்களுக்கான விதிகள் | | | | 41 |
| 92 | உரையாற்றாத உறுப்பினர்களுக்கான விதிகள் | | .. | .. | 43 |
| | **குழுக்கள்** | | | | |
| 93 - 99 | முழுப் பாராளுமன்றக் குழு | .. | .. | .. | 43 |
| 100-110 | விசேட குழுக்கள் | .. | .. | .. | 44 |
| 111 | துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் | .. | .. | .. | 46 |
| 112 | அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் | | .. | .. | 49 |
| 113 | சட்டவாக்க நிலையியற் குழு | .. | .. | .. | 51 |
| | **சிறப்பு நோக்கங்களிற்கான குழுக்கள்** | | | | |
| 114 | தெரிவுக் குழு | .. | .. | .. | 52 |
| 115 | பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு | | .. | .. | 53 |
| 116 | நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு | .. | .. | .. | 53 |
| 117 | சபைக் குழு | .. | .. | .. | 53 |
| 118 | ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு | | .. | .. | 54 |
| 119 | அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு | .. | .. | .. | 55 |
| 120 | அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு | | .. | .. | 57 |
| 121 | அரசாங்க நிதி பற்றிய குழு | | | | 58 |
| 122 | வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு | | | .. | 60 |
| 123 | பொருளதார உறுதிப்படுத்தல் பற்றிய குழு | | .. | .. | 63 |

| | | |
|---|---|---|
| 124 | வழிவகைகள் பற்றிய குழு .. .. .. | 64 |
| 125 | பொது மனுக்கள் பற்றிய குழு .. .. .. | 67 |
| 126 | அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய குழு .. .. | 68 |
| 127 | உயர் பதவிகள் பற்றிய குழு .. .. .. | 69 |
| 128 | இணைப்புக் குழு .. .. .. | 70 |
| 129 | பின்வரிசைக் குழு .. .. .. | 71 |
| 130 | சிறப்பு நோக்கங்களிற்கான குழுக்களின் நடைமுறை .. | 72 |
| 131 | குழுக்களிற்கான பொது விதிகள் .. .. .. | 72 |
| 132 | குழுக்களின் தவிசாளர்கள் பதவி விலகுதல் அல்லது அகற்றப்படுதல் | 74 |
| 133 | ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் அட்டவணைகள் மீது முழுப் பாராளுமன்ற குழுவின் நடைமுறை .. .. .. | 75 |
| | ***நிதி*** | |
| 134-135 | மிகைச் செலவுகள் .. .. .. | 76 |
| 136 | அரசாங்கப் பணம் .. .. .. | 78 |
| | **ஏனைய விடயங்கள்** | |
| 137 | நிலையியற் கட்டளைகளில் திருத்தம் .. .. .. | 78 |
| 138 | நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்துதல் .. .. | 78 |
| 139-142 | சபாநாயகரின் பொது அதிகாரம் .. .. .. | 79 |
| 143 | தவிசாளர் குழாம் .. .. .. | 79 |
| 144 | உறுப்பினர்கள் சட்டத்தரணியாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட முடியாமை | 79 |
| 145 | சாட்சிகள் மற்றும் நிபுணர்களின் செலவுகள் .. .. | 80 |
| 146 | எஞ்சிய அதிகாரங்கள் .. .. .. | 80 |
| | விடய அட்டவணை .. .. .. | 81 |

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள்

## பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தின் நடைமுறைகள்

**1.** பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் நடைபெறும் (இதனகத்துப் பின்னர் "பாராளுமன்றம்" என குறிப்பிடப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்ட நாளன்று, முறைப்படி நியமித்த நேரத்திலும் இடத்திலும் உறுப்பினர்கள் ஒன்று கூடி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 3 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிற்கமைய இருக்கைகளில் அமர்ந்ததும் கூட்டத்தினைக் கூட்டுவித்தல் பற்றிய (இதனகத்துப் பின்னர் "சனாதிபதி" எனக் குறிப்பிடப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினது பிரகடனத்தை (இதனகத்துப் பின்னர் "செயலாளர் நாயகம்" எனக் குறிப்பிடப்படும்) பாராளுமன்றச் செயலாளர் நாயகம் வாசித்தல் வேண்டும். அதனையடுத்து அத்தின அலுவல் ஒழுங்குகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்:-

(அ) சபாநாயகர் தேர்வு;

(ஆ) செயலாளர் நாயகத்தின் நெறிப்படுத்தலின்படி, பாராளுமன்றத்தின் முன்னால் சபாநாயகர் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்தல்;

(இ) சகல உறுப்பினர்களும் சபாநாயகர் முன்னிலையில் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்தல்;

(ஈ) (இதனகத்துப் பின்னர் "பிரதிச் சபாநாயகர்" என குறிப்பிடப்படும்) பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளருமானவரின் தேர்வு;

(உ) குழுக்களின் பிரதித் தவிசாளர் தேர்வு.

மேற்கூறிய அலுவல்கள் முடிவுற்றதும் பாராளுமன்றமானது, பாராளுமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட திகதியும் நேரமும் வரை ஒத்திவைக்கப்படும்.

**2.** சபாநாயகரின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிடமேற்பட்டதன் பின்னர் கூடும் முதலாவது கூட்டத்தில் பாராளுமன்றம் சபாநாயகர் ஒருவரைத் தேர்வு செய்வதற்கு முற்பட வேண்டும்.

### உறுப்பினர்களின் இருக்கை ஒழுங்கு

**3.** (1) பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் பாராளுமன்றம் கூடும் முதல் நாளிலும் அதன்பின்னர் ஒவ்வோர் உறுப்பினருக்கும் இருக்கையொன்று குறித்தொதுக்கப்படும் வரையிலும், உறுப்பினர்கள், சபைத் தடை எல்லைக்குள் எந்த இருக்கையிலும் அமரலாம்.

(2) சபாநாயகரின் தற்றுணிபின்பேரில் காலத்திற்குக்காலம் உறுப்பினர்களுக்கு ஆசனங்கள் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

## சபாநாயகர் தேர்வு

**4.** சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைமுறை பின்வருமாறு அமைதல் வேண்டும்:-

(அ) சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான உறுப்பினரொருவரை முன்மொழிவதற்கு விரும்புகின்ற எவரேனும் உறுப்பினர், தேர்ந்தெடுக்கப்படின் அத்தகைய உறுப்பினர் சபாநாயகராகச் சேவையாற்றுவதற்கு விரும்புகின்றாராவென்பதை முன்கூட்டியே நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(ஆ) எவரேனும் உறுப்பினர் செயலாளர் நாயகத்தை விளித்து, அப்போது பாராளுமன்றத்தில் சமுகமளித்துள்ள வேறெவரேனும் உறுப்பினரை அதன் சபாநாயகராக முன்மொழிதல் வேண்டுமென்பதுடன், அவர் எந்த உறுப்பினரின் பெயரை முன்மொழிகின்றாரோ அந்த உறுப்பினரைச் சபாநாயகராகப் பாராளுமன்றத்தின் அக்கிராசனத்தில் அமரும்படி பிரேரித்தலும் வேண்டும். முன்மொழிவானது வழிமொழியப்படுதல் வேண்டும்; ஆனால் விவாதமெதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.

(இ) சபாநாயகராக ஓர் உறுப்பினர் மட்டுமே அவ்வாறு முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டால், அத்தகைய உறுப்பினர், வினாவின்றியே சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனச் செயலாளர் நாயகத்தினால் பிரகடனப்படுத்தப்படுதல் வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டால், ஐந்து நிமிடங்களிற்கு வாக்கழைப்பு மணி அடிக்கப்பட்ட பின்னர், பாராளுமன்றம் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் ஒரு சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கு முற்படுதல் வேண்டும்.

(ஈ) வாக்கெடுப்பொன்றின் நோக்கத்திற்காகச் செயலாளர் நாயகம், சமுகமளித்துள்ள ஒவ்வோர் உறுப்பினருக்கும் வாக்குச்சீட்டுப் பத்திரமொன்றைக் கொடுத்தல் வேண்டும். அதில், அத்தகைய ஒவ்வோர் உறுப்பினரும், அத்தகைய உறுப்பினர் எவ்வுறுப்பினரின் சார்பாக வாக்களிப்பதற்கு விரும்புகின்றாரோ அவ்வுறுப்பினரின் பெயரை எழுதி, எழுதப்பட்ட பெயர் தெரியாதவகையில் வாக்குச்சீட்டுப் பத்திரங்கள் மடிக்கப்படுதலும் வாக்களிக்கின்ற உறுப்பினரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(உ) செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் வாக்குச்சீட்டுப் பத்திரங்கள் செயலாளர் நாயகத்தினால் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தின் சபாபீடத்தில் வைத்து செயலாளர் நாயகத்தினால் எண்ணப்படுதலும் வேண்டும். வாக்கெடுப்பின் பெறுபேறுகள் செயலாளர் நாயகத்தினால் பிரகடனப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஊ) (i) இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் முன்மொழியப்பட்டு, முதலாவது வாக்கெடுப்பில், ஏனைய வேட்பாளர்களினால் பெறப்பட்ட கூட்டுமொத்த வாக்குகளிலும் பார்க்க அதிகமான வாக்குகளை வேட்பாளரெவரும் பெறாத சந்தர்ப்பத்தில், குறைந்தபட்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்றுள்ள வேட்பாளர் தேர்தலிலிருந்து விலக்கப்பட்டு விடயத்துக்கேற்ப ஒரு வேட்பாளர் எஞ்சியுள்ள வேட்பாளரின் வாக்குகளைப் பார்க்க அல்லது எஞ்சியுள்ள வேட்பாளர்களின் கூட்டுமொத்த வாக்குகளைப்பார்க்க அதிகமான வாக்குகளைப் பெறும்வரை, ஒவ்வொரு வாக்கெடுப்பிலும் மிகக்குறைந்த எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளர் விலக்கப்படுவதுடன் வாக்கெடுப்பானது புதிதாக மேற்கொண்டு நடாத்தப்படுதலும் வேண்டும்.

(ii) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு இடையிலான ஏதேனும் வாக்கெடுப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சம எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்று அவர்களுள் ஒருவர் (i) ஆம் உட்பந்தியின் கீழ் தேர்தலிலிருந்து விலக்கப்பட வேண்டியவராகவிருக்கும் சந்தர்ப்பத்தில், எவ்வேட்பாளர்களுக்கிடையே வாக்குகள் சமமாகவுள்ளனவோ அவ்வேட்பாளர்களுக்கிடையே எவர் விலக்கப்பட வேண்டியவர் என்பது செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(iii) இரு வேட்பாளர்களிடையேயான ஏதேனும் வாக்கெடுப்பில் வாக்குகள் சமமாகவுள்ள சந்தர்ப்பத்தில், இன்னொரு வாக்கெடுப்பு நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வாக்கெடுப்பின் முடிவிலும் வாக்குகள் சமமாகவிருக்குமானால், அவ்வேட்பாளர்களுள் எவர் விலக்கப்படவேண்டுமென்பது செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(எ) வாக்குச்சீட்டுப் பத்திரங்கள் எண்ணப்பட்டதும் அவை ஒரு பெட்டியில் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், உறுப்பினரொருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனப் பிரகடனப்படுத்தப்பட்டதும், அப்பெட்டியானது பாராளுமன்றத்தின் முன்னிலையில் முத்திரையிடப்பட்டு, ஒரு பஞ்சாங்க மாதத்திற்குச் செயலாளர் நாயகத்தின் பாதுகாப்பில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். பின்னர், பாராளுமன்றத்திடமிருந்து பெறக்கூடிய ஏதேனும் பணிப்பிற்கமைய செயலாளர் நாயகம் வாக்குச்சீட்டுப் பத்திரங்களை அழித்துவிட்டு அதனைப் பாராளுமன்றத்திற்குச் சான்றுப்படுத்துதலும் வேண்டும்.

## பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை

**5.** (1) தாம் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொண்டதன் பின்னர் சபாநாயகர் அங்கு சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொள்வதற்கும் கையொப்பமிடுவதற்கும் வகைசெய்தல்

வேண்டும். செயலாளர் நாயகத்தினால் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்து வைக்கப்படுதல் வேண்டும்.

(2) பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொண்டதன் பின்னர் உடனடியாகச் சபாநாயகர் முதலாக ஒவ்வோர் உறுப்பினரும் செயலாளர் நாயகத்தினால் அதற்கென வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

(3) ஏற்கனவே பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொள்ளாத ஓர் உறுப்பினர் பாராளுமன்றம் கூடுகின்ற எத்தினத்திலாவது செயலாளர் நாயகத்துக்கு அறிவித்ததன்மேல், சபாபீடத்தில் சமுகமளிக்கலாம் என்பதுடன் 22 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட நேரத்தில் அவருக்கு பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துவைக்கப்படுதலும் வேண்டும்; அதன்பின்னர் அவர் புத்தகத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

## பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் தேர்வு

**6.** (1) 1 ஆம் நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின்போது அல்லது பிரதிச் சபாநாயகர் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளர் பதவியில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டதன் பின்னர் நிகழும் முதலாவது கூட்டத்தின் பொது அலுவல் ஆரம்பத்தின்போது, சந்தர்ப்பத்திற்கமைய, பிரதிச் சபாநாயகரொருவரை அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளரொருவரைத் தேர்வு செய்வதற்குப் பாராளுமன்றம் முற்படும்.

(2) பிரதிச் சபாநாயகரதும், குழுக்களின் பிரதித் தவிசாளரதும் தேர்வு முறை, தேர்வைச் சபாநாயகர் நடாத்துவதைத் தவிர மற்றெல்லா விதத்திலும், கூடுமானவரை சபாநாயகரைத் தேர்வு செய்யும் முறைமையை ஒத்திருத்தல் வேண்டும்.

## சனாதிபதியொருவரின் தேர்வு

**7.** (இதனகத்துப் பின்னர் "அரசியலமைப்பு" என குறிப்பிடப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 40(1)(ஆ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியொருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் பாராளுமன்றமானது வாக்குச்சீட்டுப் பத்திரங்களைப் பயன்படுத்தி இரகசிய வாக்கெடுப்பை நடாத்துவதற்கு 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

## பாராளுமன்றத்தின் கூட்டங்கள்

***8.** [(1) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் தொடங்குகின்ற வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக மாதந்தோறும் முதலாவதும் மூன்றாவதுமான வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் கூடுதல் வேண்டும்.

---

* 2022 ஒக்டோபர் ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த 05 பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகபதிலீடு செய்யப்பட்டது

(2) பாராளுமன்ற அமர்வு மு.ப. 9.30 மணிக்கும் ஆரம்பமாகும்:

ஆயினும், சனாதிபதியினால் அழைக்கப்பட்ட கூட்டமொன்று, சனாதிபதியால் கூட்ட முன்னறிவித்தல் கொடுக்கும்போது நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய நேரத்தில் ஆரம்பிக்கப்படும்.

(3) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, பாராளுமன்ற கூட்ட தினங்களில் பி.ப. 12.30 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் ஏதேனும் அலுவல் மீதான நடவடிக்கைகள் வினாவின்றி இடைநிறுத்தப்பட்டு, பி.ப. 1.00 மணிக்கு மீளத் தொடங்கப்படும்.

(4) சபாநாயகரால், பி.ப. 5.30 மணிக்கு வினாவின்றிப் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படல் வேண்டும்.

(5) பி.ப. 5.00 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் எவ்வலுவலின் மீதிலுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வேளையில் பாராளுமன்றம் குழுநிலையிலிருந்தால், தலைமைதாங்கும் உறுப்பினர் அக்கிராசனத்தை விட்டகன்று பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தையோ விவாதத்தையோ ஒத்திவைப்பதற்காக அல்லது குழுநிலையில் தலைமைதாங்கும் உறுப்பினர் முன்னேற்றத்தை அறிவிக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது அவர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டுமென்பதற்காகவோ பிரேரணையொன்று பிரேரிக்கப்பட்டால், அத்தகைய தடங்கற் பிரேரணை ஒவ்வொன்றும் வினாவின்றியே வலுவற்றதாதலும் வேண்டும்:

ஆயினும், அலுவலை இடைநிறுத்தும்போது எப்பொழுதும் 46 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் விவாதம் முடிவுறுதல் பிரேரிக்கப்படலாம். அவ்வாறு பிரேரிக்கப்பட்டால் அல்லது அந்நிலையியற் கட்டளையின் கீழ் நடவடிக்கைகள் நிகழ்ந்துகொண்டிருந்தால், அந்நடவடிக்கைகளின் விளைவான விடயமும் அதே நிலையியற் கட்டளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறெந்தப் பிரேரணையினதும் விடயமும் தீர்வு காணப்படும்வரை சபாநாயகரோ தலைமைதாங்கும் உறுப்பினரோ அக்கிராசனத்தை விட்டகலலாகாது.

(6) பரிசீலனையிலிருக்கும் அலுவல் பி.ப. 5.00 மணிக்கு முடிவாக்கப்பட்ட பின்னர் உறுப்பினரொருவர் எதிர்ப்புத் தெரிவிக்கும் அலுவலெதுவும் பரிசீலனைக்குட்படுத்தப் படுதலாகாது.

(7) இந்நிலையியற் கட்டளையின் (4) மற்றும் (5) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் சபை அலுவலை முடிவுறுத்தும் நோக்கத்துக்காக அமைச்சரவையின் அமைச்சரொருவரினால் முன்னறிவித்தலின்றி மேற்கொள்ளப்பட்ட பிரேரணை சமுகமளித்திருக்கும் பெரும்பாலான உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படின், பாராளுமன்றத்தினால் அமர்வு நேரம் நீடிக்கப்படலாம்.]

*****9.** [பொது அலுவல்கள் ஆரம்பத்தின்போது அமைச்சரவையின் அமைச்சரொருவரினால் திருத்தம் அல்லது விவாதமின்றி குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அலுவல்கள் மீதான நடவடிக்கைகள் குறிப்பிட்ட தினமொன்றின் அமர்வில் 8 ஆம் நிலையியற் கட்டளை ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்ற பிரேரணையொன்றை மேற்கொள்ளலாம் என்பதுடன் அத்தகைய பிரேரணை ஏற்றுக்கொள்ளப்படின், அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அலுவலானது, அலுவலை இடைநிறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அது கலந்துரையாடலின்கீழ் இருப்பின் இடைநிறுத்தப்படுதலுமாகாது; அத்துடன் அது எதிர்க்கப்பட்டபோதிலும் எந்நேரத்திலும் அவ்வலுவல் எடுக்கப்படலாம்.

ஆயினும், 8 ஆம் நிலையியற் கட்டளையின் செயற்பாட்டிலிருந்து விலக்குப்பெற்ற அலுவல்கள் பி.ப. 5.00 மணிக்குப் பின்னர் முடிவுறும்போது, விலக்குப்பெற்ற அலுவல்கள் இறுதி விடயம் முடிவுற்றதும் சபாநாயகர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை உடனடியாக ஒத்திவைத்தல் வேண்டும்.]

## செயலாளர் நாயகத்தின் கடமைகள்

**10.** (1) பாராளுமன்றத்தினதும் முழுப் பாராளுமன்றக் குழுக்களினதும் நடவடிக்கைகளைச் செயலாளர் நாயகம் அறிக்கைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். சமுகமளித்த உறுப்பினரின் பெயர்களும் பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட எல்லா முடிவுகளும் இக்கூட்ட அறிக்கையில் பதிவாகியிருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்திலோ அல்லது முழுப் பாராளுமன்றக் குழுவிலோ வாக்கெடுப்புகள் நிகழும் சந்தர்ப்பங்களில் பிரேரணைக்குச் சார்பாகவும் எதிராகவும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையும் 47 (2) (ஆ) மற்றும் (இ) ஆம் நிலையியற் கட்டளைகளின் கீழ் வாக்கெடுப்பு நிகழ்ந்தால், அவ்வாறு வாக்களிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பெயர்களும் வாக்கெடுப்பினின்றும் விலகி நிற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பெயர்களும் கூட்ட அறிக்கையில் இடம்பெறல் வேண்டும். கூட்ட அறிக்கை உறுதிப்படுத்தப்படத் தேவையில்லை. ஆனால் அறிக்கையில் பிழைகளிருப்பின், பாராளுமன்றத்தின் அனுமதியுடன் பிரேரிக்கப்படும் பிரேரணை மூலம் அவை திருத்தப்படலாம்.

(3) செயலாளர் நாயகம் நாளிற்கு நாள் ஒழுங்குப் புத்தகமொன்றினைத் தயாரித்து பாராளுமன்றச் சபாபீடத்திலும் நூல் நிலையத்திலும் வைத்தல் வேண்டும். இவ்வொழுங்குப் புத்தகத்தில் எதிர்வரும் எந்தவொரு தினத்திற்குமென நியமிக்கப்பட்ட எல்லா அலுவல்களும் குறித்த அல்லது குறிக்காத ஓர் எதிர்வரும் தினத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட வினாக்களின் அல்லது பிரேரணைகளின் முன்னறிவித்தல்களும் இடம்பெற்றிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு தினத்திற்கென அலுவல்கள் ஒழுங்குப் புத்தகத்தில் நிர்ணயிக்கப்படலாம் என்பதுடன் அது தொடர்பாகக் குறிப்பிடப்படுதலும் வேண்டும்.

---

* 2022 ஒக்டோபர் ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த 05 பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகபதிலீடு செய்யப்பட்டது.

(4) பாராளுமன்றத்தின் முன் இடப்பட்ட கூட்ட அறிக்கைகள், பதிவேடுகள், சட்டமூலங்கள் ஏனைய ஆவணங்கள் அனைத்தினதும் பாதுகாப்பிற்கு செயலாளர் நாயகம் பொறுப்பாவார். சபாநாயகர் அனுமதிக்கும் ஒழுங்கு முறைகளிற்கேற்ப பாராளுமன்ற உறுப்பினரும் மற்றையோரும் இவற்றைப் பரிசீலனை செய்வதற்கு வசதியளித்தல் வேண்டும்.

(5) செயலாளர் நாயகம், குழுக்களிற்கான நிருவாக மற்றும் வள ஆதரவை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

## கூட்டநடப்பெண்

**11.** அரசியலமைப்பின் 73 ஆம் உறுப்புரையின்படி பாராளுமன்றத்தின் கூட்டநடப்பெண் தலைமைதாங்கும் உறுப்பினர் உட்பட இருபது உறுப்பினர்களாகும். எந்நேரத்திலாவது கூட்டநடப்பெண் இல்லை என்பது சபாநாயகரினதோ அல்லது தலைமைதாங்கும் உறுப்பினரதோ கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அவர் வாக்கழைப்பு மணி அடிக்கக் கட்டளையிடுவார் என்பதுடன் ஐந்து நிமிடங்களின் முடிவில் கூட்டநடப்பெண் காணப்படாதபோது சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல் வேண்டும்.

**12.** முழுப் பாராளுமன்றக் குழுவிற்குரிய கூட்டநடப்பெண் இருபதாகும். முழுப் பாராளுமன்றக் குழுவில் கூட்டநடப்பெண் இல்லையென்பது அவதானிக்கப்பட்டால் தவிசாளர் 11 ஆம் நிலையியற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு நடவடிக்கை மேற்கொள்வார். கூட்டநடப்பெண் காணப்படாதபோது அவர் அக்கிராசனத்தை விட்டகன்று, பாராளுமன்றம் மீண்டும் கூடியதும், உடனடியாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணப்படுவர். அப்போதும் கூட்டநடப்பெண் இல்லாதிருந்தால் 11 ஆம் நிலையியற் கட்டளையில் விதிக்கப்பட்டுள்ளவாறு பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுதல் வேண்டும். ஆனால், கூட்டநடப்பெண் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டால் பாராளுமன்றம் உடனே குழுநிலைக்கு மாறும்.

## பாராளுமன்ற நடவடிக்கைகள்

**13.** பாராளுமன்ற அலுவல்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படும் ஒவ்வோர் உரையும் உரையாற்றப்படும் மொழியிலேயே பாராளுமன்ற விவாதங்களைப் பதிவு செய்யும் அதிகார அறிக்கையில் (இதனகத்துப் பின்னர் "ஹன்சாட்" என குறிப்பிடப்படும்) பதிவு செய்யப்படும். ஏதேனும் உரை நிகழ்த்தப்படும் மொழியைப் புரிந்துகொள்ள முடியாத உறுப்பினர்களுக்குத் தகுந்த ஏற்பாடுளைச் செய்தல் சபாநாயகரின் கடமையாகும்.

அவ்வேற்பாடுகளில் அடங்கவேண்டியவை,–

(அ) ஒழுங்குப் பத்திரம் சிங்களத்திலும், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படுதல்;

(ஆ) உரைகளையும் மற்றும் நிகழ்ச்சிகளையும் மற்றைய இரு மொழிகளிலும் சமகாலத்தில் உரைபெயர்த்தல்;

(இ) பாராளுமன்ற விவாதங்களைப் பதிவுசெய்யும் அதிகார அறிக்கையின் முகப்புப் பக்கம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்படுதல்;

(ஈ) உரைகள் அவை நிகழ்த்தப்படும் மொழிகளிலேயே ஹன்சாட் அறிக்கையில் பதிவு செய்யப்படுவதுடன், உரை நிகழ்த்துபவரின் பெயர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பதிவு செய்யப்படுதல்.

**14.** (1) சபை நடவடிக்கைகள், காலத்திற்குக்காலம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விதிகளிற்கும் நிபந்தனைகளிற்கும் அமைவாக, வானொலி, தொலைக்காட்சி அல்லது வேறேதேனும் இலத்திரனியல் வழிவகைகள் அல்லது சாதனங்கள் மூலமாக ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு செய்யப்படலாம்.

(2) சபை நடவடிக்கைகளினது ஏதேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பானது, பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றவாறான அத்தகைய நியாயமான தராதரங்களைப் பேணுதல் வேண்டும்.

(3) சம்பந்தப்பட்ட குழுக்களும் பாராளுமன்றமும் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக்கூடிய விதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு இணங்க, குழுக்களினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நேரங்களில் குழுக்களின் நடவடிக்கைகள் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புச் செய்யப்படல் வேண்டும்:

ஆயினும், வழங்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் குழுவின் நடவடிக்கைகளின் நேரடி ஒலிபரப்பை அல்லது ஒளிபரப்பை அனுமதிப்பதா, மட்டுப்படுத்துவதா அல்லது கட்டுப்படுத்துவதா என்பது பற்றி முடிவு செய்வதற்கு, நிலைமைக்கேற்ப, சபாநாயகர் அல்லது உரிய குழுவின் தவிசாளர் தமது தற்றுணிபைப் பிரயோகிக்கலாம்.

## ஒத்திவைப்பு

**15.** முன்னறிவித்தலின் பின் பிரேரிக்கப்படும் பிரேரணையின் மூலம் வேறொரு குறிப்பிட்ட தினத்திற்குப் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும்படி பாராளுமன்றம் கட்டளையிட்டாலொழிய பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பு என்பது அடுத்துவரும் சாதாரண அமர்வு தினம் வரை எனப் பொருள்படும். காலவரையறையின்றி ஒத்திவைக்கக்கோரும் பிரேரணை அனுமதிக்கப்பட மாட்டாது.

**16.** நாற்பத்தெட்டு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட ஓர் ஒத்திவைப்புக் காலத்தில், பிரதம அமைச்சர் கோரினால் அக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டதும் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட தினத்திற்கு முன்னதுமான ஒரு தினத்தில், பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்குச் சபாநாயகர் அறிவித்தல் விடுப்பார். அதனையடுத்து சபாநாயகரின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தினத்திலும் நேரத்திலும் பாராளுமன்றம் கூடி, முறைப்படி அந்தத் தினமும் நேரமும் வரையுமே பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது போல் கருதி அன்றைய அலுவல்களைக் கவனிக்கும். சபாநாயகர் இத்தகைய ஓர் அறிவித்தலை விடுக்கும்போது பாராளுமன்றம் கூட்டப்படும் தினத்தையும் நேரத்தையும் உறுப்பினர்களுக்கு அறியத்தருவதற்கான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

## தடங்கற் பிரேரணைகள்

**17.** ஒரு விவாதத்தையோ ஒரு விவாதத்தின்போது பாராளுமன்றத்தையோ ஒத்திவைக்குமாறு அல்லது முழுப் பாராளுமன்றக் குழுநிலையிலாயின், குழுநிலையில் ஏற்பட்ட "முன்னேற்றம் பற்றித் தவிசாளர் அறிவிக்க வேண்டுமென்றோ" அல்லது "அவர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டுமென்றோ" ஒரு பிரேரணை பிரேரிக்கப்பட்டால் அது பற்றிய விவாதம் அத்தகைய பிரேரணையுடன் தொடர்புள்ள விடயத்திற்குட்பட்டதாகவே இருத்தல் வேண்டும். ஒரு விவாதத்தின்போது அத்தகைய பிரேரணையொன்றைப் பிரேரித்த அல்லது வழிமொழிந்த உறுப்பினரொருவர் மீண்டும் ஒருமுறை அதே விவாதத்தில் அத்தகைய பிரேரணையொன்றைப் பிரேரிக்கவோ வழிமொழியவோ அருகதையற்றவராவார்.

**18.** ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அவ் விவாதத்தினை அல்லது பாராளுமன்றத்தை ஒத்திவைக்கவேண்டுமென்றோ அல்லது முழுப் பாராளுமன்றக் குழுநிலையிலாயின் குழுநிலையில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றித் தவிசாளர் அறிவிக்க வேண்டுமென்றோ அல்லது அவர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டுமென்றோ பிரேரிக்கப்பட்ட பிரேரணையொன்று பாராளுமன்றத்தின் விதிகளைத் துஷ்பிரயோகம் செய்வதாயுள்ளதென்று சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் அல்லது முழுப் பாராளுமன்றக் குழுத் தவிசாளர் கருதும்போது அவர் உடனடியாகவே அக்கிராசனத்திலிருந்து அப்பிரேரணையை பாராளுமன்றத்திற்கு விடலாம்; அல்லது அப்பிரேரணையை பாராளுமன்றத்திற்கு எடுத்தியம்பாமலிருக்கலாம்.

## அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மீதான ஒத்திவைப்பு

*__19.__ [(1) கேள்விகளின் இறுதியில் உறுப்பினரொருவர் தமது இருக்கையிலிருந்து எழுந்து நின்று திட்டவட்டமான அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றை எடுத்துரைத்து, அவ்வலுவலை விவாதிப்பதற்காகப் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் பிரேரணையைப் பிரேரிக்க அனுமதி கேட்கும் சந்தர்ப்பத்தில் தவிர, பொது அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்படும் வரை அமைச்சரவை அமைச்சரொருவராலன்றி, உறுப்பினர் ஒருவரினால் பாராளுமன்ற ஒத்திவைப்பிற்கான பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்க முடியாது.

(2) உறுப்பினரொருவரால் 1 ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் அத்தகைய பிரேரணையொன்றைப் பின்வரும் சந்தர்ப்பங்களிலன்றிப் பிரேரிக்க இயலாது:-

(அ) சம்பந்தப்பட்ட பிரேரணையைப் பிரேரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தினத்தன்று அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் அப்பிரேரணை பற்றிச் சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவித்து அவரது இணக்கத்தைப் பெற்றிருத்தல்; அத்துடன்

(ஆ) உரிய உறுப்பினரால் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருத்தல்; அல்லது

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

(இ) பாராளுமன்றத்தின் அனுமதி வழங்கப்படாதவிடத்து இருபதுக்குக் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றால்:

ஆயினும், சபாநாயகர் இணங்க மறுக்குமிடத்து அல்லது விவாதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரேரணை ஒழுங்கற்றதென அபிப்பிராயப்படுமிடத்து அவர் அப்பிரேரணை பற்றிய முன்னறிவித்தலை அல்லது சபாநாயகரால் அனுமதிக்கப்பட்டவாறு அதன் ஒரு பகுதியை வாசிப்பதற்கு அனுமதி வழங்கி அதன் பின்னர் சபாநாயகர் அதற்கு இணங்க மறுத்தமைக்கான அல்லது ஒழுங்கற்றதென அபிப்பிராயப்பட்டமைக்கான காரணத்தைக் கூறுதலும் வேண்டும்.

(3) பிரேரணை அவ்வாறு ஆதரிக்கப்பட்டால் அல்லது பாராளுமன்றம் அனுமதி வழங்கினால் அப்பிரேரணை தொடர்பாக பி.ப. 3.30 மணிக்கு பாராளுமன்றத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(4) எந்தவொரு தினத்திலும் ஒன்றிற்கு மேற்பட்ட அத்தகைய பிரேரணைகளிற்கு அனுமதி கோரலாகாது.

(5) அரசாங்க அலுவல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் தினங்களில், இந்நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின்கீழ் முன்வைக்கப்படும் பிரேரணையைத் தவிர பாராளுமன்றத்தினை ஒத்திவைப்பதற்கான அத்தகைய பிரேரணையெதுவும் அமைச்சரவையின் அமைச்சரொருவராலன்றி அத்தினத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களுக்கிடையே பி.ப. 5.00 மணிக்கு முன்னர் பிரேரிக்கப்பட இயலாது.]

## ஒத்திவைப்பு வேளையில் பிரேரணைகள் அல்லது கேள்விகள்

**20.** பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு ஓர் ஒத்திவைப்புப் பிரேரணையை அல்லது ஒத்திவைப்புக் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்துள்ள தினத்தில், இந்நோக்கத்திற்காக, பிரதான அலுவல்கள் முடிவுற்ற பின்னர் ஒரு மணித்தியாலயத்திற்கு மேற்படாத நேரம் பின்வரும் விதிகளிற்கமைய ஒதுக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஒத்திவைப்புப் பிரேரணை அல்லது கேள்விகள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களிற்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ஒரு பிரேரணை அல்லது கேள்வி ஏதேனும் நிலையியற் கட்டளையை மீறுகின்றது அல்லது அத்தகைய பிரேரணையை அல்லது கேள்வியை முன்மொழிவது ஓர் உறுப்பினரின் உரிமையைத் துஷ்பிரயோகம் செய்கிறது எனச் சபாநாயகர் அபிப்பிராயப்பட்டால், அத்தகைய பிரேரணைக்கு அல்லது கேள்விக்கு அனுமதி மறுப்பதற்கு அவர் தத்துவமுடையவராதல் வேண்டும்;

(இ) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான விவாதத்தின்போது ஒத்திவைப்புப் பிரேரணைக்காக அல்லது ஒத்திவைப்புக் கேள்விகளிற்காகக் குறித்தொதுக்கப்படும் நேரம், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு குறைக்கப்படலாம்; மற்றும்

(ஈ) பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் ஒத்திவைப்புப் பிரேரணைகளை அல்லது கேள்விகளை ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பான நடவடிக்கைமுறை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

## புறத்தோர்

**21.** (1) சபாநாயகரினால் இதற்கென வகுக்கப்படும் விதிகளிற்கமைய, 'புறத்தோர்' அவர்களுக்கென ஒதுக்கப்படும் இடங்களில் பாராளுமன்றச் சபையில் சமுகமாயிருக்கலாம்.

(2) பாராளுமன்றத்தின் எவ்வமர்வின்போதாவது அல்லது குழுநிலையின் போதாவது புறத்தோர் சமுகமளித்துள்ளனரென எவரேனும் உறுப்பினர் குறிப்பிட்டால் சந்தர்ப்பத்திற்கமைய, சபாநாயகர் அல்லது தவிசாளர், ”புறத்தோர் விட்டகலுமாறு கட்டளையிடுவதாகுக” எனும் கேள்வியை விவாதம் அல்லது திருத்தத்திற்கு அனுமதியாது உடனடியாக விடுத்தல் வேண்டும்.

(3) அவ்வாறு குறிப்பிடாதபோதிலும், சபாநாயகர் அல்லது தவிசாளர் தாம் உகந்ததெனக் கருதும் எவ்வேளையிலும் பாராளுமன்றச் சபையின் எப்பகுதியிலிருந்தும் புறத்தோர் வெளியேறவேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(4) அரசியலமைப்பின் 77 ஆம் உறுப்புரையின்கீழ் பாராளுமன்றத்தில் கடமைகளை மேற்கொண்டிருக்கும் சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி புறத்தோர் எனக் கருதப்படமாட்டார்.

(5) சபாநாயகர், எந்தவொரு செய்தி ஊடகத்தின் பிரதிநிதிக்கோ அல்லது பிரதிநிதிகளுக்கோ பாராளுமன்றம் அமரும் நாட்களில் சமுகமளிப்பதற்குப் பொது அனுமதியொன்றை வழங்கலாம். சபாநாயகரது கருத்துப்படி அச்செய்தி ஊடகம் நேர்மையற்ற அறிக்கையை வெளியிட்டால் அல்லது பாராளுமன்றச் சபைக்கு அவமரியாதையை ஏற்படுத்தினால் அத்தகைய அனுமதியை இரத்துச்செய்யலாம்.

## பாராளுமன்ற அலுவல்கள்

**22.** பாராளுமன்றத்தின் அலுவல்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் நடாத்தப்படுதல் வேண்டும்:-

(1) புதிய உறுப்பினர்களின் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை;

(2) சனாதிபதியின் செய்திகள்;

(3) சபாநாயகரின் அறிவித்தல்கள்;

(4) பத்திரங்கள் சமர்ப்பித்தல்;

(5) குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்;

(6) பொது மனுக்கள் சமர்ப்பித்தல்;

(7) வாய்மூல விடைக்கான வினாக்கள்;

(8) சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணைகள்;

(9) அமைச்சு சம்பந்தப்பட்ட கூற்றுக்கள்;

(10) தனிப்பட்ட விளக்கங்கள்;

(11) சிறப்புரிமை கேள்விகள்;

(12) முன்னறிவித்தல் தேவைப்படாத பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான பிரேரணைகள்;

(13) முன்னறிவித்தல் தேவைப்படுகின்ற பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான பிரேரணைகள்;

(14) அனுதாபப் பிரேரணைகள்;

(15) பொது அலுவல்கள்.

## பொது அலுவல்கள்

**23.** (1) பொது அலுவல்கள், தினப் பணிகளையும் பிரேரணைகளின் முன்னறிவித்தல்களையும் கொண்டிருக்கும்.

(2) குறித்த ஒரு தினத்தில் பரிசீலனைக்கு எடுப்பதற்குப் பாராளுமன்றம் பணித்த ஒரு சட்டமூலம், ஒழுங்குவிதி, தீர்மானம் அல்லது வேறு ஏதேனும் விடயம் தினப் பணி ஆகும். அவ்வாறு நியமிக்கப்பட்ட தினத்திற்கு முன்னைய தினமொன்று பதிலீடு செய்யப்படலாகாது.

(3) ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு நாளிலும் அரசாங்க அலுவல்கள் முன்னீடடைதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வின்போது "இன்று அரசாங்க அலுவல்கள் முன்னீடடையுமாக" என்றோ "இன்று அரசாங்க அலுவல்களில் குறிப்பிட்ட ஒரு விடயம் முன்னீடடையுமாக" என்றோ பொது அலுவல்கள் ஆரம்பத்தின்போது திருத்தமோ விவாதமோ இன்றித் தீர்மானிப்பதற்கான பிரேரணையொன்றை அமைச்சரவையின் அமைச்சரொருவர் முன்னறிவித்தலின்றிப் பிரேரிக்கலாம். அப்பிரேரணை நிறைவேறினால், அரசாங்க அலுவல் அல்லது அலுவலின் குறிப்பிட்ட ஒரு விடயம் முன்னீடடைதல் வேண்டும்.

(5) அரசாங்க அலுவல்கள், அரசாங்கம் உகந்ததெனக் கருதும் ஒழுங்குமுறையில் வகுக்கப்படுதல் வேண்டும்.

## தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள்

**24.** (1) பாராளுமன்றம் பிறவாறு பணித்தாலன்றி ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வுகளில் தனியார் உறுப்பினர்களின் அலுவல்கள் அரசாங்க அலுவல்களின் மீது முன்னீடடைதல் வேண்டுமென்பதுடன், பிரேரணைகள் பற்றிய அறிவித்தல்கள் தினப்பணிகளின் மீது முன்னீடடைதல் வேண்டும்.

(2) தனியார் உறுப்பினர் பிரேரணை முன்னறிவித்தலைக் கொடுக்கும் ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட ஒரு தனியார் உறுப்பினர்களின் தினத்திற்கு அந்தப் பிரேரணை ஒதுக்கப்பட வேண்டுமென்ற அவரது விருப்பத்தைத் தெரிவித்தாலன்றி, எல்லாத் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகளும் அடுத்துவரும் தனியார்

உறுப்பினர்கள் தினத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும். அத்தகைய ஏதேனும் பிரேரணை, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் எடுக்கப்பட்ட ஏதேனும் முடிவிற்கமைய, அது ஒழுங்குப் பத்திரத்தில் எந்த ஒழுங்குமுறையில் காணப்படுகின்றதோ அந்த ஒழுங்குமுறையில் பரிசீலனைக்கு எடுக்கப்படுதல் வேண்டும். தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் காலவரிசை ஒழுங்குமுறையில் பரிசீலனைக்கு ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், குறிப்பிட்ட ஏதேனும் நேரத்தில் எவரேனும் உறுப்பினரினால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திற்கு மேற்பட்ட பிரேரணைகள், ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படுதலாகாது.

(3) “தனியார் உறுப்பினர்” என்பது, சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பிரதம அமைச்சர், அமைச்சரவையின் அமைச்சர்கள், அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகிய பதவிகளை வகிக்கின்ற உறுப்பினரொருவரை உள்ளடக்காது.

**25**. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும்போது எஞ்சிநிற்கும் எல்லாத் தினப் பணிகளையும் அடுத்த அமர்வுதினம் வரை அதற்கான ஒரு பிரேரணை இன்றியே பிற்போடல் வேண்டும். பரிசீலனைக்கு எடுக்கப்படாத எல்லா பிரேரணை முன்னறிவித்தல்களும் அம்முன்னறிவித்தல் எவ்வுறுப்பினரது பெயரில் உள்ளதோ அவரின் குறிப்பான அறிவுறுத்தல் இல்லாதபோது ஓர் அமைச்சரவை அமைச்சருடைய அல்லது பிரதி அமைச்சருடைய பெயரில் இருக்குமானால் அடுத்த அமர்வு தினத்திற்கும் தனியார் உறுப்பினரொருவரின் பெயரில் இருக்குமானால் அடுத்த மாதத்தில் பாராளுமன்றம் அமரும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்விற்கும் முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

## பத்திரங்கள்

**26**. (1) சபாநாயகர், அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் மாத்திரமே பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(2) சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் கூட்ட அறிக்கையில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

(3) பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படும்போது அவற்றின் உள்ளடக்கம் பற்றிச் சிறிய விளக்கக் கூற்று அளிக்கப்படலாம். ஆனால் சமர்ப்பிக்கும்போது விவாதமெதுவும் நிகழலாகாது.

(4) சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் சபாபீடத்தில் இடப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுவதுடன் அவற்றை அச்சிடக்கோரும் ஏதேனும் பிரேரணை திருத்தமோ அல்லது விவாதமோ இன்றித் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

## முன்னறிவித்தல்கள்

**27.** (1) கேள்விகள் அல்லது பிரேரணைகள் பற்றிய முன்னறிவித்தல்கள், எழுத்து மூலம் முன்னறிவித்தல் கொடுக்கும் உறுப்பினரால் கையொப்பமிடப்பட்டு செயலாளர் நாயகத்துக்கு முகவரியிட்டுக் கொடுக்கப்படல் வேண்டும். பாராளுமன்றம் அமரும் நாட்களில் எந்நேரத்திலும் அத்தகைய முன்னறிவித்தல்களை செயலாளர் நாயகத்திடம் கொடுக்கலாம்; அல்லது எந்நேரத்திலும் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பலாம்; அல்லது அங்கு கொடுக்கலாம்.

(2) செயலாளர் நாயகத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட எல்லாக் கேள்விகளும் சபாநாயகர் ஒழுங்கற்றதெனத் தீர்ப்பளித்தாலொழிய அத்தகைய அறிவித்தல் கொடுத்த தினத்திலிருந்து ஏழு முழு நாட்களிற்கு முன்னராகவிராத ஒரு தினத்திற்கு விடையளிக்கப்படுவதற்காக ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்:

ஆயினும், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றுடன் தொடர்புள்ள கேள்வியொன்று, உரிய அமைச்சருக்குப் போதுமான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னர் கேள்விகள் முடிவடைந்தவுடன் எதிர்க்கட்சித் தலைவரினாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் தலைவரினாலோ கேட்கப்படலாம்.

(3) செயலாளர் நாயகத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட எல்லாப் பிரேரணைகளும் சபாநாயகர் ஒழுங்கற்றதெனத் தீர்ப்பளித்தாலொழிய, அதனை ஒழுங்குப் புத்தகத்தில் சேர்த்தல் வேண்டும். ஆனால் பாராளுமன்றம் வேறுவகையாக கட்டளையிட்டாலன்றி முன்னறிவித்தல் செய்து ஐந்து முழு நாட்கள் கழியுமுன் அவற்றின்மீது விவாதமெதுவும் நிகழமுடியாது. இப்பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் பொது அலுவல்கள் ஆரம்பத்தின்போது பிரேரிக்கப்படவுள்ள பிரேரணைகளின் முன்னறிவித்தல்கள் முன்னைய அமர்வுநாளில் சபாபீடத்தில் கிடைக்கப்பெற்றிருந்தால் அவை ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் விடயம் பற்றி முன்னறிவித்தல் கொடுத்தல் மீது விவாதம் நிகழலாகாது.

(5) இந்நிலையியற் கட்டளைகளில் வேறுவகையாக ஏற்பாடு செய்தாலொழிய, ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் ஒரு பிரேரணை அல்லது ஒரு தினப்பணி மீது தவிர விவாதமெதுவும் இடம்பெறுதலாகாது.

(6) கேள்வி அல்லது பிரேரணை தொடர்பாக முன்னறிவித்தல் கொடுத்த உறுப்பினர் ஒருவர் செயலாளர் நாயகத்துக்கு எழுத்துமூலம் முன்னறிவித்தல் கொடுத்து அதனை மீளப்பெறலாம்.

(7) அமைச்சு சம்பந்தமான கூற்றொன்று, பிரதம அமைச்சரினால் அல்லது அமைச்சரவையின் அமைச்சரொருவரினால், அவ்வமைச்சருக்கு எந்த விடயம் தொடர்பில் அமைச்சு ரீதியிலான பொறுப்பானது பொறுப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த விடயத்தின்மீது அளிக்கப்படுதல் வேண்டும். ஒரு கூற்றை அவ்வாறு அளிப்பதற்குக்

கருதுகின்ற அமைச்சர் கூற்றின் பிரதியொன்றை முன்கூட்டியே சபாநாயகருக்கு சமர்ப்பித்து அவரின் அங்கீகாரத்தை முதலில் பெறுதல் வேண்டும்.

(8) உறுப்பினரொருவர் சபையில் சமுகமாயிராத சந்தர்ப்பத்தில் இன்னோர் உறுப்பினரினால் சபையில் செய்யப்பட்டுள்ளவொரு குறிப்பீட்டிற்குப் பதிலளிக்கும்போது அவ்வுறுப்பினரின் சொந்த நடத்தையை நிலைநாட்டும் நோக்கத்திற்காக அவ்வுறுப்பினரினால் தனிப்பட்ட விளக்கமொன்று கொடுக்கப்படலாம். அவ்வாறு விளக்கமொன்றை அளிக்கக் கருதுகின்ற எவரேனும் உறுப்பினர், அவ்விளக்கத்தின் பிரதியொன்றை முன்கூட்டியே போதுமான அறிவித்தல் கொடுத்துச் சபாநாயகருக்குச் சமர்ப்பிப்பதுடன் சபாநாயகரின் அங்கீகாரத்தையும் முதலில் பெறுதல் வேண்டும். அவ்வாறு அளிக்கப்படும் விளக்கம் கண்டிப்பாக அவ்வுறுப்பினரின் சொந்த நடத்தையை நிலைநாட்டும் நோக்கத்திற்காக மட்டுமே வரையறுக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

**28.** நிலையியற் கட்டளைகள் பிறவாறு பணித்தாலன்றி, பின்வரும் பிரேரணைகள் தவிர்ந்த வேறு எவையேனும் தொடர்பாகச் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள எப்பிரேரணைக்கும் முன்னறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) முழுப் பாராளுமன்றக் குழுவில் பிரேரிக்கப்படும் பிரேரணை;

(ஆ) பாராளுமன்றத்தை அல்லது ஏதாவது விவாதத்தை ஒத்திவைப்பதற்கான பிரேரணை;

(இ) விசேட குழுவொன்றின் அறிக்கையை முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தவோ அல்லது அச்சிடவோ கோரும் பிரேரணை;

(ஈ) புறத்தோரை வெளியேற்றுவதற்கான பிரேரணை;

(உ) ஓர் உறுப்பினரை பாராளுமன்றச் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைப்பதற்கான பிரேரணை;

(ஊ) ஒரு சிறப்புரிமை விடயத்தையொட்டிய பிரேரணை;

(எ) ஒரு தினத்தில் அலுவலொன்று முடிவாக்கப்பட்டவுடனும் வேறு புதிய விடயங்கள் ஆரம்பிக்கப்படும் முன்னரும் அவ்வலுவலிலிருந்து எழுகின்ற பிரேரணை.

**29.** (1) மற்றெல்லாப் பிரேரணைகள், தினப்பணிகள் ஆகியவற்றிலும் பார்க்கப் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஓர் அவசரப் பிரேரணை முன்னீடடைதல் வேண்டும். வாக்கெடுப்பு நிகழ்ந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர்ந்த வேறு எச்சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை நேரடியாகத் தழுவிய ஒரு விடயம் அண்மையில் தோன்றியிருக்கும்போது சிறப்புரிமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரேரணை மூலம் பாராளுமன்ற நடவடிக்கை இடைமறிக்கப்படலாம்.

(2) சிறப்புரிமை பற்றிய விடயத்தை எழுப்புவதற்குக் கருதுகின்ற எவரேனும் உறுப்பினர் அக்கிராசனத்திற்கு முதலில் அறிவித்தல் கொடுக்க வேண்டுமென்பதுடன், பாராளுன்றத்தின் நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு அக்கிராசனத்திடமிருந்து அனுமதிபெறுதலும் வேண்டும்.

## பொது மனுக்கள்

**30.** (1) பாராளுமன்றத்திற்கான ஒவ்வொரு மனுவும் சபாநாயகருக்கு முகவரியிடப்பட்ட ஒரு மனு வடிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், அது ஓர் உறுப்பினரால் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஒவ்வொரு மனுவும் மதிப்பான வார்த்தைகளில் இருத்தல் வேண்டுமென்பதுடன், பொருத்தமற்ற கூற்றுக்களைக் கொண்டிருத்தலுமாகாது.

(3) ஒவ்வொரு மனுவும் தெளிவாகவும் வாசிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், கோருவதான நிவாரணத்தை எடுத்துரைக்கும் இறைஞ்சுதலுடன் அது முடிவுறுதலும் வேண்டும்.

(4) சுகவீனத்திலான இயலாமை விடயத்தில் தவிர, ஒவ்வொரு மனுவும், மனுதாரரால் அல்லது மனுதாரர்களால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். எழுத இயலாத ஆள் ஒருவர், சாட்சி ஒருவரின் முன்னிலையில் தனது அடையாளத்தை இடுதல் வேண்டும். மனு ஒன்றின் கையொப்பக்காரர் ஒவ்வொருவரினதும் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவை மனுவில் குறிப்பிடப்படுதல் வேண்டும். மனுதாரர் தொலைபேசி இலக்கம் உட்பட வேறேதேனும் தொடர்பு விபரங்களையும் குறிப்பிடலாம்.

(5) ஏதேனும் மனுவுடன் கடிதங்கள், சத்தியக்கடதாசிகள் அல்லது பிற ஆவணங்கள் எவையும் இணைக்கப்படுதல் ஆகாது.

(6) மனுவொன்றில் பாராளுமன்றத்தின் ஏதேனும் விவாதம் பற்றிய குறிப்பீடு இருத்தலாகாது.

(7) உறுப்பினரொருவர் தமது சொந்த மனுவொன்றை முன்வைப்பதற்குத் தகுதிவாய்ந்தவராகவிருத்தலாகாது. ஆனால், அது வேறோர் உறுப்பினரினால் முன்வைக்கப்படலாம்.

(8) ஒவ்வொரு மனுவும் சமர்ப்பிக்கப்படும் முன்னர், அதன் ஆரம்பத்தில் அதற்குப் பொறுப்பாயிருக்கும் உறுப்பினரால் ஒப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன் குறைந்தபட்சம் இரு முழு நாட்களிற்குச் செயலாளர் நாயகத்திடம் இருக்கத்தக்கதாக அதனைச் சமர்ப்பித்தலும் வேண்டும். செயலாளர் நாயகம் அதனை அங்கீகாரத்திற்கெனச் சபாநாயகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டாலன்றி மனு எதுவும் சமர்ப்பிக்கப்படுதலாகாது.

(9) மனு ஒன்றைச் சமர்ப்பிக்கும் உறுப்பினர் பின்வரும் முறையிலான கூற்றொன்றிற்குத் தம்மை வரையறுத்துக்கொள்ள வேண்டுமென்பதுடன், இக்கூற்றின்மீது விவாதம் எதையும் அனுமதித்தலாகாது;

*“சபாநாயகர் அவர்களே!* ................................... (முகவரி) *என்னும் இடத்தைச் சேர்ந்த* ................................... (மனுதாரரின் பெயர்) * *என்பவரிடமிருந்தும்/ ஏனைய* ................................... (மனுதாரரின் எண்ணிக்கை) *ஆட்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற மனு ஒன்றைச் சமர்ப்பிக்கிறேன்.”*

(10) மனு ஒன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

## கேள்விகள்

**31.** இந்நிலையியற் கட்டளைகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட அலுவல்களின்போது, பொது விடயங்கள் தொடர்பான கேள்விகள் பிரதம அமைச்சரிடம் அல்லது சனாதிபதியினால் எவரேனும் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்ட விடயங்களும் பணிகளும் தொடர்பாக அமைச்சு ரீதியிலான பொறுப்பை கொண்டுள்ள அத்தகைய அமைச்சரிடம் கேட்கப்படலாம்.

**32.** (1) வாய்மூல விடையினைக் கோரும் கேள்வியொன்று பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில், ஒழுங்குப் பத்திரத்தில் அக்கேள்விக்குரிய முறை வந்ததும் சபாநாயகர் அக்கேள்விக்குரிய உறுப்பினரின் பெயரை அழைக்க வேண்டும்; அவ்வண்ணம் அழைக்கப்பட்ட உறுப்பினர் தமது இடத்தில் எழுந்து நின்று ஒழுங்குப் பத்திரத்திலுள்ள அக்கேள்வியின் இலக்கத்தைக் குறிப்பிடுவதன்மூலம் கேள்வியினைக் கேட்டல் வேண்டும்; அதன் பின் அக்கேள்விக்குரிய விடை பிரதம அமைச்சரால் அல்லது அக்கேள்வி கேட்கப்படும் அமைச்சரால் அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) உரிய விடயம் தொடர்பான அமைச்சர் அல்லது அவ்வமைச்சர் இல்லாதிருந்தால் அத்தகைய அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட உரிய விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் அக்கேள்விகளிற்கு எந்த நாளன்று விடையளிக்கப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த நாளன்று அத்தகைய கேள்விகளிற்கு வாய்மொழிமூலம் விடையளிப்பதற்குச் சபையில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

(3) குறிப்பிட்டவொரு நாளில் உறுப்பினரொருவரினால் எழுப்பப்பட்ட ஏதேனும் கேள்விக்கு விடையளிப்பதற்குச் சபையில் சமுகமாயிருப்பதற்கு இயலாதவராகவுள்ள அமைச்சரொருவர், சபாநாயகரின் முன்னனுமதியைப் பெறுதல் வேண்டுமென்பதுடன், அக்கேள்விக்கு விடையளிப்பதற்கு அத்தகைய அமைச்சர் செய்துள்ள ஒழுங்கேற்பாடுகளைச் சபாநாயகருக்கு அறிவித்தலும் வேண்டும்.

(4) ஆக்குறைந்தது, மூன்றாவது முறையாக கேள்வியொன்று விடையளிப்பதற்காக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலாவது அக்கேள்விக்கு பதிலளிக்கப்படுதல் வேண்டும்.

(5) கேள்வியொன்றிற்கு எழுத்துமூலம் விடை கோரும்போது பிரதம அமைச்சர் அல்லது அக்கேள்வி கேட்கப்படும் அமைச்சர் அதற்குரிய விடையை ஹன்சாட் அறிக்கையில் மும்மொழிகளிலும் அச்சிடுவதற்கு வகைசெய்தல் வேண்டும்.

**33.** (1) 32 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் அளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் விடையின்மீது எவரேனும் உறுப்பினர் இரண்டிற்கு மேற்படாத குறைநிரப்புக் கேள்விகளைக் கேட்கலாம்:

ஆயினும், அத்தகைய குறைநிரப்புக் கேள்விகள், தொடக்கக் கேள்வியில் உள்ளடக்கப்படாத விடயங்களை அறிமுகப்படுத்தலாகாதென்பதுடன்,

வாய்மொழிமூலமான விடையிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயத்தை மேலும் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக மட்டுமே கேட்கப்படுதலும் வேண்டும்:

ஆயின், மேலும், கேள்விகளின் ஏல்தகைமை பற்றிய விதிகளை ஏதேனும் குறைநிரப்புக் கேள்வி மீறுகின்றதெனச் சபாநாயகர் அபிப்பிராயப்பட்டால், சபாநாயகர் அத்தகைய குறைநிரப்புக் கேள்விக்கு அனுமதி மறுத்தல் வேண்டும்.

(2) குறைநிரப்புக் கேள்விகளையும் அவற்றிற்கான விடைகளையும் எழுப்புவதற்காக அனுமதிக்கப்பட்ட நேரத்தைச் சபாநாயகர் வரையறுக்கலாம்.

**34.** (1) ஒரு கேள்வியின் முறையான நோக்கம், அது விளித்துக் கேட்கப்படும் அமைச்சரின் அறிவிற்குள்ளான நிகழ்வு பற்றிய விடயத்தின்மீது தகவல்களைப் பெற்றுக்கொள்வது அல்லது நடவடிக்கை எடுக்கப்படுவதனைத் தூண்டுதலாதல் வேண்டும்.

(2) கேள்வியொன்றினை விவாதத்திற்குச் சாட்டாக்கிக்கொள்ளக்கூடாது.

**35.** எந்தவொரு தினத்திலும் கேள்விகளிற்கென ஒரு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட நேரம் ஒதுக்கப்படுதலாகாது என்பதுடன், உறுப்பினரொருவரால் எந்தவொரு தினத்திலும் வாய்மொழி மூலமான விடைக்காக இரண்டிற்கு மேற்பட்ட கேள்விகள் கேட்கப்படுதலுமாகாது:

ஆயினும், ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை விவாதத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தினங்களில் கேள்விகளிற்காக முப்பது நிமிடங்களிற்கு மேற்பட்ட நேரம் ஒதுக்கப்படுதலாகாது.

**36.** கேள்விகளைக் கேட்பதற்கான உரிமை, பின்வரும் விதிகளிற்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும்:-

(அ) ஏதேனுமொரு கேள்வியில் ஒரு விடயம் மட்டுமே குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கேள்வியானது நூற்றைம்பது சொற்களிற்கு மேற்படுதலுமாகாது;

(ஆ) கேள்வியை விளங்கிக்கொள்வதற்கு அத்தியாவசியமற்ற ஏதேனும் பெயர் அல்லது கூற்று ஒரு கேள்வியில் குறிப்பிடப்படுதலாகாது;

(இ) கேள்வியொன்று ஒரு கூற்றைக் கொண்டிருப்பின், அதனைக் கேட்கும் உறுப்பினர் அத்தகைய கூற்றின் பிழையின்மைக்கான பொறுப்பையேற்றல் வேண்டும்;

(ஈ) கேள்வியொன்றில் ஏதேனும் வாதம், ஊகம், காரணம் கற்பித்தல், அடைமொழி அல்லது வஞ்சகப்புகழ்ச்சியான சொற்றொடர் இடம்பெறலாகாது;

(உ) குழுவொன்றின் அறிக்கைமூலம் பாராளுமன்றத்திற்கு முன்னிடப்படாத அக்குழு தொடர்பான நடவடிக்கைகள் பற்றிக் கேள்வியொன்று கேட்கப்படலாகாது;

(ஊ) நீதிமன்றமொன்றின் தீர்ப்பிற்குட்பட்டுள்ள அல்லது சட்டமுடிவை எதிர்நோக்கியுள்ள எவ்விடயமும் ஒரு கேள்வியில் இடம்பெறலாகாது;

(ள) கருத்துத் தெரிவிக்கும்படியோ, யதார்த்தமற்ற ஒரு சட்டப் பிரச்சினைக்கு அல்லது ஓர் அனுமான நிலைக்குப் பரிகாரம் கோரியோ கேள்வி கேட்கப்படலாகாது;

(ஏ) தனிப்பட்ட ஒருவரது பொது அல்லது உத்தியோக முறை சம்பந்தப்படாத ஒழுக்கத்தையோ நடத்தையையோ ஒட்டிய கேள்வி கேட்கப்படலாகாது;

(ஐ) ஒரு தன்னிலைப் பிரேரணையினால் மட்டுமே வினாவெழுப்பக்கூடிய எந்தவோர் ஆளினதும் ஒழுக்கத்தை அல்லது நடத்தையைப் பிரதிபலிக்கக் கூடிய கேள்வி கேட்கப்படலாகாது;

(ஒ) ஒருவரின் சொந்த ஒழுக்கம் பற்றி நேரடியாகவோ உள்ளார்த்தமாகவோ குற்றம் சுமத்தும் கேள்வி அனுதிக்கப்படமாட்டாது; மற்றும்

(ஓ) ஏதேனும் அமர்வுத்தொடரில் அதற்கு முழுமையாக விடையளிக்கப்பட்ட ஒரு கேள்வி அதே அமர்வுத்தொடரின்போது மீண்டும் கேட்கப்படுதலாகாது.

**37.** (1) இந்நிலையியற் கட்டளைகளின் கீழ் ஒரு கேள்வியை அனுமதிக்கலாமா இல்லையா என்பதைச் சபாநாயகர் தீர்மானிப்பார். கேள்வி கேட்கும் உரிமையைத் துஷ்பிரேயோகம் செய்வதாயுள்ளதென்றோ பாராளுமன்றத்தின் நடவடிக்கையைத் தடைப்படுத்தும் அல்லது குந்தகமான முறையில் பாதிக்கும் நோக்கம் கொண்டதென்றோ தாம் அபிப்பிராயப்படும் எந்தவொரு கேள்விக்கும் சபாநாயகர் அனுமதி மறுக்கலாம். இந்நிலையியற் கட்டளைகள் எவற்றையாவது மீறும் எந்தவொரு கேள்விக்கும் சபாநாயகர் அனுமதி மறுக்க வேண்டும். சபாநாயகர் ஒரு கேள்விக்கு அனுமதி மறுத்தால் அம்மறுப்பை அதற்குரிய காரணத்தோடு, செயலாளர் நாயகம் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

(2) தகாத சொல்லமைப்புகளைக் கொண்ட அல்லது பாராளுமன்றத்தின் ஏதேனும் நிலையியற் கட்டளைக்கு முரணாகவுள்ள ஏதேனும் அறிவித்தல், அது ஒழுங்குப் புத்தகத்தில் தோன்றும் முன்னர், கேள்வியைக் கேட்கும் உறுப்பினரின் சம்மதத்துடன் சபாநாயகரினால் திருத்தப்படலாம்.

(3) ஒரு கேள்விக்கு நீண்ட விடை தேவையாகவுள்ளதெனச் சபாநாயகர் அபிப்பிராயப்பட்டால், அக்கேள்வியானது வாய்மொழிமூலமான விடைக்கான கேள்வியல்லவெனக் கருதப்பட வேண்டுமென்று பணிக்கலாம் என்பதுடன் அத்தகைய முடிவு செயலாளர் நாயகத்தினால் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

## பிரதம அமைச்சரிடம் கேட்கப்படும் கேள்விகள்

**38.** (1) ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது அமர்வு வாரத்தின் புதன்கிழமையன்று வாய்மொழிமூலமான விடைகளிற்கான கேள்விகளிற்காகக் குறித்தொதுக்கப்பட்ட நேரத்தின்போது, பிரதம அமைச்சரிடமிருந்து நான்கிற்கு மேற்படாத கேள்விகளைக் கேட்பதற்கு முப்பது நிமிடங்கள் ஒதுக்கப்படலாம். முதலாவது புதன்கிழமையன்று பிரதம அமைச்சர் இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு அத்தகைய நோக்கத்திற்காக அதே மாதத்தின்போது பொருத்தமான நாள் பற்றி முடிவுசெய்யலாம்.

(2) இந்நிலையியற் கட்டளையின் கீழ் கேள்வியொன்றைக் கேட்பதற்கு விரும்புகின்ற, அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர், தவிர்ந்த எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் முற்போந்த வாரத்தின் வெள்ளிக்கிழமையன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர், பாராளுமன்றச் சபை முதல்வரினது அலுவலகத்திற்கான பிரதியொன்றுடன் அக்கேள்வியைச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) பிரதம அமைச்சருக்கான கேள்விகள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுட்பட அரசாங்கக் கொள்கைகள் தொடர்பான விடயங்களிற்கு மட்டுமே வரையறுக்கப்படுதல் வேண்டும். விபரமான விடையைத் தேவைப்படுத்துகின்ற அல்லது குறித்தவொரு விடயத்திற்கு வரையறுக்கப்பட்ட ஏதேனும் கேள்வி, பிரதம அமைச்சரின் தற்றுணிபின்பேரில் விடையளிப்பதற்காக உரிய விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.

(4) ஒதுக்கப்பட்ட ஒரு தினத்தில் தலா இரண்டு கேள்விகள் வீதம் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் குறித்தொதுக்கப்படலாம்.

(5) பாராளுமன்ற உறுப்பினரொருவர், கொடுக்கப்பட்ட ஏதேனும் நாளில் ஒரு கேள்வியை மட்டுமே கேட்கலாம் என்பதுடன், அத்தகைய கேள்வி நூற்றைம்பது சொற்களிற்கு மேற்படுதலுமாகாது.

(6) பிரதம அமைச்சருக்கான கேள்விகள், வாதங்களை உள்ளடக்காமலும் அல்லது கருத்துக்களைத் தெரிவிக்காமலும் கேட்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒன்றிற்கு மேற்பட்ட பொதுவான பகிரங்கக் கொள்கைகளுடன் தொடர்புபட்டிருத்தலுமாகாது.

(7) பிரதம அமைச்சர் ஏதேனும் கேள்விக்கு விடையளித்த பின்னர், கேள்வியைக் கேட்ட உறுப்பினர் இரண்டு குறைநிரப்புக் கேள்விகளைக் கேட்கலாம். கேள்வியைக் கேட்கும் உறுப்பினரின் அனுமதியுடன் வேறெவரேனும் பாராளுமன்ற உறுப்பினர், குறைநிரப்புக் கேள்விகளுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கேட்கலாம்:

ஆயினும், குறைநிரப்புக் கேள்விகள் பிரதான கேள்வி அல்லது அதற்காக அளிக்கப்பட்ட விடை தொடர்பான விடயத்திற்குட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

## விவாதத்திற்கான விடயங்கள்

**39.** பொதுமக்களின் நலன் தொடர்பான ஏதேனும் விடயம் பற்றிய ஏதேனும் பிரேரணையைப் பிரேரிப்பதற்கு எவரேனும் உறுப்பினர் தகுதிவாய்ந்தவராயிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிரேரணை இந்நிலையியற் கட்டளைகளிற்கிணங்க விவாதிக்கப்படவோ அல்லது வேறுவகையில் முடிவுறுத்தப்படவோ வேண்டும்.

**40.** (1) இந்நிலையியற் கட்டளைகளின் கீழ் வழிமொழியப்பட வேண்டிய ஒரு பிரேரணை அல்லது திருத்தம் அவ்வாறு வழிமொழியப்படாத சந்தர்ப்பத்தில் வலுவற்றதாதல் வேண்டும்.

(2) தமது பெயரிலிருக்கும் ஒரு பிரேரணையைப் பிரேரிக்கும்படி அழைக்கப்படும்போது ஒரு தனியார் உறுப்பினர் அவ்வாறு பிரேரிக்காதுவிட்டால்

அது காலாவதியாகும்; ஆனால் அவர் எழுத்துமூலம் அதிகாரம் அளித்த இன்னொரு உறுப்பினர் அவருக்காக அப்பிரேரணையைப் பிரேரிக்கலாம்:

ஆயினும், ஒரு தினப்பணிக்குப் பொறுப்பாயுள்ள ஓர் உறுப்பினர் பிறிதோர் தினத்திற்கு அத்தினப் பணியைப் பின்போடவேண்டுமென்ற தமது விருப்பத்தை முன்கூட்டியே செயலாளர் நாயகத்துக்குத் தெரிவித்திருந்தாலன்றி எந்த ஓர் உறுப்பினரும் அத்தினப் பணியைப் பிரேரிக்கலாம்.

**41.** ஒரு பிரேரணையைப் பிரேரித்த ஓர் உறுப்பினர் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் அப்பிரேரணையை மீளப்பெறலாம்.

## எதிர்நோக்கல்

**42.** (1) பரிசீலனைக்குக் குறிக்கப்பட்ட ஒரு சட்டமூலத்தின் அல்லது தினப் பணிப்பின் விடயப் பொருளுடன் தொடர்புடைய ஒரு பிரேரணையைச் சமர்ப்பிப்பதோ அல்லது திருத்தத்தைப் பிரேரிப்பதோ ஒழுங்கற்றதாகும் என்பதுடன் முன்னறிவித்தல் கொடுத்த ஒரு பிரேரணையின் விடயப் பொருளுடன் தொடர்புடையதான ஒரு திருத்தமும் ஒழுங்கற்றதாகும்.

(2) முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு தினப்பணி, பிரேரணை முன்னறிவித்தல் அல்லது திருத்தப் பிரேரணை பாராளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணையின் மீதோ அல்லது வேறேதேனும் விவாதத்தின் மீதோ எதிர்நோக்கப்படலாகாது.

(3) எதிர்நோக்கலின் காரணத்தின்மீது கலந்துரையாடலொன்று ஒழுங்கற்றதா எனத் தீர்மானிக்கும்போது அவ்வாறு எதிர்நோக்கப்பட்ட விடயம் ஒரு குறிப்பிட்ட காலவெல்லைக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டாவென்பதைச் சபாநாயகர் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

## திருத்தங்கள்

**43.** (1) அக்கிராசனத்திலிருந்து பிரேரணையொன்று எடுத்தியம்பப்படும் போது –

(அ) குறித்த சில சொற்களை நீக்கிவிட்டு அவற்றிற்காக குறித்த சில வேறு சொற்களைப் பதிலீடு செய்தல் வேண்டுமென்றோ; அல்லது

(ஆ) குறித்த சில சொற்கள் நீக்கப்பட வேண்டுமென்றோ; அல்லது

(இ) குறித்த சில சொற்கள் புகுத்தப்பட அல்லது சேர்க்கப்பட வேண்டுமென்றோ

அப்பிரேரணை திருத்தப்படலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு திருத்தமும் அதனைப் பிரேரிக்கின்ற உறுப்பினரினால் எழுத்துமூலம் செயலாளர் நாயகத்துக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(3) சட்டமூலமொன்றிற்கு முன்மொழியப்படும் ஒவ்வொரு திருத்தமும் அரசியலமைப்பின் 77 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி சட்டத்துறைத் தலைமையதிபதியினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(4) பிரேரணையொன்றிற்கான திருத்தம், எப்பிரேரணை தொடர்பாக முன்மொழியப்படுகின்றதோ அப்பிரேரணைக்கு இயைபானதாகவிருத்தல் வேண்டும்.

(5) பாராளுமன்ற விதிகளிற்கமைய முன்னறிவித்தல் அளிக்கப்பட்ட தன்னிலைப் பிரேரணை மூலம் மாத்திரமே எழுப்பப்படக்கூடிய ஒரு பிரச்சினை திருத்தமொன்றின் மூலம் எழுப்பப்படலாகாது.

(6) ஒரு பிரேரணையின் ஏதாவது ஒரு பகுதிக்கான திருத்தத்திற்குரிய முடிவு வழங்கப்பட்டதன் பின்னர் அப்பகுதிக்கு முன்னதாக உள்ள பகுதியைத் திருத்த முடியாது.

(7) அதேமுறையில், அக்கிராசனத்திலிருந்து ஒரு பிரேரணையின் ஏதாவது பகுதிக்குத் திருத்தம் எடுத்தியம்பப்பட்டால் அத்திருத்தம் மீட்கப்பட்டாலன்றி, அப்பகுதிக்கு முன்னதாகவுள்ள ஒரு பகுதியைத் திருத்தமுடியாது.

(8) ஒரு பிரேரணை தொடர்பான திருத்தம் ஏதாவதொரு சட்டமூலம் அல்லது விடயம் தொடர்பாக அதேபோன்ற சந்தர்ப்பத்தில் திருத்தம் தொடர்பான முன்னர் எடுக்கப்பட்ட முடிவிற்கு முரணானதாயிருத்தலாகாது.

(9) அக்கிராசனத்திலிருந்து திருத்தமொன்று எடுத்தியம்பப்படும் போது, அத்திருத்தத்திற்கும் திருத்தமொன்று பிரேரிக்கப்படலாம்.

**44.** (1) திருத்தமொன்று குறித்த சில சொற்களை நீக்கிவிட்டு அவற்றிற்காக வேறு சில சொற்களைப் பதிலீடு செய்வதற்கானதாயிருந்தால் சபாநாயகரோ அல்லது தவிசாளரோ, அத்திருத்தத்தினைக் குறிப்பிட்ட பின்னர் "நீக்கப்படவேண்டுமெனப் பிரேரிக்கப்பட்ட சொற்கள் பிரேரணையின் அல்லது வாசகத்தின் ஒரு பகுதியாக இருக்குமாக" என்ற பிரேரணையை முதலில் எடுத்தியம்புவார். அப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டால் "திருத்தத்தில் பிரேரிக்கப்பட்ட அச்சொற்கள் அங்கு பதிலீடு செய்யப்படுமாக" என்ற பிரேரணையை அவர் எடுத்தியம்புதல் வேண்டும்:

ஆயினும், சாத்தியமானால் சபாநாயகரோ அல்லது தவிசாளரோ இதன்பின்னர் பிரேரிக்கக்கூடியதான ஒரு திருத்தத்தினைத் தடைசெய்யா சொற்களை மாத்திரமே ஒரு திருத்தத்தில் பரீட்சார்த்தப் பிரேரணையாகச் சபைக்கு விடவேண்டும். அவ்வாறு எடுத்தியம்பப்பட்ட பிரேரணை நிராகரிக்கப்பட்டால், நீக்கப்படவேண்டுமெனப் பிரேரிக்கப்பட்ட திருத்தத்தின் எஞ்சிய சொற்கள் மேலுமொரு பிரேரணையின்றியே நீக்கப்பட்டதாகக் கருதப்படும்.

(2) திருத்தமானது குறித்த சில சொற்கள் நீக்கிவிடப்பட வேண்டுமென்ற பயன்படவிருந்தால், சபாநாயகர் அல்லது தவிசாளர், திருத்தத்தைக் குறிப்பிட்ட பின்னர், "நீக்கப்பட வேண்டுமெனப் பிரேரிக்கப்படும் சொற்கள் பிரேரணையின் அல்லது வாசகத்தின் ஒரு பகுதியாக இருக்குமாக" என்ற பிரேரணையை எடுத்தியம்ப வேண்டும்.

(3) திருத்தமானது குறித்தசில சொற்கள் நீக்கிவிடப்பட வேண்டும், பதிலிடப்பட வேண்டும், உட்புகுத்தப்பட வேண்டும் அல்லது சேர்க்கப்பட வேண்டுமென்ற கருத்தில் இருக்குமானால், சபாநாயகர் அல்லது தவிசாளர், திருத்தத்தைக் குறிப்பிட்ட பின்னர், பிரேரிக்கப்பட்ட சொற்கள் அங்கு நீக்கிவிடப்பட வேண்டும், பதிலீடு செய்யப்பட வேண்டும், உட்புகுத்தப்பட வேண்டும் அல்லது சேர்க்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை எடுத்தியம்புதல் வேண்டும்.

(4) இந்நிலையியற் கட்டளையின் முற்போந்த பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் சபாநாயகர், "திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணையை, குறிப்பிடப்பட்ட "பிரேரணை அல்லது பிரேரணைகளிற்கு" பதிலாக எடுத்தியம்பலாம்.

(5) பிரேரிக்கப்பட்ட ஒரு திருத்தத்திற்கு வேறொரு திருத்தம் பிரேரிக்கப்பட்டால் முன் கூறப்பட்ட திருத்தத்தின் மீதான எல்லாத் திருத்தங்களும் முடிவாக்கப்படும்வரை அதுவே மூலப் பிரேரணையாகக் கருதப்படும்.

**45.** ஒரு பிரேரணையின் மீதான விவாதம் முடிவுற்றதும், சபாநாயகர் அல்லது தவிசாளர், அப்பிரேரணை அதன் மூல வடிவத்திலேயே இருப்பின், அப்பிரேரணையை அதன் மூல வடிவத்திலேயே குறிப்பிடுதல் வேண்டும் அல்லது அப்பிரேரணை திருத்தப்பட்டிருந்தால், அப்பிரேரணையை அதன் திருத்தப்பட்ட வடிவத்தில் குறிப்பிட்டு பிரேரணையைச் சபைக்கு விட வேண்டும்.

## விவாதமுற்றுக்கள்

**46.** (1) ஒரு பிரேரணை பிரேரிக்கப்பட்டதன் பின்னர் ஓர் உறுப்பினர் தனது இடத்தில் எழுந்து நின்று "பிரேரணை இப்போழுது சபைக்கு விடப்படுமாக" எனப் பிரேரிக்கலாம். அப்பிரேரணை பாராளுமன்றத்தின் விதிகளைத் துஷ்பிரயோகம் செய்வதாகவோ சிறுபான்மையினரின் உரிமைகளை மீறுவதாகவோ அக்கிராசனத்திற்குத் தோன்றினாலன்றி "பிரேரணை இப்பொழுது சபைக்கு விடப்படுமாக" என்ற பிரேரணை உடனடியாகச் சபைக்கு விடப்படல் வேண்டும்.

(2) "பிரேரணை இப்பொழுது சபைக்கு விடப்படுமாக" என்ற பிரேரணை நிறைவேற்றப்பட்டு அதன்விளைவான பிரச்சினை தீர்க்கப்பட்டதும் ஏற்கனவே அக்கிராசனத்தால் எடுத்தியம்பப்பெற்ற எந்தவொரு பிரேரணையிலும் தீர்வுகாணத் தேவைப்படும் மேலதிக பிரேரணையெதுவும் பிரேரிக்கப்படலாம். (முன்கூறப்பட்டபடி அக்கிராசனத்தின் இணக்கம் மறுக்கப்படாத பட்சத்தில் மாத்திரமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்).

(3) ஒரு வாசகத்தினைப் பரிசீலனை செய்யும்போது "பிரேரணையில் குறித்துரைக்கப்பட்ட அவ்வாசகத்தின் சில சொற்கள் அவ்வாசகத்தின் ஒரு பகுதியாக இருக்குமாக" அல்லது "அவ்வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்குமாக" அல்லது "சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக" என்ற பிரேரணை இப்பொழுது சபைக்கு விடப்படவேண்டுமெனப் பிரேரிக்கலாம். (முன்கூறப்பட்டபடி அக்கிராசனத்தின் இணக்கம் மறுக்கப்படாத பட்சத்தில் மாத்திரமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்).

(4) இந்நிலையியற் கட்டளையின்கீழ் பிரேரிக்கப்படும் ஒவ்வொரு பிரேரணையும் உடனடியாகச் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தமோ அல்லது விவாதமோ இன்றித் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) பாரளுமன்றத்தில் அல்லது முழுப் பராளுமன்றக் குழுவில் இந்நிலையியற் கட்டளையின் கீழான பிரேரணையொன்றில் வாக்கெடுக்கும்போது அப்பிரேரணைக்குச் சாதகமாக இருபது உறுப்பினர்கள் வாக்களித்துள்ளதாகத் தெரிந்தால் அன்றி அப்பிரேரணை நிறைவேறியதாகாது.

## வாக்களிப்பு

**47.** (1) சபாநாயகரினால் பிரேரணை முன்வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், "ஆம்", "இல்லை" என்ற குரல்களிலிருந்து வாக்கெடுப்பின் முடிவு சபாநாயகரினால் பிரகடனப்படுத்தப்படலாம்.

(2) சபாநாயகரின் முடிவிற்கு உடன்படாத எவரேனும் உறுப்பினர், சபாநாயகரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகப் பின்வரும் ஏதேனும் முறையொன்றின் கீழ் வாக்கெடுப்பொன்றினைக் கோரலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் ஐந்து நிமிடங்களிற்கு வாக்கழைப்பு மணி அடிக்கப்பட்டு, அதன் பின்னர்,–

(அ) சபையில் பிரேரணைக்கு ஆதரவாக அல்லது எதிராகத் தத்தமது இடங்களில் எழுந்துநிற்கின்ற உறுப்பினர்களை வரிசை வரிசையாக எண்ணுவதன் மூலம் வாக்கெடுப்பொன்று நடத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) இலத்திரனியல் வாக்குப் பதிகருவியைப் பயன்படுத்துவதன்மூலம் வாக்கெடுப்பொன்று நடத்தப்படுதல் வேண்டும். அதற்காகச் சபாநாயகரினால் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் அவர்களது முடிவைச் சுட்டிக்காட்டுவதற்கு உறுப்பினர்கள் பொருத்தமான பொத்தானை அழுத்துதல் வேண்டும்; அல்லது

(இ) ஒவ்வோர் உறுப்பினரிடமிருந்தும் அவர் எவ்வாறு வாக்களிக்க விரும்புகின்றாரெனச் செயலாளர் நாயகம் தனித்தனியாகக் கேட்பதன்மூலம் வாக்கெடுப்பொன்று நடத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வாக்குகளைப் பதிதலும் வேண்டும். செயலாளர் நாயகம் முதலில் பிரதம அமைச்சரிடமும், அதன்பின்னர் அமைச்சரவையின் அமைச்சர்கள், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஆகியோரிடமும் அவர்களினது பெயர்களின் அகரவரிசை ஒழுங்கிலும் அதன்பின்னர் ஏனைய உறுப்பினர்களிடம் அவர்களினது பெயர்களின் அகரவரிசை ஒழுங்கிலும் கேட்க வேண்டும். எவரேனும் உறுப்பினர் வாக்களிக்காதிருப்பதற்கு விரும்பினால் அதனை செயலாளர் நாயகத்திடம் கூறலாம். செயலாளர் நாயகம், அத்தகைய விடயத்தில் வாக்களிக்காது தவிர்த்தவராக அத்தகைய உறுப்பினரின் பெயரைப் பதிதல் வேண்டும்.

(3) சபாநாயகர் பிரேரணைக்கு ஆதரவாகவும் எதிராகவும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைகளை அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாக்குகள் சமமானவையாக இருக்கும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர் அறுதியிடும் வாக்கொன்றை அளிப்பார். சபாநாயகர் அதன் பின்னர் வாக்கெடுப்பின் முடிவைப் பிரகடனப்படுத்துதல் வேண்டும்.

**48.** வாக்கெடுப்பொன்றின்போது பதியப்பட்ட எண்ணிக்கைகள் அல்லது பெயர்கள் சம்பந்தமாக வேறுவகையில் திருத்தப்பட முடியாத குழப்பம் அல்லது தவறு ஏற்படும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர், அதன் பின்னர் உடனடியாக, இன்னொரு வாக்கெடுப்பை மேற்கொள்ளும்படி சபையைப் பணித்தல் வேண்டும்.

**49.** ஓர் உறுப்பினர் தாம் தவறாக வாக்களித்துவிட்டதாகவோ தம்முடைய வாக்கு பிழையாக எண்ணப்பட்டுவிட்டதாகவோ கூறினால், தாம் அளித்த வாக்கைத் திருத்திக்கொள்ள அவர் உரிமை கோரலாம்:

ஆயினும், வாக்களிப்பிற்கு அனுமதிக்கப்பட்ட நேரம் முடிவடைந்து விட்டதென்ற பிரகடனத்தை சபாநாயகர் செய்யும் முன்னர் உறுப்பினர் அத்தகைய கோரிக்கையை செய்யவேண்டும்.

## சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடைமுறை

*****50.** [(1) அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கமைய, எவரேனும் அமைச்சரவையின் அமைச்சர் முன்னறிவித்தலின் பின்னர், சட்டமூலம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தின் கட்டளையின்றி, அதனைச் சமர்ப்பிக்கலாம். பொது அலுவல்கள் ஆரம்பத்தில் சட்டமூலமொன்று அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும்போது, சட்டமூலத்தின் தலைப்பு செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சட்டமூலமானது அப்போது முதலாவது முறையாக மதிப்பிடப்பட்டுள்ளதென்றும் அச்சிடப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டுள்ளதென்றும் கருதப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து† 14 நாட்களுக்கு முற்படாத ஒரு திகதியன்று இரண்டாம் மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

ஆயினும், அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அவசர சட்டமூலமொன்று அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரால் பணிக்கப்படும் திகதியொன்றில் இரண்டாம் மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(2) முதலாம் மதிப்பீட்டின் பின்னர் அத்தகைய சட்டமூலம் பிரேரணை எதுவுமின்றி உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். குழுவானது சட்டமூலத்திற்குத் திருத்தங்களைப் பரிந்துரைக்கலாம். குழுவானது பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் வரை அல்லது பாராளுமன்றத்தினால் அறிக்கையிடுவதற்காக வழங்கப்பட்ட காலம் முடியும் வரை சட்டமூலம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

(3) அமைச்சரவையின் கருத்துக்கு அமைய தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அல்லது அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஏதேனும் விடயத்துக்கு உடனே தேவைப்படும், அது பற்றி அமைச்சரவை செயலாளரின் கைியொப்பத்தையுடைய குறிப்பினைக் கொண்ட, ஒரு

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

† 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் காரணமாக ஏற்பட்ட இடைநேர் திருத்தம்.

சட்டமூலத்துடன் தொடர்புடைய சனாதிபதியினால் பிரதம நீதியரசருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆவணத்தின் பிரதியொன்று அரசியலமைப்பின் 122(1) உறுப்புரைக்கு அமைய சபாநாயகருக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில், அரசியலமைப்பின் 122(1)(இ) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய சபாநாயகருக்கு உயர்நீதிமன்றத்தினால் அதன் தீர்மானம் வழங்கப்படும் வரை அச் சட்டமூலம் நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக்கொள்ளப்படலாகாது.]

## அரசியலமைப்பிற்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் III இல் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலான சட்டமூலங்கள்

**51.** (1) அரசியலமைப்பிற்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் III இல் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் சம்பந்தமான ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, இந்நிலையியற் கட்டளையின் 2 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) அச் சட்டமூலம் தொடர்பான ஒவ்வொரு மாகாண சபையினதும் கருத்துக்களை, அச்சட்டமூலத்தின் பிரதிகள் ஒவ்வொரு மாகாண சபைக்கும் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து இரு மாத காலப்பகுதியினுள் அல்லது பாராளுமன்றம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய வேறு காலப்பகுதியினுள், பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அச்சட்டமூலத்தின் பிரதிகளை சகல மாகாண சபைகளிற்கும் அனுப்பிவைக்குமாறு சபாநாயகர் செயலாளர் நாயகத்தைப் பணித்தல் வேண்டும்.

(ஆ) உபபந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவுறுவதன்மேல் அல்லது மாகாண சபைகளின் கருத்துக்கள் பெறப்பட்டதன்மேல், இவற்றுள் எது முந்தியதோ அதன்மேல், பாராளுமன்றமானது அச்சட்டமூலம் சம்பந்தமாக நடவடிக்கையெடுக்க முற்படலாம்.

(3) (அ) அரசியலமைப்பிற்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் III இல் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் ஆக்கப்படவேண்டிய ஏதேனும் உத்தேச நியதிச்சட்டத்தின்மீது பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிப்பதற்கு நாடுகின்ற ஏதேனும் மாகாண சபையிடமிருந்து தொடர்பாடலொன்று பெறப்படும்போதெல்லாம், சபாநாயகர், கிடைக்கக்கூடிய முதலாவது சந்தர்ப்பத்தில் அத்தொடர்பாடல் கிடைக்கப்பெற்றது தொடர்பாகப் பாராளுமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய நியதிச்சட்டமானது அதன்மேல் சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றம், சட்டவாக்க நிலையியற் குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர, மாகாண சபையிடமிருந்து அத்தகைய நியதிச்சட்டம் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து இரண்டு மாதங்களினுள், உத்தேச நியதிச்சட்டம் தொடர்பாகப் பாராளுமன்றத்தின் கருத்துக்களை உரிய மாகாண சபைக்கு அனுப்பிவைக்கும்படி செயலாளர் நாயகத்துக்குப் பணிப்புரை வழங்குதல் வேண்டும்.

## தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள்

*52. [(1) ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிக்க விரும்பும் தனியார் உறுப்பினர் எவரும், சட்டமூலத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள் ஆகியவற்றைத் தெரிவித்து அச்சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஒரு பிரேரணை உருவில் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் உறுப்பினர், அவரது உத்தேச சட்டமூலத்தின் பிரதிகளைச் சிங்களத்திலும் தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் அப்பிரேரணையின் பிரதியுடன் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) செயலாளர் நாயகம் அச்சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானதா மற்றும் அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாம் திருத்தத்தின் ஏற்பாடுகளிற்குட்படுகின்றதாவென்பது தொடர்பாகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கருத்தை அறிந்துகொள்வதற்காக அச்சட்டமூலத்தைச் சட்டத்துறை தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும். சட்டத்துறைத் தலைமையதிபதி ஆறு வார காலத்தினுள் தனது கருத்தினைப் பாராளுமன்றத்திற்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதியின் கருத்தினைப் பெற்றதன் பின்னர் செயலாளர் நாயகம் அச்சட்டமூலத்தைச் சிங்களத்திலும் தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு வகைசெய்தல் வேண்டும்.

(5) சட்டமூலமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள் கழிந்ததன் பின்னர் எந்நேரத்திலும் மேற்படி (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பிரேரணை பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(6) பிரேரணை ஒன்று சபைக்கு விடப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதும் அல்லது சபையால் அனுமதி வழங்கப்படாத போது இருபதிற்கும் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரின் பிரேரணையை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றால், அச்சட்டமூலம் முதலாம் மதிப்பீடு செய்யப்பட்டு அச்சிடுவதற்குக் கட்டளையிடப்பட்டதாகக் கருதப்படுவதுடன், அதன்மீது விவாதமெதுவும் மேற்கொள்ளப்படாது சட்டமூலத்தின் விடயங்களும் பணிகளும் தொடர்பாகக் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ அறிக்கையிடுவதற்காக ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய அமைச்சரோ அல்லது பிரதியமைச்சரோ இல்லாத சந்தர்ப்பத்தில் சபாநாயகர் நியமிக்கும் வேறோரு அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ ஆற்றுப்படுத்துவதுடன், சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும்வரை அச்சட்டமூலம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது

(7) மேற்படி (6) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அல்லது அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்குச் சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் அல்லது பிரதி அமைச்சரினால் அறிக்கையெதுவும் சமர்ப்பிக்கப்படாவிட்டால், அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பான உறுப்பினர் விரும்பும் திகதிக்கு இரண்டாம் மதிப்பீட்டிற்காக அச்சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் இடப்படல் வேண்டும்.]

**53.** (1) குறிப்பிட்ட எவரேனுமாளை, சங்கத்தை அல்லது கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தைப் பாதிப்பதாக அல்லது நன்மை பயக்கக்கூடியதாக இருக்கக்கூடிய ஏதேனும் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய சட்டமூலத்தின் பொது இயல்புகளையும் குறிக்கோள்களையும் உள்ளடக்கிய அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வர்த்தமானியிலும், இலங்கை குடியரசில் புழக்கத்திலுள்ள குறைந்தபட்சம் ஒரு சிங்கள, ஒரு தமிழ் மற்றும் ஒரு ஆங்கிலச் செய்தித்தாளிலேனும் வெளியிடப்பட வேண்டும். அத்தகைய விளம்பரம் அச்சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பாராளுமன்றத்திற்கு அனுமதிகோரி விண்ணப்பம் செய்யப்படுவதற்குக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னர் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(2) "அத்துடன் இந்நிலையியற் கட்டளையின் (1) ஆம் பந்தியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களின் ஒரு பிரதியையும் கொடுக்க வேண்டும்" என்னும் சொற்களை நிலையியற் கட்டளை 52 (2) ஆம் பந்தியின் முடிவில் சேர்த்துக்கொண்டால் அப்பந்தி இத்தகைய சட்டமூலம் ஒவ்வொன்றிற்கும் பொருந்தும்.

(3) அத்தகைய சட்டமூலம் ஒவ்வொன்றும் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட்ட பின்னர், சட்டவாக்க நிலையியற் குழுவிற்குச் சபாநாயகரினால் ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) சட்டவாக்க நிலையியற் குழு, சட்டமூலம் நிறைவேற்றப்படுவது உகந்ததே என்பதைக் காட்டும் வண்ணம் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைப் பொருள்களையும் பிற விடயங்களையும் நிரூபிப்பதற்குத் தேவையானதெனக் கருதும் வாய்மூல அல்லது பிற சான்றுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அதையடுத்துக் குறிப்பிட்ட உண்மைப் பொருள்களும் பிற விடயங்களும் நிரூபிக்கப்படவில்லையென்று குழு காணும்போது அங்ஙனமே அது அறிக்கை சமர்ப்பிக்கும்; ஆனால் குறிப்பிட்ட உண்மைப் பொருள்களும் பிற விடயங்களும் நிரூபிக்கப்பட்டனவென்று சட்டவாக்க நிலையியற் குழு காணும்போது அது சட்டமூலத்தின் பல்வேறு வாசகங்களையும் பரிசீலனை செய்ய வேண்டும். அது வாசகங்களை நீக்கலாம்; புது வாசகங்களைச் சேர்க்கலாம். அத்துடன் தேவையெனக் கருதும் வேறு திருத்தங்கள் எவற்றையும் செய்யலாம். அத்தகைய புது வாசகங்கள், ஏனைய திருத்தங்கள் அனைத்தும் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும்:

ஆயினும், இந்நிலையியற் கட்டளையின் (1) ஆம் பந்தியில் கோரப்படும் முன்னறிவித்தலில் குறிக்கப்படும் இயல்புகளிற்கும் நோக்கங்களிற்கும் புறம்பாக எந்தவொரு வாசகத்திற்கும் இத்தகைய சட்டமூலத்தில் இடமளித்தலாகாது. ஒரு வாசகம் நியாயமானதும் உகந்ததுமேயென எடுத்துக்காட்டும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைச் சட்டமூலத்தில் குறிப்பிட்டாலன்றி இத்தகைய சட்டமூலத்தில்

தனியார் உரிமையையோ நலனையோ பாதிக்கும் எந்தவொரு வாசகமும் அனுமதிக்கப்படலாகாது.

## பாதிக்கப்பட்ட தரப்பினர்கள், சாட்சிகள், சான்றுகள்

*54. [தனிப்பட்டவர்களின் உரிமைகளோ, நலன்களோ எந்தவொரு சட்டமூலத்தினாலும் தனித்தன்மையதாய் பாதிக்கப்படும் எச்சந்தர்ப்பத்திலும், அவ்வாறு பாதிக்கப்பட்ட எவரேனும் தரப்பினர் அத்தகைய சட்டமூலம் எந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றதோ அந்தக் குழுவிற்கு மனுவொன்றை சமர்ப்பித்து, பாதிக்கப்பட்டவர் நேரடியாகவோ அல்லது வழக்குரைஞர் மூலமாகவோ அக்குழுவினால் செவிமடுக்கப்படலாம்.]

## இரண்டாம் மதிப்பீடு

*55. [(1) அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலமொன்று தவிர்ந்த, வேறு சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து †பதினான்கு நாட்களுக்கு முற்படாத ஒரு திகதியின் இரண்டாவது மதிப்பீட்டிற்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

(2) ஏதாவது சட்டமூலமோ அல்லது அதிலுள்ள ஏதாவது ஏற்பாடோ அரசியலமைப்புக்கு முரணானதாகவுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையின்கீழ் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் கோரப்பட்டு அத்தகைய ஆற்றுப்படுத்தலின் அல்லது மனுவின் பிரதியொன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில் -

(அ) அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் அல்லது அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் கூடும் பாராளுமன்றத்தின் முதலாவது நாட் கூட்டத்தின்போது சபாநாயகரினால் அத்தகைய ஆற்றுப்படுத்தல் அல்லது மனு தாக்கல் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் சபாநாயகருக்குத் தெரிவிக்கப்படும் வரையில் அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்தலோ, மனுத்தாக்கலோ செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரகாலம் முடியும்வரையில் இவற்றுள் எது முதல் நிகழ்கின்றதோ அதுவரை, அத்தகைய சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதலாகாது;

(இ) உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் பெறப்பட்டதன் பின்னர் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தைச் சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் அவ்வறிவித்தலின் மீது விவாதமெதுவும் அனுமதிக்கப்படுதலுமாகாது.]

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

† 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் காரணமாக ஏற்பட்ட இடைநேர் திருத்தம்.

## இரண்டாம் மதிப்பீட்டில் விவாதம்

**56**. சட்டமூலம் ஒன்றின் இரண்டாம் மதிப்பீட்டின்போது சட்டமூலத்தின் பொதுத் தகைமைகளையும் கொள்கைகளையும் உள்ளடக்கிய விவாதமொன்று எழலாம்.

## சட்டமூலங்கள் மீதான குழுநிலை

*__57.__ [சட்டமூலமொன்று இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டதும் அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் ஒருவரினால் பிரேரிக்கப்படும் பிரேரணையின் மேல் அச்சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்:

ஆயினும், அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரினால் செய்யப்பட்ட பிரேரணையின்மேல் பாராளுமன்றம் அவ்வாறு முடிவுசெய்தால், வருடாந்த அல்லது குறைநிரப்பு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தவிர்ந்த பிரிதொரு சட்டமூலமொன்று சபாநாயகரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய விசேட குழுவொன்றிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.]

**__58.__ [சட்டமூலமொன்று விசேட குழுவிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளபோது அக்குழுவானது அச் சட்டமூலம் பற்றி அறிக்கையிடும்வரை அச்சட்டமூலத்தின்மீது மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலாகாது.]

## குழுநிலையிலுள்ள சட்டமூலங்கள் மீதான நடைமுறை

**59.** ஏதேனும் சட்டமூலம் 57 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் குழுவொன்றிற்கு ஆற்றுப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய குழு அதன் பல்வேறு ஏற்பாடுகளையும் பிரேரிக்கப்பட்ட எவையேனும் திருத்தங்களையும் பற்றி கலந்துரையாட வேண்டுமென்பதுடன், குழு அதன் அமர்வினை ஒத்திவைக்கலாம்; அது முழுப் பாராளுமன்றக் குழுவாகவிருப்பின் சந்தர்ப்பம் எழும்போது காலத்திற்குக்காலம் அதன் முன்னேற்றத்தை அறிக்கையிடலாம்.

**60.** குழுவின் தவிசாளர் அல்லது செயலாளர் நாயகம் சட்டமூலத்தின் ஒவ்வொரு வாசகத்தினதும் இலக்கத்தை ஒன்றன்பின் ஒன்றாக வாசித்தல் வேண்டும்.

**61.** ஒரு வாசகத்திற்கு அல்லது வாசகங்களிற்கு அச்சட்டமூலத்தின் விடயப்பொருளிற்கு இயைபானதாகவும் நிலையியற் கட்டளைகளிற்கு வேறுவகையில் இசைந்தொழுகுவதுமான திருத்தங்களை ஏதேனும் ஏற்பாடுகளை

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

** 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

நீக்கிவிடுவதன் மூலம், பதிலிடுவதன் மூலம் அல்லது உட்புகுத்துவதன் மூலம் அல்லது சேர்ப்பதன் மூலம் மேற்கொள்ளலாம்.

**62.** குழுநிலையில் சட்டமூலத்தின் அடிப்படைக் கொள்கை கலந்துரையாடப்படுதலாகாது என்பதுடன், அதன் விபரங்கள் மட்டுமே கலந்துரையாடப்படுதல் வேண்டும்.

**63.** ஒரு சட்டமூலத்தின் முற்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவிற்கு முரணான எந்தவொரு திருத்தமும் பிரேரிக்கப்படுதலாகாது.

**64.** சட்டமூலமொன்று குழுநிலையில் மதிப்பிடப்பட்ட பின்னரும் அச்சட்டமூலம் தொடர்ந்து குழுநிலையிலுள்ளபோதும் எவரேனும் உறுப்பினர் தவிசாளரின் அனுமதியுடன், ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஏதேனும் வாசகத்திற்குத் திருத்தமொன்றைப் பிரேரிக்கலாம்.

**65.** சட்டமூலத்தின் ஏதேனும் வாசகத்தின் பரிசீலனை சட்டமூலத்தின் எஞ்சியுள்ள வாசகங்கள் பரிசீலிக்கப்படும் வரையும் புதிய வாசகங்கள் சமர்ப்பிக்கப்பட முன்னரும் பிற்போடப்படலாம்.

**66.** (1) சட்டமூலத்தின் அட்டவணைகள் பரிசீலிக்கப்படுவதற்கு முன்னர் அச்சட்டமூலத்திற்குப் புதிய வாசகங்கள் சமர்ப்பிக்கப்படலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் புதிய வாசகங்கள் முதல் மதிப்பீடு பெற்றவையாகக் கருதப்படல் வேண்டும். அதையடுத்து முறையே “அந்த வாசகம் இரண்டாம் மதிப்பீடு பெறுக” என்றும் “அந்த வாசகம் (அல்லது திருத்தப்பட்டவாறான வாசகம்) சட்டமூலத்துடன் சேர்க்கப்படுவதாக” என்றும் பிரேரணைகள் பிரேரிக்கப்படல் வேண்டும்.

(2) சட்டமூலத்திற்குரிய அட்டவணைகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் புதிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படலாம். அங்ஙனம் சமர்ப்பிக்கப்படும் அட்டவணைகள் புதிய வாசகம் எவ்வாறு பரிசீலிக்கப்படுமோ அவ்வாறே பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு வாசகமும் அட்டவணையும் பிரேரிக்கப்பட்ட ஏதேனும் புதிய வாசகமும் அல்லது அட்டவணையும் பரிசீலிக்கப்பட்டதும் சட்டமூலத்திற்கு முன்னுரை இருக்குமானால் அது கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் 'இது சட்டமூலத்தின் முன்னுரையாக இருக்குமாக' என்ற பிரேரணை பிரேரிக்கப்படுதல் வேண்டும்.

(4) சட்டமூலத்தின் சட்டப்பெயருக்கு ஏதேனும் திருத்தம் அவசியமானால், அது இந்நிலையியற் கட்டளையிற் தரப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முடிவில் செய்யப்படுதல் வேண்டும்.

## சட்டமூலங்களின் மீதான குழுக்களின் அறிக்கைகள்

**67.** முழுப் பாராளுமன்றக் குழுவொன்று ஒரு சட்டமூலத்தைப் பரிசீலனை செய்து முடித்ததும் தவிசாளர் அச்சட்டமூலத்தைத் திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்களின்றியோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

*68. [சட்டமூலமொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழு அதன் விதப்புரைகளைத் தருகின்ற அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் அறிக்கையின் பிரதியொன்று ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.]

69. ஒரு சட்டமூலத்தின் விசேட குழுவின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வறிக்கை சபாபீடத்தில் இடப்படுவதாக எனக் கட்டளையிடலாம்; அல்லது பாராளுமன்றத்தால் பணிக்கப்படக் கூடியவாறான முறையில் கையாளப்படலாம். எந்தவோர் உறுப்பினரும் பிரேரிக்கும் பிரேரணை ஒன்றின் அடிப்படையில் சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவொன்றிற்கு ஆற்றுப்படுத்தப்படலாம்; அல்லது விசேட குழுவின் அறிக்கை அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பாயுள்ள உறுப்பினர் பிரேரிக்கும் ஒரு நாளில் பரிசீலனை செய்யப்படுவதற்கென ஒதுக்கப்படலாம்.

*70. [ஒரு சட்டமூலத்தின் சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் அல்லது விசேட குழுவொன்றின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றம் பணிப்புரை விடுக்கும் தினத்தில் பரிசீலனை செய்யப்படுவதற்கென ஒதுக்கப்படல் வேண்டும். சட்டவாக்க நிலையியற் குழுவின் அல்லது விசேடகுழுவின் அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டபின் பாராளுமன்றம் அக்குழு செய்திருக்கும் திருத்தங்களை மட்டுமே பரிசீலிக்கும். ஆயினும் அத்திருத்தங்களை மேலும் திருத்தலாம். அவ் அறிக்கையைப் பரிசீலிக்கும்போது திருத்தங்களின் விளைவாக குழுவால் முனவைக்கப்பட்டு பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தவிர பாராளுமன்றத்தால் புதிய திருத்தங்கள் எதையும் செய்ய முடியாது. ஆனால் குழுவால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பற்றிய சட்டமூலம் மீண்டும் அக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படலாம்.]

## மூன்றாம் மதிப்பீடு

71. ஒரு சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவால் நிறைவேற்றப்பட்ட அல்லது ஒரு விசேட குழுவால் திருத்தமின்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட ஒரு பிரேரணையின் அடிப்படையில் உடனே மூன்றாம் மதிப்பீடு செய்யப்பட்டு நிறைவேற்றப்படலாம்; அல்லது பாராளுமன்றம் பணித்தால் மூன்றாம் மதிப்பீடு பிற்போடப்படலாம்.

*72. [(1)சட்டவாக்க நிலையியற் குழுவினால் திருத்தங்களின்றிப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட சட்டமூலமொன்று சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழுவினால் பரிசீலனைக்கென நியமிக்கப்பட்ட நாளன்று உடனடியாக மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம்;

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

*2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

அல்லது மூன்றாம் மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

(2) சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேடகுழு சட்டமூலத்தைத் திருத்தியிருந்தால் குழுவினால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பாராளுமன்றம் பரிசீலனை செய்து முடித்தவுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாவது மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.]

**73**. ஒரு சட்டமூலத்தின் மூன்றாவது மதிப்பீட்டின்போது அறிவித்தலின் பின்னரான பிரேரணையின்மேல் வார்த்தைகளில் அல்லது வரைவுத் தேவைப்பாடுகளிற்கு ஏதேனும் திருத்தங்கள் செய்யப்படலாம். சபாநாயகரினால் சட்டமூலத்தில் சான்றுரை எழுதப்படுவதற்கு முன்னர் சட்டமூலத்திலிருக்கக் கூடிய இலக்கணப் பிழை அல்லது தட்டெழுத்துப் பிழை எதனையும் திருத்துவதற்குச் சபாநாயகருக்குத் தத்துவம் உண்டு.

## சபாநாயகரின் சான்றுரை

**74**. பாராளுமன்றத்தினால் சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட சான்றுரையை இயன்றளவு விரைவாக சபாநாயகர் சிங்கள, தமிழ் மொழிமூல சட்டமூலத்தில் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

## ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்காகக் குறித்தொதுக்கப்பட்ட நாட்கள்

**75.** (1) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பரிசீலிப்பதற்கென திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பாக (இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி) இருபத்தாறு நாட்களிற்கு மேற்படாத நாட்கள் ஒதுக்கப்படல் வேண்டும்:

ஆயினும், ஏதாவது குறைநிரப்பும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பரிசீலிப்பதற்காக எடுக்கப்பட்ட நாட்கள் மேற்குறிப்பிட்ட இருபத்தாறு நாட்களைக் கணக்கிடுவதில் சேர்த்துக் கொள்ளப்படலாகாது.

(2) அவ்வாறு ஒதுக்கப்பட்ட நாட்களில், வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் அமர்வு நேரம் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 12.30 மணிவரையும் பி.ப. 1.00 மணியிலிருந்து பி.ப. 6.30 மணிவரையுமாக இருத்தல் வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் அமர்வு நேரம் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 12.30 மணிவரையும் பி.ப. 1.30 மணியிலிருந்து பி.ப. 6.30 மணிவரையுமாக இருத்தல் வேண்டும்:

ஆயினும், பி.ப. 6.00 மணிக்கு 8 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (4) ஆம், (5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் செயற்படல் வேண்டும்.

(3) அவ்வாறு ஒதுக்கப்பட்ட ஒரு நாளில் பொது அலுவல்களின் முதலாவது விடயமாக ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இடம்பெற வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒரு நாளில் பி.ப. 6.00 மணிக்கு முன்பு வேறெந்தப் பொது அலுவலும் எடுக்கப்படுதலாகாது.

(4) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டிற்கு ஏழு நாட்களிற்கு மேல் ஒதுக்கப்படலாகாது. இரண்டாம் மதிப்பீட்டின் மீதான நடவடிக்கைகள் ஏற்கனவே முடிவுற்றிருந்தாலன்றி ஒதுக்கப்பட்ட ஏழாம் நாளன்று பி.ப. 6.00 மணிக்குச் சபாநாயகர் அதனை நிறைவேற்றத் தேவையான எப்பிரேரணையையும் உடனடியாகப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய பிரேரணைகள் யாவும் நிறைவேற்றப்படும்வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படலாகாது.

(5) இந்நிலையியற் கட்டளையின் மேற்படி (1) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை பரிசீலனைக்கென இருபத்திரண்டு நாட்களிற்கு மேல் ஒதுக்கப்படலாகாது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நாட்களில் கடைசி நாளன்று பி.ப. 6.00 மணிக்கு சட்டமூலம் ஏற்கனவே அறிக்கையிடப்பட்டிருந்தாலன்றி அப்போது விவாதத்திலிருக்கும் எவையேனும் திருத்தங்களின் மீதான பிரேரணைகளையும் அதனைத் தொடர்ந்து அத்தலைப்புக்கான அரசாங்கத் திருத்தங்களின் மீதான பிரேரணைகளையும் அத்தலைப்பை நிறைவேற்றத் தேவையான பிரேரணைகளையும் தவிசாளர் உடனடியாகச் சபைக்கு விடுதல் வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு அமைச்சின் தலைப்புகள் தொடர்பாகவும் அவ்வமைச்சின் மதிப்பீடுகளின் எஞ்சியுள்ள தலைப்புகளின் மொத்தத் தொகைகள் அம்மதிப்பீடுகளில் வரையறுக்கப்பட்டுள்ள சேவைக்கென அட்டவணையில் சேர்க்கப்படுவதாக எனவும், பின்னர் பல்வேறு அட்டவணைகளும் முறையே சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமெனவும் பிரேரணையை உடனடியாகச் சபைக்கு விடுதல் வேண்டும். அச்சட்டமூலம் அறிக்கையிடப்படும்வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படலாகாது.

(6) இந்நிலையியற் கட்டளையின் கீழ் இடம்பெறும் நடவடிக்கைகளை முடிவிற்குக் கொண்டுவரும் எந்நாளன்றும் அந்நடவடிக்கைகளின் பரிசீலனை ஒத்திவைப்புப் பிரேரணைமூலம் எதிர்நோக்கப்படவோ இடைநிறுத்தப்படவோ ஆகாது என்பதுடன் மேலும் இந்நடவடிக்கைகளின்மீது தடங்கற் பிரேரணைகள் எவையும் கொண்டுவரப்படுதலுமாகாது:

ஆயினும், 19 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் ஒத்திவைப்பு பிரேரணைக்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அத்தகைய பிரேரணை, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான நடவடிக்கைகள் முடிவுறும்வரை நிறுத்திவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றம் ஏற்கனவே ஒத்திவைக்கப் பட்டிருந்தாலொழிய, பி.ப. 8.00 மணிக்குச் சபாநாயகர் வினாவின்றியே பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல் வேண்டும்.

## ஒழுங்குபேணல் விதிகளிற்கான பொறுப்பு

**76.** (1) பாராளுமன்றத்தில் சபாநாயகரும் ஏதேனும் குழுவில் அக்குழுவின் தவிசாளரும் முறையே பாராளுமன்றத்திலும் குழுக்களிலும் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிப்பதற்குப் பொறுப்புடையோராவார். எந்தவிதமான ஒழுங்குப்பிரச்சினை மீதும் இவர்களின் முடிவு மேன்முறையீட்டிற்கு உட்படலாகாது என்பதுடன் முன்னறிவித்தலின் பின் செய்யப்படும் தன்னிலைப் பிரேரணை ஒன்றின் மீதன்றி இது பாராளுமன்றத்தினால் மீளாய்வு செய்யப்படுதலுமாகாது.

(2) ஒரு விவாதத்தின்போது சபாநாயகரோ அல்லது தவிசாளரோ குறுக்கீடு செய்து ஏதேனும் கூறும் சந்தர்ப்பத்தில் உரையாற்றிக்கொண்டிக்கும் அல்லது

உரையாற்றவிருக்கும் உறுப்பினரெவரும் தமது இருக்கையிலமர வேண்டுமென்பதுடன் சபாநாயகர் அல்லது தவிசாளர் கூறுவதை எவ்விதக் குறுக்கீடுமின்றிச் செவிமடுக்கக்கூடியதாகப் பாராளுமன்றமோ குழுவோ அமைதியாக இருத்தலும் வேண்டும்.

(3) ஒழுங்குப் பிரச்சினையொன்றை எடுத்துரைத்தபின் அதனை எடுத்துரைத்த உறுப்பினர் தமது இருக்கையில் அமர்தல் வேண்டுமென்பதுடன் சபாநாயகரோ தவிசாளரோ ஒழுங்குப் பிரச்சினையில் தமது தீர்ப்பினைக் கூறும்வரை சபாநாயகரின் அல்லது தவிசாளரின் அனுமதியின்றி வேறெந்த உறுப்பினரும் எழுந்து நிற்றலாகாது. தீர்ப்பளிக்கப்பட்ட பின் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்ட சமயம் பாராளுமன்றத்தில் உரையாற்றி நின்ற உறுப்பினர் அக்கிராசனத்தின் தீர்ப்பிற்கிணங்கத் தமது உரையைத் தொடர்ந்து நிகழ்த்தத் தகுதியுடையவராவார்.

## பாராளுமன்றத்தில் ஒழுங்கு

**77.** (1) ஓர் உறுப்பினர் அக்கிராசனத்தின் அதிகாரத்தைப் புறக்கணித்தல், வேண்டுமென்றும் விடாப்பிடியாகவும் பாராளுமன்றத்தின் அலுவலுக்கு தடையினை ஏற்படுத்தல் அல்லது வேறெவ்வகையிலாவது பாராளுமன்றத்தின் விதிகளைத் துஷ்பிரயோகம் செய்தல் போன்ற குற்றச்சாட்டுக்களைப் புரிந்தவுடன் சபாநாயகர் அவ்வுறுப்பினரைப் பெயர் குறிப்பிட்டு “குறித்த அவ்வுறுப்பினர் பாராளுமன்றத்தின் சேவையினின்றும் இடைநிறுத்தி வைக்கப்படல் வேண்டும்” என்ற பிரேரணையை (விவாதமோ ஒத்திவைப்போ திருத்தமோ அனுமதிக்கப்படமாட்டாது) உடனடியாகச் சபைக்கு விட வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் மற்றும் எவரேனும் உறுப்பினர் இந்நிலையியற் கட்டளையின்கீழ் இடைநிறுத்தப்படும் போது முதலாவது சந்தர்ப்பத்தில் அத்தகைய உறுப்பினரின் இடைநிறுத்துகை இருவாரங்களிற்கானதாதல் வேண்டும். அதே அமர்வுத்தொடரின்போது இரண்டாவது சந்தர்ப்பத்தில் மூன்று வாரங்களிற்கானதாதல் வேண்டும் என்பதுடன் அதே அமர்வுத்தொடரின்போது மூன்றாவது அல்லது ஏதேனும் அடுத்துப்பின்னரான சந்தர்ப்பத்தில் நான்கு வாரங்களிற்கானதாகவிருத்தல் வேண்டும்:

ஆயினும், எவ்வுறுப்பினரின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனவோ அவ்வுறுப்பினருக்கு, அத்தகைய இடைநிறுத்துகைக் காலப்பகுதியின்போது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இறுதி வாக்கெடுப்பில் மட்டும் வாக்களிப்பதற்குச் சபாநாயகரினால் அனுமதியளிக்கப்படலாம்.

(3) மேற்படி (1) ஆம் மற்றும் (2) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், செங்கோல் சபையில் வைத்திருக்கப்படும்போது அதனைத் தொடுகின்ற அல்லது அதனை உயர்த்துகின்ற எவரேனும் உறுப்பினர் பாரதூரமான ஒழுங்கீனத்தைப் புரிகின்றார் என்பதுடன், அத்தகைய தவறு அவ்வுறுப்பினரினால் முதலாவது தடவையாகப் புரியப்பட்டதாகவிருந்தாலும் அவர் நான்கு வாரக் காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

(4) சமுகமாயிருக்கும் பல உறுப்பினர்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து அக்கிராசனத்தின் அதிகாரத்தைப் புறக்கணித்தாலொழிய ஒரேநேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பெயர் குறிப்பிடப்படுதலாகாது.

(5) இந்நிலையியற் கட்டளையின்கீழ் பாராளுமன்றத்தின் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அல்லது கூட்டாக இயங்கும் பல உறுப்பினர்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்ட காலவரையறையுள் பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற சபாநாயகரின் கட்டளைக்கு எந்நேரத்திலாவது கீழ்ப்படிய மறுத்தால், தனது கட்டளையைச் செயற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சபாநாயகர் பணிக்கலாம்.

(6) இந்நிலையியற் கட்டளையின் (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட குற்றமொன்று முழுப் பாராளுமன்றக் குழுநிலையில் புரியப்படும்போது தவிசாளர் உடனடியாக குழுவின் நடவடிக்கையை இடைநிறுத்தி அவ்வாறு இடைநிறுத்தி வைப்பதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்திலேயே அத்தகைய குற்றம் இழைக்கப்பட்டதாகக்கொண்டு அவ்வறிவித்தலின் பேரில் பிரேரிக்கப்படும் ஒரு பிரேரணையானது திருத்தம், ஒத்திவைப்பு அல்லது விவாதம் எதுவுமின்றி சபாநாயகரினால் சபைக்கு விடப்படுதல் வேண்டும்.

**78.** ஒரு விவாதத்தின்போது தனது சொந்த வாதங்களை அல்லது ஏனைய உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட வாதங்களை சலிப்பூட்டும் முறையில் மீட்டுரைப்பதிலோ அல்லது விவாதப் பொருளிற்குப் பொருத்தமற்ற வகையில் உரையாற்றுவதிலோ ஓர் உறுப்பினர் விடாப்பிடியாயிருந்தால் சபாநாயகர் அவ்வுறுப்பினரின் நடத்தையைப் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னர் அவ்வுறுப்பினரை உரையாற்றுவதை நிறுத்துமாறு பணிப்பதுடன் நேரடி ஒலி, ஒளிபரப்பை நிறுத்துமாறும் கட்டளையிடலாம்.

**79.** (1) பாரதூரமான ஒழுங்கற்ற முறையில் செயற்படும் உறுப்பினர் அன்றைய எஞ்சிய நேரக் கூட்ட அமர்விலிருந்து உடனடியாக வெளியேற வேண்டுமெனச் சபாநாயகர் கட்டளையிட வேண்டுமென்பதுடன் அவரது கட்டளையைச் செயற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சபாநாயகர் பணிக்கலாம். படைக்கலச் சேவிதர் அத்தகைய உத்தரவின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.

(2) எச்சந்தர்ப்பத்திலாவது, சபாநாயகர் இந்நிலையியற் கட்டளையின்கீழ் தமக்குள்ள அதிகாரங்கள் போதியனவல்லவெனக் கருதினால் அவர், 77 ஆம் நிலையியற் கட்டளையைப் பின்பற்றி அத்தகைய உறுப்பினர்களைப் பெயர் குறிக்கலாம்.

**80.** 77 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் இடைநிறுத்தப்பட்ட அல்லது 79 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் வெளியேறுமாறு பணிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து உடனடியாக வெளியேறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இடைநிறுத்துகைக் காலப்பகுதியின்போது குழுக்களிலிருந்தும் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

இக்கட்டளையின் நோக்கங்களிற்காக “பாராளுமன்ற வளவெல்லை” என்பது, பாராளுமன்றக் கட்டிடங்களையும் பாராளுமன்றத்தின் 1 ஆம் இலக்க வாயில் முதல் 3 ஆம் இலக்க வாயில் வரையான நிலப்பரப்பையும் உள்ளடக்கும்.

**81.** பாராளுமன்றத்தில் பாரதூரமான ஒழுங்கீனம் எழுகின்ற விடயத்தில், சபாநாயகர் அவசியமெனக் கருதினால், வினாவின்றியே பாராளுமன்றத்தை

ஒத்திவைக்கலாம் அல்லது சபாநாயகரினால் தீர்மானிக்கக்கூடியவாறான நேரத்திற்கு அமர்வை இடைநிறுத்தி வைக்கலாம்.

**82.** (1) ஒழுங்கற்ற அல்லது மாமன்றப் பண்பிற்கு ஒவ்வாத தகாத வார்த்தைகளை விவாதத்தில் பயன்படுத்தியுள்ள அல்லது 83 ஆம் நிலையியற் கட்டளைக்கு முரணாக அல்லது 91(ஊ) அல்லது (ஏ) என்னும் நிலையியற் கட்டளைகளிற்கு முரணாக எதனையும் விவாதத்தில் கூறியிருந்து அதனை விலக்கியிராத அல்லது மீட்டுப்பெறாத அல்லது அத்தகைய தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தியதற்காகப் பாராளுமன்றம் திருப்திப்படும் வகையில் மன்னிப்புக் கோராத அல்லது இந்நிலையியற் கட்டளைகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குபேணுகையின் மீறுகையைப் புரிந்துள்ள எவரேனும் உறுப்பினருக்கெதிராகப் பாராளுமன்றம் தகுதியெனக் கருதுகின்ற ஏதேனும் வகையில் நடவடிக்கை எடுக்கலாமென்பதுடன், இந்நிலையியற் கட்டளைகளில் குறித்துரைக்கப்பட்ட முறை தவிர்ந்த வேறேதேனும் முறையில், இந்நிலையியற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குபேணுகையின் மீறுகைக்காக, எவரேனும் உறுப்பினருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதிலிருந்து பாராளுமன்றத்தை இக்கட்டளைகளில் எதுவும் தடுத்தலுமாகாது.

(2) (அ) எவரேனும் உறுப்பினர் இயைபற்ற முறையில் அல்லது நிலையியற் கட்டளைகளிற்கு முரணாகத் தொடர்ந்து செயற்படுகின்றாரெனச் சபாநாயகர் அபிப்பிராயப்படும்போது, அவர் அப்பாராளுமன்ற நடவடிக்கைகளின் ஏதேனும் ஒலி, ஒளிபரப்பு உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்;

(ஆ) விவாதத்தில் ஒழுங்கற்ற அல்லது மாமன்றப் பண்பிற்கு ஒவ்வாதனவாகவுள்ள தகாத வார்த்தைகள் உபயோகப் படுத்தப்பட்டுள்ளனவென அல்லது 83 ஆம் நிலையியற் கட்டளை அல்லது 91 (ஊ) அல்லது (ஏ) என்னும் நிலையியற் கட்டளைகளிற்கு முரணான விவாதத்தில் எதுவும் கூறப்பட்டுள்ளதெனச் சபாநாயகர் அபிப்பிராயப்படும்போது அவர் தனது தற்றுணிபின்படி அத்தகைய சொற்கள் அல்லது அத்தகைய கூற்றுக்கள் ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்கிவிடப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய வார்த்தைகள் அல்லது கூற்றுக்கள் சொல்லப்படாத சொற்களாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**83.** (1) தன்னிலைப் பிரேரணை ஒன்றின் மீதன்றி சனாதிபதி, பதில் சனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள் மற்றும் நீதி நிருவாகத்தில் ஈடுபட்டுள்ள வேறு ஆட்களின் தனிப்பட்ட நடத்தை பற்றிப் பாராளுமன்றத்தில் வினாவெதுவும் எழுப்பப்படுதலாகாது; அத்துடன் எவையேனும் நடவடிக்கைகளில், அமைச்சரொருவரிடம் கேட்கப்படும் கேள்வியொன்று அல்லது ஏதேனும் விடயம் தொடர்பான பிரேரணையொன்றின் மீதான விவாதத்திலான குறிப்புகளில் அத்தகைய எவரேனும் ஆட்களின் நடத்தை பற்றிக் குறிப்பிடுதலும் ஒழுங்கற்றதாகும்.

(2) இந்நிலையியற் கட்டளையில் “நீதிபதி” என்பது குடியரசின் சனாதிபதி அவர்களால் அவரது கைப்பட எழுத்தாணைமூலம் நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், உயர் நீதிமன்றத்தினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் மற்றெல்லா நீதிபதிகள் எனப் பொருள்படும்.

## தன்னிலைப் பிரேரணை மீது குறித்த சில ஆட்களை அகற்றுதல்

**84.** (1) ஏதேனும் சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை என்ற ஏதுவின்மீது பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் என்போரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான பிரேரணையொன்றைச் சனாதிபதிக்கு முன்வைப்பதற்கான தீர்மானம் பற்றிய முன்னறிவித்தல் அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சபாநாயகருக்கு கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் அத்தகைய தீர்மானத்தை ஏற்றுக் கவனித்து, அதனைப் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறச் செய்தல் வேண்டும்.

(2) (அ) மேற்படி (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானமொன்று பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர் பிரதம அமைச்சரினதும் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரினதும் கலந்தாலோசனையுடன் சம்பந்தப்பட்ட நீதிபதியின் மீது சார்த்தப்பட்ட துர்நடத்தையை அல்லது தகவின்மையை நுண்ணாய்வு செய்வதற்கு ஓய்வுபெற்ற மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக் குழாமொன்றை நியமித்தல் வேண்டும்.

(ஆ) சபாநாயகர் அத்தகைய விசாரணைக் குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவரை விசாரணைக் குழாத்தின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(3) அவ்வாறு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழாம் விசாரணையை இரண்டு மாதக் காலப்பகுதியினுள் முடிவுறுத்துதல் வேண்டுமென்பதுடன் உரிய விசாரணை நடைமுறையானது சட்டத்தினால் குறித்துரைக்கப்படும். எவ்வாறாயினும், சபாநாயகர், விசாரணைக் குழாத்தின் வேண்டுகோளின்பேரில் ஒரு தடவையில் ஒரு மாதத்திற்கு மேற்படாத வகையில் அத்தகைய கால எல்லையை நீடிக்கலாம்.

(4) விசாரணையின் நடவடிக்கைகள் முடிவுற்ற பின்னர், அவ்வாறு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழாம், அக்குழாத்தின் முன்னர் எடுக்கப்பட்ட சான்றின் நிகழ்ச்சிக் குறிப்புகளுடன் அதன் காண்புகளைச் சபாநாயகருக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் சபாநாயகர், சம்பந்தப்பட்ட நீதிபதி சார்த்தப்பட்ட துர்நடத்தைக்கு அல்லது தகவின்மைக்கு குற்றவாளியாக உள்ளாரென விசாரணைக் குழாமானது கண்டிருந்தால் மட்டுமே விசாரணைக் குழாத்தின் காண்புகளை பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட நீதிபதி குற்றவாளியல்லரென விசாரணைக் குழாம் கண்டிருந்தால் அவர் அதனைப் பாராளுமன்றத்திற்கு அறிவித்து நடவடிக்கைகளை முடிவுறுத்துதல் வேண்டும்.

(5) சம்பந்தப்பட்ட நீதிபதி சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை தொடர்பாகக் குற்றவாளியாக காணப்பட்டுள்ளாரென்று விசாரணைக் குழாம் அறிக்கையிட்டிருந்தால், சபாநாயகர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக அவ்வறிக்கையை முன்வைத்தல் வேண்டும். அத்தகைய தீர்மானம் (சமுகமளிக்காதோர் உட்பட) பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையோரினால் நிறைவேற்றப்பட்டால், எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை என்ற ஏதுவின்மீது சம்பந்தப்பட்ட நீதிபதியை அகற்றுவதற்காக அதனைச் சபாநாயகர் சனாதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(6) பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் அல்லது பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தாலும் விசாரணைக் குழாம் தனது விசாரணைகளைத் தொடர்ந்து நிகழ்த்தலாம்.

**85.** (1) (அ) அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட பாராளுமன்றச் செயலாளர் நாயகம்; அல்லது

(ஆ) அரசியலமைப்பின் 104உ ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி; அல்லது

(இ) அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி; அல்லது

(ஈ) அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்),

ஆகியோரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான பிரேரணையொன்றைச் சனாதிபதிக்கு முன்வைப்பதற்கான தீர்மானமொன்று பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய தீர்மானம் இந்நிலையியற் கட்டளையின் (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட குழு பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதி முடிவடையும் வரை தொடங்கப்படலாகாது.

(2) மேற்படி (1) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்மானமொன்று பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர் அத்தகைய தீர்மானத்தில் தரப்பட்டுள்ள கருமங்களை நுண்ணாய்வு செய்து அவற்றின் மீது பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு ஏழு உறுப்பினர்களுக்குக் குறையாதோரைக் கொண்டுள்ள பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

(3) (அ) மேற்படி (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட குழுவொன்று, எந்த ஆளின் பதவியகற்றுகை அதன் நுண்ணாய்வின் விடயப்பொருளாகவுள்ளதோ அந்த ஆளுக்கு அத்தகைய விசேட குழு எந்தத் தீர்மானத்தைப் பின்பற்றி நியமிக்கப்பட்டதோ அந்தத் தீர்மானத்தில் தரப்பட்டுள்ள விடயங்களின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டுமென்பதுடன் விசேட குழு குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் எழுத்திலான எதிர்வாதக் கூற்றொன்றை அளிக்கும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(ஆ) எந்த ஆளின் சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட குழுவினாலான நுண்ணாய்வின் விடயமாகவுள்ளதோ அந்த ஆள் நேரடியாகவோ அல்லது ஒரு சட்டத்தரணிமூலமாகவோ விசேட குழுவின் முன்னர் தோன்றி அத்தகைய குழுவினால் செவிமடுக்கப்படுவதற்கும் அத்தகைய ஆளுக்கெதிராகச் செய்யப்பட்ட சார்த்துரைகளை இல்லையென நிரூபிப்பதற்கு வாய்மொழி மூலமான அல்லது ஆவணமுறையான சான்றை அளிப்பதற்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(4) மேற்படி (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட குழு, எவரேனும் ஆளைக் கட்டளையிட்டழைப்பதற்கும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் கோருவதற்கும் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், குழுவின் கூட்டநடப்பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அரைவாசிக்குக் குறையாததாக அமைதலும் வேண்டும்.

(5) இந்நிலையியற் கட்டளையின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட விசேட குழு, அதனாற் செய்யப்படும் நுண்ணாய்வுகளின் முடிவில் அதன்முன் எடுக்கப்பட்ட சான்றுக் குறிப்புக்களுடன் அதன் முடிவெடுப்புக்களையும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதுடன், பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருதல் தக்கதென அது கருதக்கூடிய எவ்விடயங்கள் பற்றியும் விசேட அறிக்கையையும் சமர்ப்பிக்கலாம்.

(6) இந்நிலையியற் கட்டளையின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பிரேரணையொன்றைச் சனாதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானமொன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர், பாராளுமன்றத்தின் சார்பில் அப்பிரேரணையைச் சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## விவாத விதிகள்

**86.** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர, பாராளுமன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு விடயத்திலும் உறுப்பினரொருவர் ஒரு முறைக்கு மேல் உரையாற்றலாகாது:-

(அ) புதிய விடயமெதையும் புகுத்தாமல் தமதுரையில் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்ட பொருட்பகுதியை விளக்குவதற்காக உரையாற்றுதல்; அல்லது

(ஆ) ஒழுங்குப் பிரச்சினை ஒன்றின்மீது உரையாற்றுதல்.

**87.** ஏதேனும் பிரேரணையை அல்லது திருத்தத்தைப் பிரேரிக்கின்ற உறுப்பினர் அதற்கு ஆதரவாக உரையாற்றலாம். எவ்வாறாயினும், அப்பிரேரணை அல்லது திருத்தம் முறையாக வழிமொழியப்படும் வரை மேற்கொண்டு விவாதம் அனுமதிக்கப்படுதலாகாது என்பதுடன் அப்பிரேரணை சபைக்கு விடப்படுதலுமாகாது.

**88.** தமது இடத்தில் எழுந்து நின்று அக்கிராசனத்திற்குத் தலைசாய்ப்பதன்மூலம் ஓர் உறுப்பினர் ஒரு பிரேரணையையோ திருத்தத்தையோ வழிமொழியலாம். இதனால் அவர் விவாதத்தில் பின்னொரு கட்டத்தில் உரையாற்றும் உரிமையை இழக்கமாட்டார்.

**89.** சபாநாயகரால் ஒரு பிரேரணை முழுமையாகச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் உறுப்பினர் எவரும் அப்பிரேரணை மீது உரையாற்ற முடியாது. ஒரு பிரேரணையில் "ஆம்", "இல்லை" எனும் குரல்களின் பின்னர் அந்தப் பிரேரணை முழுமையாகச் சமர்ப்பிக்கப்பட்டதாகிவிடும்.

**90.** விவாதத்திற்குரிய ஒரு பிரேரணை பிரேரிக்கப்பட்டு விவாதித்து நிறைவேற்றப்பட்டால் அத்தகைய பிரேரணையை மீண்டும் அதே அமர்வுத்தொடரில் சபாநாயகரின் அனுமதியின்றிப் பிரேரிக்க எந்தவோர் உறுப்பினரும் தகுதியற்றவர் ஆவார். அத்துடன் பாராளுமன்றம் ஒரு அமர்வுத்தொடரில் முடிவுசெய்த ஒரு விடயத்தை அதே அமர்வுத்தொடரில் சபாநாயகரின் அனுமதியின்றி ஒரு விவாதத்தில் புதுப்பிக்கவும் ஓர் உறுப்பினர் தகுதியற்றவராவார்.

## பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்ற உறுப்பினர்களுக்கான விதிகள்

**91.** பாராளுமன்றத்தில் பரிசீலனையில் இருக்கும் எந்தவொரு விடயத்திலும் உரையாற்றும்போது பின்வரும் விதிகள் கண்டிப்பாகக் கவனிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஒவ்வொரு உறுப்பினரும் சபாநாயகரை நோக்கியே உரையாற்ற வேண்டுமென்பதுடன், சபாநாயகரின் அனுமதியுடனன்றி, தமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தினிலிருந்து எழுந்து நின்றே உரையாற்ற வேண்டும்;

(ஆ) ஒழுங்குப் பிரச்சினை ஒன்றின்மீது அல்லது உரையாற்றும் உறுப்பினர் இடமளித்தாலன்றி உறுப்பினரொருவர் உரையாற்றும்போது எவரும் இடையில் குறுக்கிடலாகாது;

(இ) உறுப்பினரொருவர் தனது உரையை முடித்ததும் தமது இருக்கையில் மீண்டும் அமர வேண்டுமென்பதுடன் உரையாற்ற விரும்பும் வேறு எந்த உறுப்பினரும் அப்பொழுது எழுந்து நிற்கலாம்;

(ஈ) ஒரே நேரத்தில் இரண்டு உறுப்பினர்கள் எழுந்து நின்றால் முதலில் தன் பார்வையில் பட்ட உறுப்பினரை உரையாற்றும்படி சபாநாயகர் அழைக்க வேண்டும்;

(உ) ஒவ்வொரு உறுப்பினரும் கலந்துரையாடப்படும் விடயத்திற்குட்பட்டே தமது உரையை நிகழ்த்த வேண்டும்;

(ஊ) உறுப்பினரெவரும் ஏதேனும் பிரேரணையின் அல்லது விவாதத்தின்போது நீதிமன்றத் தீர்ப்பின் கீழுள்ள ஏதேனும் விடயம் அல்லது நீதித் தீர்ப்பொன்று நிறைவுபெறாதிருக்கும் ஏதேனும் விடயம் பற்றிக் குறிப்பீடு செய்தலாகாது. குறித்த விதியை மீறி நீதிமன்றத்தின் முன்னிலையிலுள்ள விடயம் பற்றிக் குறிப்பிடுகின்ற எவரேனும் உறுப்பினரைச் சபாநாயகர் அல்லது தவிசாளர் அவரது ஆசனத்தில் அமருமாறு பணிக்கலாம்:

ஆயினும், நீதிமன்றத்தின் முன்னிலையிலிருக்கும் நீதி நடவடிக்கைகளின் விளைவுகளிற்கு உண்மையான மற்றும் கணிசமான ஆபத்தை அல்லது தீங்கை அந்த விடயம் ஏற்படுத்தாது எனச் சபாநாயகர் கருதுவாரானால் அவர் அத்தகைய விடயத்தை அனுமதிக்கலாம்; (நீதிமன்றத்தின் முன்னிலையிலுள்ள விடயம் தொடர்பான விதி)

(எ) உரையாற்றுகின்ற அல்லது சமுகமளித்திருக்கின்ற உறுப்பினரொருவரினால் ஏதேனும் அவதூறான அல்லது ஒழுங்கீனமான சொற்கள் பிரயோகிக்கப்பட்டால், சபாநாயகர் அவரை ஒழுங்கு பேணும்படி கட்டளையிட வேண்டுமென்பதுடன் அத்தகையவை ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்கப்பட வேண்டுமெனப் பணித்தலும் வேண்டும்;

(ஏ) உறுப்பினரெவரும் மற்றொரு உறுப்பினருக்கெதிராகத் தகாத நோக்கத்தில் குற்றம் சாட்டுதலோ அல்லது மற்றொரு உறுப்பினரின் தனிப்பட்ட விடயங்கள் பற்றிக் குறிப்பிடுதலோ ஆகாது;

(ஐ) உறுப்பினரொருவர் பாராளுமன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் மாத்திரமே உரையாற்றுதல் வேண்டும்;

(ஒ) பாராளுமன்றத்தின் முன் பிரேரணை இல்லாவிட்டாலும் பாராளுமன்றத்தின் இணக்கத்துடன் ஓர் உறுப்பினர் தனது தனிப்பட்ட விடயங்களைப் பாராளுமன்றத்தில் விளக்கலாம். ஆனால், அவ்விடயம் பற்றி விவாதம் எதுவும் அனுமதிக்கப்படலாகாது என்பதுடன், அவர் கண்டிப்பாகத் தனது நன்னடத்தையை எடுத்துக்காட்டும் வரையறைக்குள் நிற்றல் வேண்டும்;

(ஓ) சட்டமூலம், தீர்மானம், ஒழுங்குவிதி அல்லது பிரேரணை ஒன்றைப் பிரேரித்த உறுப்பினர் விவாத முடிவில் அது தொடர்பாகப் பதிலளிக்க உரிமையுடையவராக இருத்தல் வேண்டும்;

(ஔ) விதிகளை மீறுகின்ற எவரேனும் உறுப்பினரைச் சபாநாயகர் உடனடியாக ஒழுங்கு பேணும்படி பணிக்கலாம்;

(க) உறுப்பினர்கள் வாக்களிக்கும் நேரம் தவிர, பாராளுமன்றச் சபையினுள் நுழையும்போதும் வெளியே செல்லும்போதும் அக்கிராசனத்திற்குத் தலைசாய்த்து மதிப்பளித்தல் வேண்டும்;

(ங) அமர்வு ஒன்றின் முடிவில் சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றச் சபையை விட்டு வெளியேறவுள்ளபோது, சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றச் சபையை விட்டு வெளியேறும்வரை, உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து எழுந்துநிற்றல் வேண்டும்;

(ச) இந்நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நியாயமானதும் ஒப்புரவானதுமான முறையில் உறுப்பினர்களிடையே நேரத்தைக் குறித்தொதுக்குவதற்குச் சபாநாயகர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். எவர் உரையாற்ற வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் ஆளும் கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் முதற்கோலாசான்கள் அவ்வாறு உரையாற்றுவதற்குச் சபாநாயகரினால் அழைக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை வழங்குவதன் மூலம் சபாநாயகருக்கு உதவ வேண்டும்.

## உரையாற்றாத உறுப்பினர்களுக்கான விதிகள்

**92.** (1) பாராளுமன்றத்திலோ அல்லது முழுப் பாராளுமன்றக் குழுவொன்றிலோ விவாதம் நிகழும்போது எந்தவொரு உறுப்பினரும் -

(அ) பாராளுமன்றத்திற்குள் அல்லது குழுவிற்குள் பண்புடனும் ஒழுங்கான முறையிலும் பிரவேசிக்க வேண்டும்;

(ஆ) பாராளுமன்றச் சபாகூடத்தின் குறுக்கே போகக்கூடாது;

(இ) பாராளுமன்றத்தின் முன்னிருக்கும் விடயத்திற்குத் தொடர்பற்ற செய்தித்தாள்கள், நூல்கள் அல்லது கடிதங்கள் முதலியனவற்றை வாசித்தலாகாது;

(ஈ) புகைத்தலாகாது;

(உ) இன்னுமோர் உறுப்பினர் உரையாற்றும்போது அமைதியாயிருக்க வேண்டுமென்பதுடன் உரையாற்றும் உறுப்பினர் இடமளித்தாலன்றி அவரை இடைமறித்தலுமாகாது;

(ஊ) வாய்மூலத் தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்தி உரையாடுதலாகாது; அத்துடன்

(எ) பாராளுமன்றச் சபாகூடத்தின் மையப்பகுதியுள் பிரவேசித்தலாகாது.

**(2) ஒழுங்குப் பிரச்சினைகள்**

(அ) ஓர் உறுப்பினர் வாக்கெடுப்பு நடந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தவிர, வேறு எந்த சபை நடவடிக்கைமுறைகளிலும் உரிய நடைமுறை பின்பற்றப்பட்டதா அல்லது பின்பற்றப்படுகின்றதா என்பது தொடர்பான வினாவினை ஒழுங்குப் பிரச்சினையொன்றின்மூலம் முன்வைக்கலாம்.

(ஆ) ஒழுங்குப் பிரச்சினையொன்றின்போது குறிப்பிட்ட உறுப்பினர் ஒரு நிமிடத்திற்கு மேலாக பேச முடியாது என்பதுடன் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டிருக்கும் விடயம் தொடர்பாகவும் பேசக்கூடாது. ஒழுங்குப் பிரச்சினை பரிசீலனைக்குட்பட்டிருக்கும் விடயத்தினைவிட முன்னீடடையுமென்பதுடன் அவை பரிசீலனைக்குட்டுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் உரிய விடயம் தொடர்பான கலந்துரையாடலும் இடைநிறுத்தப்படும்.

(இ) இந்நிலையிற் கட்டளைகளிற்கிணங்கச் சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை தொடர்பாக உடனடியாகத் தீர்மானமொன்றினை எடுப்பார்; ஆனால் விசேடமான சந்தர்ப்பத்தில் அத்தீர்மானத்தைக் காலதாமதப்படுத்தலாம். சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் இந்நிலையியற் கட்டளையின் கீழ் தமது தீர்மானத்தை அறிவிக்கலாம் என்பதுடன் அத்தீர்மானத்தின்மேல் மேலதிக கலந்துரையாடலெதுவும் இடம்பெற அனுமதிக்கப்படுதலாகாது.

## முழுப் பாராளுமன்றக் குழு

**93.** (1) பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் ஒன்றின்மூலம் ஒரு முழுப் பாராளுமன்றக் குழு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படும்போது வினா விடுக்காமலே சபாநாயகர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டும்.

**94.** சபாநாயகர் அல்லது அவர் சமுகமளித்திராத சந்தர்ப்பத்தில் பிரதிச் சபாநாயகர் முழுப் பாராளுமன்றக் குழுவின் தவிசாளராகத் தலைமை வகித்தல்

வேண்டும். இருவரும் சமுகமளிக்காத சந்தர்ப்பத்தில் குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை வகித்தல் வேண்டும். சபாநாயகரும், பிரதிச் சபாநாயகரும், குழுக்களின் பிரதித் தவிசாளரும் சமுகமளிக்காத சந்தர்ப்பத்தில் தவிசாளர் குழாமிலுள்ள உறுப்பினரொருவர் தலைமை வகித்தல் வேண்டும்.

**95.** முழுப் பாராளுமன்றக் குழுநிலையிலான வாக்கெடுப்பு, "சபாநாயகர்" என்னும் சொல்லுக்குப் பதிலாகத் "தவிசாளர்" என்னும் சொல்லை இடுவதன்மூலம், 47 முதல் 49 வரையிலான நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளிற்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**96.** ஏனைய உறுப்பினர்களின் வாக்குகள் சமமாகப் பிரிந்தாலன்றி முழுப் பாராளுமன்றக் குழுவின் தவிசாளர் வாக்களித்தலாகாது; வாக்குகள் சமமாகவிருக்கும் சந்தர்ப்பத்தில் தவிசாளர் தமது தீர்வு வாக்கை அளித்தல் வேண்டும்.

**97.** பின்வரும் விடயங்கள் தவிர, சபாநாயகர் தலைமைவகிக்கும் சந்தர்ப்பங்களில் சபை நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் விதிகள் முழுப் பாராளுமன்றக் குழு நடவடிக்கைகளிற்கும் பொருந்தும்:-

(அ) ஒரு பிரேரணைக்கு முன்னறிவித்தல் தேவையில்லை.

(ஆ) ஒரு பிரேரணை வழிமொழியப்பட வேண்டியதில்லை.

(இ) உறுப்பினரொருவர் ஒரே பிரேரணைமீது ஒரு முறைக்குமேல் உரையாற்றலாம்.

**98.** பாராளுமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்களை மாத்திரமே ஒரு முழுப் பாராளுமன்றக் குழு பரிசீலனை செய்தல் வேண்டும்.

**99.** முழுப் பாராளுமன்றக் குழுவின் நடவடிக்கைகள் பாராளுமன்றக் கூட்ட அறிக்கையில் பதியப்படல் வேண்டும்.

## விசேட குழுக்கள்

**100.** பாராளுமன்றத் தீர்மானத்தின்மூலம் விசேட குழுவொன்று நியமிக்கப்படலாம்.

**101.** விசேட குழுவொன்று பாராளுமன்றத்தின் அனுமதியின்றி பன்னிரண்டிற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தலாகாது. அத்தகைய அனுமதி கோரும் பிரேரணைக்கு முன்னறிவித்தல் தேவைப்படும்.

**102.** ஒரு விசேட குழுவினாலான விசாரணையொன்றின் நோக்கெல்லை, அது எந்தக் கட்டளையின் நியதிகளின்கீழ் நியமிக்கப்படுகின்றதோ அந்தக் கட்டளையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; ஆனாலும், அது பாராளுமன்றத்தின் பணிப்பினால் விரிவாக்கப்படலாம் அல்லது மட்டுப்படுத்தப்படலாம். அத்தகைய கட்டளை, குழுவின் இறுதியறிக்கை முன்வைக்கப்படுவதற்கான காலத்தைக் குறித்துரைத்தல் வேண்டும்; ஆயினும், பாராளுமன்றம், அத்தகைய காலப்பகுதியை அது பொருத்தமானதானதெனக் கருதுகின்றவாறான குறித்துரைக்கப்பட்ட திகதி வரை நீடிக்கலாம்.

**103.** ஒவ்வொரு விசேட குழுவினதும் தவிசாளரும் உறுப்பினர்களும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். தவிசாளர் இல்லாதிருக்கும்

சந்தர்ப்பத்தில், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்பட்ட குழுவின் எவரேனும் உறுப்பினர் அக்கூட்டத்திற்கான தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

**104.** தவிசாளர் நியமிக்கும் நேரத்திலும் இடத்திலும் குழு தனது முதற் கூட்டத்தை நடத்தும். முதற் கூட்டத்திற்குப் பின் நிகழும் கூட்டங்கள் குழு தீர்மானிக்கும் நேரங்களிலும் இடங்களிலும் நிகழ்தல் வேண்டும்.

**105.** வேறுவகையாகக் கட்டளையிடப்பட்டாலொழிய, விசேட குழுவின் கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

**106.** விசேட குழுவொன்றில் வெற்றிடமொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர், காலத்திற்குக்காலம், அக்குழுவின் அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கு இன்னோர் உறுப்பினரை நியமிக்கலாம். விசேட குழுவின் முன்னனுமதியைப் பெறாமல் அக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும். இந்நிலையியற் கட்டளையின் கீழான ஒவ்வொரு நியமனமும் பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**107.** விசேட குழுவொன்றின் தவிசாளர் மூலவாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அளிக்கப்பட்ட வாக்குகள் சமமாகவிருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் அறுதியிடும் வாக்கொன்றைப் பிரயோகிக்கலாம்.

**108.** ஒரு விசேட குழுவிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு சட்டமூலத்திலோ அல்லது விடயத்திலோ அவ்விசேட குழு சாட்சியங்களை விசாரிக்க வசதி செய்ய வேண்டுமென விரும்பினால், ஆட்களையோ பத்திரங்களையோ பதிவேடுகளையோ அவ்விசேட குழு வரவழைப்பதற்கு ஒரு தீர்மானம்மூலம் பாராளுமன்றம் அதிகாரம் வழங்கலாம். அத்தகைய அதிகாரம் வழங்கப்பட்ட எந்த ஒரு குழுவும் தன்முன் அளிக்கப்பட்ட சாட்சியத்தின் பதிவறிக்கையுடன் பாராளுமன்றத்திற்குத் தனது கருத்துக்கள், குறிப்புரைகள் பற்றி அறிக்கையிட அனுமதி பெற்றிருக்கும். அத்துடன் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது தகுந்ததெனத் தான் கருதும் எந்த விடயம் பற்றியும் ஒரு விசேட அறிக்கையைச் சமர்ப்பிக்கவும் அனுமதி பெற்றிருக்கும்

**109.** பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலும் ஒரு விசேட குழு தனது புலனாய்வுகளைத் தொடர்ந்து நிகழ்த்தலாம். தனது அறிக்கையைக் குழு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும்வரை அல்லது பாராளுமன்றத்தின் பிரேரணை ஒன்றின் மீதன்றி ஒரு விசேட குழுவைக் கலைக்க முடியாது.

**110.** எந்தவொரு விசேட குழுவினதும் கூட்டத்தில் ஒவ்வொரு நாளும் சமுகமளிக்கும் உறுப்பினர்களின் பெயர்கள், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பெயர்கள், வாக்கெடுப்பு எதுவும் நிகழ்ந்தால் அங்கு பிரேரிக்கப்பட்ட பிரேரணை, பிரேரித்தவர் பெயர், அப்பிரேரணைமீது சமுகமளித்த உறுப்பினர்கள் அளித்த வாக்குகள் ஆகியன விசேட குழுவின் கூட்ட அறிக்கையில் பதியப்படல் வேண்டும். அத்தகைய கூட்ட அறிக்கைகள் சாட்சியக் குறிப்புகளுடன் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டு குழுவின் அறிக்கையுடன் அச்சிடப்படல் வேண்டும்.

## துறைசார் மேற்பார்வைக் குழுக்கள்

***111.** [(1) தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விடயங்களையும் பணிகளையும் கொண்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் எண்ணிக்கை இருபதுக்கு மேற்படலாகாது.

(2) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் ஒரு பாராளுமன்றம் தொடர்ந்திருக்கும் போது செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலோ அதன் விசாரணைகளைத் தொடர்ந்து நடாத்துதலும் வேண்டும்.

(3) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட சட்டமூலங்கள் தவிர குழுவிற்குப் பரிந்துரைக்கப்படும் ஏதேனும் சட்டமூலம், பொருத்தனை, குழுவின் விடயப்பரப்பெல்லையினுள் வரும் வருடாந்த அறிக்கை மற்றும் செயலாற்று அறிக்கை உட்பட மற்றும்/அல்லது ஏதேனும் குழு மற்றும்/ அல்லது அமைச்சரொருவர், எவ்விடயம் அல்லது தமது நியாயாதிக்கத்திற்குள்ளான விடயங்களும் பணிகளும் தொடர்பான வேறேதேனும் கருமம் தொடர்பாகப் பரிசோதனை செய்வதற்குத் தத்துவமுடையனவாதல் வேண்டும்.

(4) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அவற்றின் பொறுப்புக்களைப் பிரயோகிக்கின்ற சந்தர்ப்பங்களில் அவசியமானவை அல்லது பொருத்தமானவை என அவை கருதுகின்ற எவ்விடயம் தொடர்பாகவும் அத்தகைய புலனாய்வுகளையும் ஆய்வுகளையும் நடாத்தலாம்.

(5) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் ஒவ்வொரு மாதமும் இரண்டு நாட்களுக்கு குறையாமல் கூடுதல் வேண்டும்.

(6) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் பின்வரும் விடயங்களில் பாராளுமன்றத்திற்கு உதவுவதற்கென பொதுவான மேற்பார்வைப் பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) தற்போதுள்ள அரசாங்க கொள்கைகளின் பிரயோகம், நிருவாகம், நிறைவேற்றுகை, மற்றும் பயனுடைமை ஆகியவை பற்றிய அதன் பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்;

(ஆ) மாற்றுக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்கான எதிர்கால ஆராய்ச்சி மற்றும் எதிர்வுகூறலுக்கான அதன் செயற்பாடுகள்;

(இ) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் பிரயோகம், நிருவாகம், நிறைவேற்றுகை, மற்றும் பயனுடைமை தொடர்பாகவும் ஏதேனும் புதிய அல்லது மேலதிகச் சட்டங்களை இயற்றுவதற்கான அவசியத்தை அல்லது விருப்பினைச் சுட்டிக் காட்டக்கூடிய நிலைமைகள், சூழ்நிலைகள் ஆகியவை பற்றிய பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்;

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

(ஈ) ஏதேனும் சட்டம் அத்துடன் அவசியமான அல்லது பொருத்தமான மேலதிகச் சட்டவாக்கங்களை வகுத்தமைத்தல் பரிசீலித்தல் மற்றும் சட்டமாக்குதல் அல்லது ஏதேனும் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.

(7) அந்தந்த துறைசார் மேற்பார்வைக் குழுவின் நியாயாதிக்கத்தினுள் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது ஏதேனும் பதவியினை வகிப்பதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள எந்தவொரு நபரினதும் தகுதியினை பரிசோதனை செய்தலும் பொருத்தமான அமைச்சுக்கு அத்தகைய ஆட்கள் தொடர்பான விதப்புரைகளைச் செய்தலும்;

(8) பின்வருவோர் தவிர்ந்த எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களாகச் சேவையாற்றுவதற்குத் தகைமையுடையோராதல் வேண்டும்:—

(அ) சபாநாயகர்;

(ஆ) பிரதிச் சபாநாயகர்;

(இ) குழுக்களின் பிரதித் தவிசாளர்;

(ஈ) பிரதம அமைச்சர்;

(உ) பாராளுமன்ற சபை முதல்வர்;

(ஊ) பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்; அத்துடன்

(எ) அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள்.

(9) அரசியலமைப்பின் 45(1) ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள், அத்துடன் பிரதி அமைச்சர்கள் அத்தகைய அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் எந்த அமைச்சரவை அமைச்சரின் நோக்கெல்லையின் கீழ் பணியாற்றுகின்றாரோ அந்த அமைச்சரவையின் அமைச்சரின் ஏதேனும் விடயம், பணி, திணைக்களம் அல்லது நிறுவனம் என்பவற்றைப் போன்ற அதன் நியாயாதிக்கமும் தொடர்புபட்ட பணிகளும் உள்ளனவான ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவில் சேவையாற்றுவதற்குத் தகைமையுடையோராதலாகாது:

ஆயினும், சட்டமூலம் ஒன்று துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பத்தில் குழுவிற்கு உதவுவதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சரை அல்லது பிரதி அமைச்சரை குழுவானது அதன் கூட்டத்திற்கு அழைக்கலாம்.

(10) தெரிவுக் குழுவானது துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு உறுப்பினர்களைப் பெயர்குறிக்கும் போது, பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு உரிய கவனம் செலுத்தி, அத்தகைய அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் தலைவர்களினால் செய்யப்பட்ட பெயர் நியமனத்திற்கு இணங்கச் செயற்படல் வேண்டும்.

(11) குறிப்பிட்ட துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினரல்லாத எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் அக்கூட்டத்தில் நடைமுறைகளை அவதானிப்பதற்கு அக்குழுவின் தவிசாளரால் அனுமதிக்கப்படலாம்.

(12) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அதன் முதலாவது கூட்டத்திலும் அதன் பின்னர் தவிசாளர் பதவி வறிதாகிய பின்னர் கூடும் முதலாவது கூட்டத்திலும், துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(13) ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் முன் அனுமதியைப் பெறாமல் அத்தகைய குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(14) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அது அவசியமெனக் கருதுமிடத்து, அவசியமானவையெனக் குழு கருதக்கூடியவாறான அத்தகைய கருமங்களைப் பரிசோதனை செய்து அத்தகைய குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அதன் சொந்த உறுப்பினர்களிலிருந்து உபகுழுக்களை நியமிக்கலாம்.

(15) ஒரு துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் ஆற்றுப்படுத்துகைத் திகதியிலிருந்து ஆறு வாரங்கள் கழியும்வரை, பாராளுமன்றம் வேறுவகையாகப் பணித்திருந்தாலொழிய, பாராளுமன்றத்தினால் கவனத்திற் கெடுக்கப்படுதலாகாது. பாராளுமன்றமானது தீர்மானமொன்றின் மூலம் அத்தகைய காலப்பகுதியை தீர்மானிக்கலாம்.

(16) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும், ஏதேனும் சட்டமூலம் அல்லது வேறு ஏதேனும் பகிரங்க முக்கியத்துவம் வாய்ந்த கருமம் தொடர்பாக எவரேனும் பாதிக்கப்பட்ட அல்லது அக்கறைகொண்ட எவரேனுமாளிடமிருந்து சான்று கோரலாம்.

(17) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும், ஆட்களை அழைப்பதற்கும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் கோருவதற்கும் தத்துவமளிக்கப்படுவதுடன் அவர்களின் முன்னர் எடுக்கப்பட்ட சான்றின் நிகழ்ச்சிக் குறிப்புகளுடன் சேர்த்து அவர்களின் அபிப்பிராயங்களையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(18) ஒரு துறைசார் மேற்பார்வைக் குழு சட்டத்தை இயற்ற அல்லது சட்டவாக்கம் சாராத அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட விடயம் குறித்துரைக்கப்பட்ட மற்றும் அமைச்சுப் பொறுப்பைக் கொண்ட அமைச்சரவையின் அமைச்சர் அல்லது அவ்வாறு ஒதுக்கப்படாவிட்டால், பிரதமர் அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்ட பரிந்துரைகளை எட்டு வாரங்களுக்குள் நிறைவேற்றி, அந்த அவதானிப்புகள் தொடர்பாக அவர் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது குறிப்பிட்ட சிபாரிசுகள் நிறைவுசெய்ய முடியாது என அமைச்சர் கருதினால், அதற்கான காரணங்களை அவர் எழுத்துமூலமாக விளக்கி அவர் முன்மொழிகின்ற மாற்று நடவடிக்கைகளை சுட்டிக்காட்டுதலும் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும்.

(19) (அ) குழுவின் முன் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு விடயத்திலும் குழுவிற்கு உதவுவதற்கு 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஐந்திற்கு (5) மேற்படாத இளைஞர் பிரதிநிதிகளை தவிசாளர் அழைக்கலாம்.

(ஆ) தவிசாளரின் அனுமதியுடன், அவ்வாறு அழைக்கப்பட்ட இளைஞர் பிரதிநிதிகள், சாட்சிகளிடம் இருந்து கேள்விகளைக் கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதோடு மற்றும் குழுவின் முன் ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்: எவ்வாறாயினும், அந்த இளைஞர் பிரதிநிதிகள் குழுவில் வாக்களிக்க மாட்டார்கள்.

(இ) குழு தீர்மானிக்கின்றவாறான எந்தவொரு தீர்மானத்திற்கும் உட்பட்டு, அறிக்கைக்கான அநுபந்தம் ஒன்றாக குழுவின் அறிக்கையில் இளைஞர் பிரதிநிதிகளின் கருத்துகள், அவதானிப்புகள் மற்றும் அபிப்பிராயங்கள் உள்ளடக்கப்படுவதற்கு தவிசாளர் அனுமதியளிக்கலாம்.

(ஈ) இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அளவுகோல்கள் தெரிவுக் குழுவினால் செய்யப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.]

## அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்

***112.** [(1)ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்திலும் காலத்திற்கு காலம் தேவையானவாறு தெரிவுக்குழுவானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியவாறான அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கைக்கு சமமான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களை நியமிக்கலாம்:—

(அ) தவிசாளராக உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர்;

(ஆ) இராஜாங்க அமைச்சர்;

(இ) பிரதி அமைச்சர், அத்துடன்;

(ஈ) தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் வேறு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்.

(2) தனது கையொப்பத்தின் கீழான விண்ணப்பத்தின்மீது முன் அனுமதிபெறாமல் குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் இழந்துள்ளாரெனக் கருதப்படுவதோடு தெரிவுக்குழுவினால் இணக்கம் காணப்பட்டாலன்றி அதே கூட்டத்தொடரில் அத்தகைய குழுவுக்கு மீளநியமிக்கப்படுதலுமாகாது:

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

ஆயின், முதலில் பாராளுமன்றத்தில் பெற்ற அனுமதியுடன் பாராளுமன்ற அமர்வுகளிலிருந்து சமுகமளிக்காதிருக்கும் அத்தகைய உறுப்பினர் அத்தகைய காலப்பிரிவில் வரும் ஒரு நாளில் இடம்பெறுகின்ற அத்தகைய குழுவின் எந்தவொரு கூட்டத்திற்கும் முன்னைய ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

(3) ஒரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கூட்டத்திற்கு தான் உறுப்பினராகவில்லாத எவரேனுமொரு பாராளுமன்ற உறுப்பினரும் தவிசாளரின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம் என்பதோடு தவிசாளர் கோருகின்றபோது அதிலிருந்து நீங்கிக்கொள்ளுதலும் வேண்டும்.

(4) எவரேனும் பாராளுமன்ற உறுப்பினரால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்வது மற்றும் தவிசாளர் அல்லது பாராளுமன்றத்தினால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் தீர்மானங்கள், கட்டளைகள் மற்றும் ஆவணங்கள் உள்ளிட்ட எந்தவொரு விடயங்கள் தொடர்பிலும் பரிசீலனைசெய்து அது தொடர்பில் அறிக்கையிடுவது அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கடமையாகும்.

(5) (அ) குழுவின் கூட்டமானது குறித்த அமைச்சின் செயலாளருடனான கலந்தாலோசனையுடன் கூட்டப்படலாம்.

(ஆ) அமைச்சுசார் ஆலோசைனக் குழுவானது தவிசாளர் ஊடாக எந்தவொரு சட்டமூலம் அல்லது பிரேரணையை முன்னெடுப்பதற்கும் தத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவும் தவிசாளரினால் அழைக்கப்படும் எச்சந்தர்ப்பத்திலும் கூட வேண்டும். தவிசாளர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து தவிசாளரினால் ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒருமுறையேனும் கூட்டமொன்றை ஏற்பாடுசெய்வதோடு அர்த்தமுள்ள நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் வகைகூறுதல் அனைத்து அமைச்சு செயலாளர்களதும் கடமையாக இருப்பதோடு காலத்தற்கு காலம் அதன் சிபாரிசுகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களது எழுத்துமூல வேண்டுகோளின் பேரில் கூடிய விரைவில் ஒரு கூட்டம் கூட்டப்படுதல் வேண்டும்.

(7) அமைச்சுசார் ஆலோசனைக் குழுவானது எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பெற்று பரிசீலனை செய்வதற்கும் இடத்திற்கு இடம்செல்வதற்கும் தமக்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்களை பூரணமாக பரிசீலனை செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் கூடுவதற்கும் ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(8) அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களை கொண்டதாக இருக்கவேண்டுமென்பதோடு உரிய கூட்டநடப்பெண் இல்லாதபோது அத்தகைய அமைச்சுசார் ஆலோசைனக் குழுவினை தொழிற்படுத்தாமலிருப்பது அதன் தவிசாளரது கடமையாதல் வேண்டும்.

(9) குழுக்களிற்கான பொது விதிகள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களிற்கும் ஏற்புடையதாகும்.]

## சட்டவாக்க நிலையியற் குழு

**113.** (1) தவிசாளராக பிரதிச் சபாநாயகரையும் குழுக்களின் பிரதித் தவிசாளர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு பத்து உறுப்பினர்களையும் கொண்டுள்ள சட்டவாக்க நிலையியற் குழு எனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) தெரிவுக் குழுவானது அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் இக்குழுவில் சேவையாற்றுவதற்கான மேலதிகமான உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம்; சபாநாயகர் அத்தகைய மேலதிக உறுப்பினர்களை நியமிப்பதற்குத் தத்துவங் கொண்டவராவார்.

(3) குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(4) சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் கடமையானது, பாராளுமன்றத்தினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் உத்தேச நியதிச்சட்டங்களையும் சட்டமூலங்களையும் பரிசீலனை செய்தலுடன் வரையறுக்கப்படும்.

(5) தமது கடமைகளைச் செயற்படுத்துவதற்காக ஆட்களையும், பத்திரங்களையும், பதிவேடுகளையும் வரவழைப்பதற்கு குழு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் தவிசாளருக்கு மூலவாக்கு ஒன்றிருத்தல் வேண்டுமென்பதுடன் வாக்கெடுப்பின்போது வாக்குகள் சமமாகவிருக்கும் சந்தர்ப்பத்தில், அறுதியிடும் வாக்கொன்றும் அவருக்கு இருத்தல் வேண்டும்.

(7) சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் சட்டமூலம் ஒன்றிற்குப் பொறுப்பான ஓர் உறுப்பினர், அக்குழுவின் ஓர் உறுப்பினராக இல்லாத சந்தர்ப்பத்தில், அத்தகைய சட்டமூலம் பரிசீலிக்கப்படும் கூட்டம் எதற்கும் சமுகமளிக்கவும், அச்சட்டமூலத்தைப் பற்றி உரை நிகழ்த்தவும், அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எழும் எப்பிரச்சினை குறித்தும் திருத்தங்களைப் பிரேரித்து அக்குழுவின் ஓர் உறுப்பினர்போன்று வாக்களிக்கவும் உரிமையுடையவராவார்.

(8) சட்டவாக்க நிலையியற் குழுவின் நடைமுறை, ஏறத்தாழ முழுப் பாராளுமன்றக் குழுவின் நடைமுறையை ஒத்ததாக இருத்தல் வேண்டுமென்பதுடன் நிலையியற் குழுவொன்றின் கூட்ட அறிக்கைகள் முழுப் பாராளுமன்றக் குழுவொன்றின் கூட்ட அறிக்கைகள் பதியப்படுதல் போன்றே பதியப்படுதலும் வேண்டும். அத்துடன் குழுவானது பாராளுமன்றத்தால் ஏதேனும் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அக்காலவெல்லைக்குள் சட்டமூலத்தை அல்லது உத்தேச

நியதிச்சட்டத்தை உள்ளடக்கிய குழுவின் அறிக்கையினைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்:

ஆயினும், ஒரு அமர்வுத்தொடரின் இறுதியில் சட்டவாக்க நிலையியற் குழுவொன்று அதன் கலந்தாராய்வினை முடித்து அறிக்கையைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில் அக்குழுவின் நடவடிக்கைகள் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வுத்தொடரில் அச்சட்டமூலம் உத்தேச நியதிச்சட்டம் ஆற்றுப்படுத்தப்படும் சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

## சிறப்பு நோக்கங்களிற்கான குழுக்கள்

## தெரிவுக் குழு

**114.** (1) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் மற்றும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் அமைப்புருவாக்கம், எண்ணிக்கை, தொழிற்பாடுகள் மற்றும் கூட்டநடப்பெண் என்பவை பற்றி கவனத்திற்கொள்வதற்கும் அவற்றின் மீதான தனது அபிப்பிராயங்களை வசதியானவரை விரைவாகப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும் பின்வரும் குழுக்களில் சேவையாற்றுவதற்கு உறுப்பினர்களைப் பெயர்குறித்து நியமிப்பதற்கும் ஒவ்வோர் அமர்வுத்தொடரின் தொடக்கத்திலும் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழு எனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்:-

(அ) பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு;

(ஆ) நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு;

(இ) சபைக் குழு;

(ஈ) ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு;

(உ) சட்டவாக்க நிலையியற் குழு;

(ஊ) அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்;

(எ) அரசாங்க கணக்குகள் பற்றிய குழு;

(ஏ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு;

(ஐ) அரசாங்க நிதி பற்றிய குழு;

†(ஒ) வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு;

†(ஓ) பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழு;

†(ஔ) வழிவகைகள் பற்றிய குழு;

(க) பொது மனுக்கள் பற்றிய குழு;

(ங) உயர் பதவிகள் குழு; மற்றும்

(ச) பின்வரிசை உறுப்பினர் குழு

---

† 2022 நவம்பர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் விளைவாக ஏற்பட்ட இடைநேர் திருத்தம்.

(2) தெரிவுக் குழுவானது தவிசாளராகச் சபாநாயகரையும் ஒவ்வோர் அமர்வுத்தொடரினதும் தொடக்கத்தில் பாராளுமன்றத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய அரசியற் கட்சிகளின் தலைவர்களையோ அல்லது அவர்களின் நியமத்தர்களையோ உள்ளடக்கிய பன்னிரெண்டு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். தெரிவுக் குழுவானது பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் கூடுவதற்கும் காலத்துக்குக்காலம் அறிக்கையிடுவதற்கும் ஏதேனும் குழுவிற்கு எவரேனும் உறுப்பினர் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளபோது அது தொடர்பாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவிப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

## பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு

**115**. தவிசாளராகச் சபாநாயகரையும், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு எட்டு உறுப்பினர்களையும் கொண்டுள்ள பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும். சபாநாயகரால் பாராளுமன்றச் சபை முதல்வரின் கலந்தாலோசனையுடன் குழுவிற்கு ஆற்றுப்படுத்தக்கூடிய, பாராளுமன்றம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகக் குறித்தொதுக்கப்படவேண்டிய நேரத்தையும் அலுவல்களையும் குழுவின் வேறு அத்தகைய கருமங்களையும் கவனத்திற்கொண்டு முடிவு செய்வதும் குழுவின் கடமையாதல் வேண்டும். பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களின் கூட்ட அறிக்கை சகல உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

## நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு

**116**. தவிசாளராகச் சபாநாயகரையும் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு ஆறு உறுப்பினர்களையும் கொண்டுள்ள நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும். பாராளுமன்றத்தின் நடவடிக்கைமுறை மற்றும் அலுவல்களை நடாத்தும் கருமங்களைக் கவனத்திற் கொள்வதும் அவசியமெனக் கருதப்படக்கூடிய நிலையியற் கட்டளைகளிற்கான எவையேனும் திருத்தங்களை விதந்துரைப்பதும் பாராளுமன்றத்தினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடிய நிலையியற் கட்டளை தொடர்பான எல்லாக் கருமங்கள் மீதும் அறிக்கையிடுவதும் நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

## சபைக் குழு

**117**.(1) தவிசாளராகச் சபாநாயகரையும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களையும் கொண்டுள்ள சபைக் குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) உறுப்பினர்களின் வசதிகள் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் கவனத்திற்கொள்வதும் அவற்றின்மீது மதியுரையளித்தலும் சபைக் குழுவின் பணிகளாதல் வேண்டும். சபைக் குழுக் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகள் எல்லா உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

## ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு

†**118.** [(1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பத்து உறுப்பினர்களுக்கு மேற்படாதவர்களைக் கொண்ட ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் பணிகள் பின்வருவனவாகும்:-

(அ) ஓர் உறுப்பினரின் நடத்தை மற்றும் நற்பண்பு பற்றிய விதிகளின் மீறுகை தொடர்பான விடயங்கள் அல்லது பாராளுமன்றத்தின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில், உறுப்பினர் ஒருவரால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாட்டின் முதல் தோற்றத்தில் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக சபாநாயகர் திருப்தியடைவாராயின் அத்தகைய ஒரு முறைப்பாட்டை விசாரணை செய்தல்; மற்றும்

(ஆ) ஒவ்வொரு விடயம் தொடர்பான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தை மற்றும் நற்பண்பு பற்றிய விதிகள் மீறப்பட்டுள்ளதா என்பதையும் அவ்வாறு மீறப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அம்மீறுகையின் தன்மை அத்தகைய மீறுகை ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் என்பவற்றைத் தீர்மானிப்பதுடன் குழு பொருத்தமெனக் கருதக்கூடிய விதப்புரைகளைச் செய்தல்.

(3) குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற அவ்வாறான ஒரு முறைப்பாடு குழுவிற்குக் கிடைத்த திகதியிலிருந்து இரண்டு வார காலத்தினுள், குழுவின் விதப்புரைகளை சபாநாயகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆயினும், தனிச்சிறப்பான விடயங்களின் பேரில் சபாநாயகர் அக் காலப்பகுதியை நீடிக்குமாறான கோரிக்கைக்கு அனுமதியளிக்கும் தத்துவம் உடையவராதல் வேண்டும். குழுவிற்கு அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்களை விசாரணை செய்வதற்கு அவசியமானவாறான ஆட்களை அழைத்து விசாரிக்கவும் ஆவணங்களையும் வேறு பதிவேடுகளையும் வரவழைப்பதற்கும் தேவையான வேறு செயல்களைச் செய்வதற்கும் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும்.

(4) குழுவானது, பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தைக்கோவை விதிகளின் மீறுகை அல்லது கடைப்பிடிக்காமை தொடர்பாக அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தையும் விசாரணை செய்தல் வேண்டும். எல்லா உறுப்பினர்களும் சபையின் அல்லது சபையின் அதிகாரத்தின்கீழான அத்தகைய ஏதேனும் விசாரணையின் எல்லாக் கட்டங்களிலும் ஒத்துழைத்தல் வேண்டும். நடத்தைக்கோவை விதிகளின் சார்த்தப்பட்ட மீறுகை ஒன்றைப் பரிசீலிக்கின்ற கட்டத்தில் உறுப்பினரெவரும் அப்பரிசீலனை தொடர்பாகச் செல்வாக்குச்

---

† 2022 நவம்பர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

செலுத்துகின்ற நோக்கத்தில் வேண்டுமென்றோ அல்லது திட்டமிட்டவகையிலோ ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் உறுப்பினரொருவரின் ஆதரவை நாடுதலாகாது.

(5) குழுவானது அதன் பணிகளைச் செயற்படுத்துவதற்காக நிபுணர்களின் சேவைகளைப் பெறலாமென்பதுடன் ஆவணங்களை வரவழைத்தும் மற்றும் சாட்சிகளை அழைத்தும் விசாரணை செய்யலாம்.

(6) பாராளுமன்றம், ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் அறிக்கையில் செய்யப்பட்ட முடிவுகளையும் விதப்புரைகளையும் கவனத்திற்கொண்டு, அவசியமென அது கருதுகின்ற சந்தர்ப்பத்தில் உரிய உறுப்பினர் மீது தண்டனை ஒன்றை விதிக்கலாம்.

(7) குழுவானது, காலத்திற்குக்காலம் அதன் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

(8) குழுவின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கவியல்சார் மற்றும் வேறு துர்நடத்தை தொடர்பான விடயங்களை விசாரணை செய்வதுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலுமான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்காக அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்.]

## அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

***119.** [(1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கச் செலவுகளை எதிர்நோக்குவதற்காகப் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுகின்ற கணக்குகளையும் குழு தக்கதெனக் கருதும் பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதித்தல் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, ஏதேனும் திணைக்களத்தின், உள்ளூரதிகாரசபையின் பரிசோதனை செய்யப்பட்ட கணக்குகள், நிதிகள், நிதிசார் நடவடிக்கைமுறைகள், செயல்நிறைவேற்றம் மற்றும் பொதுவான முகாமை என்பன பற்றியும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம் பற்றியும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையானது நிவாரண நடவடிக்கை தேவைப்படுகின்ற விடயங்கள் தொடர்பான அவதானங்கள் பொதுநிதியின் முறையான உபயோகத்தை உறுதிப்படுத்துவதற்கான சிபாரிசுகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

(4) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேணடும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்.

(5) (அ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவானது, திணைக்களங்களினதும் உள்ளூரதிகாரசபைகளினதும் எல்லாக் கணக்குகளினதும் நிதிகளினதும் முகாமையினதும் மீது பரிசோதனை செய்து குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அவசியமென அது கருதும்போது அதன் சொந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய உபகுழுக்களை குழுவினால் பணிக்கப்பட்டவாறு நியமிக்கலாம்.

(ஆ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட ஏதாவது உபகுழுக்கள் தேவையானவாறு பாராளுமன்றத்திலோ அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஏதாவது தொடர்புடைய நிறுவனங்களிலோ அமர்வுகளை நடத்தலாம்.

(இ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(6) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்களில் எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும், பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(7) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். குழு ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான காரணமின்றி குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.]

## அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு

*120 [(1) தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலின் அல்லது வேறு பொறுப்புமுயற்சியின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனை செய்வது அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உடமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றின் பரிசோதனை செய்யப்பட்ட கணக்குகள், வரவுசெலவுத்திட்டங்கள் வருடாந்த மதிப்பீடுகள், நிதிகள், நிதிசார் நடவடிக்கைமுறைகள், செயல்நிறைவேற்றம் மற்றும் பொதுவான முகாமை என்பன பற்றியும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமம் பற்றியும் பாராளுமன்றத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அறிக்கையிடுதல் வேண்டும். அவ் அறிக்கையானது நிவாரண நடவடிக்கை தேவைப்படுகின்ற விடயம் தொடர்பான அவதானிப்புகள் பொது நிதியின் முறையான உபயோகத்தை உறுதிப்படுத்துவதற்கான சிபாரிசுகள் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(4) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேணடும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்குப் பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்

(5) (அ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவானது, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உடைமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றின் எல்லாக் கணக்குகள், வரவுசெலவுத்திட்டங்கள் வருடாந்த மதிப்பீடுகள், நிதிகள், முகாமை என்பவை தொடர்பாகப் பரிசோதனை செய்து குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அவசியமென அது கருதும்போது அதன் சொந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய எவையேனும் உபகுழுக்களை குழுவினால் பணிக்கப்பட்டவாறு நியமிக்கலாம்.

(ஆ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட எந்தவொரு உப குழுவிற்கும் தேவையானபோது பாராளுமன்றத்தில் அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு சம்பந்தப்பட்ட நிறுவனத்திலும் கூட்டத்தை நடாத்துவதற்கு சந்தர்ப்பமளிக்க முடியும்.

(இ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு எவரேனும் உறுப்பினர்கள் குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(6) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்களில் எவையும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து வினவுவதற்கும் பரிசீலனை செய்வதற்காக ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பவற்றைப் பார்வையிடவும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(7) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அனுமதியின்றி தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.]

## அரசாங்க நிதி பற்றிய குழு

***121.** [(1) தவிசாளர் எதிர்க்கட்சி உறுப்பினராகவிருத்தல் வேண்டுமென்ற வரையறைக்கு உட்பட்டு, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும்

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத தவிசாளரொருவரையும் பதினொரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளதுமான அரசாங்க நிதி பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பின்வருவனவற்றைப் பரிசீலனை செய்வது அரசாங்க நிதி பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்:—

(அ) அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின்கீழ் வருமானங்ளைச் சேகரித்தல்;

(ஆ) திரட்டுநிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தல்;

(இ) குறித்துரைக்கப்பட்ட சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்காக அரசாங்க நிதிகளைப் பயன்படுத்துதல்;

(ஈ) அரசாங்க நிதிகளைப் பயன்படுத்துதல்;

(உ) நடப்பாண்டுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் பொருளாதார மந்தநிலைகள், ஒதுக்கீட்டைக் மாற்றுதல் மற்றும் எதிர்பார்க்கப்படாத மீதி;

(ஊ) நடப்பாண்டுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்;

(எ) பொதுக் கடனும் கடன் சேவையும்;

(ஏ) 2003 ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின்கீழான அறிக்கைகளும் கூற்றுக்களும்; மற்றும்

(ஐ) அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலங்கள், பிரேரணைகள், பிரேரணைகளுக்கான அங்கீகாரம் மற்றும் கட்டளைகள்.

(3) பாராளுமன்றம் அல்லது ஏதேனும் குழு அல்லது அமைச்சரால் எந்நவொரு விடயத்தையும் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு முன்வைக்கப்படலாம்.

(4) குழுவானது, மேற்படி (2) மற்றும் (3) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களில் இருந்து எழுகின்ற பிரச்சினைகளைக் காலத்துக்காலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(5) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை ஆரம்பிப்பதற்குமுன் குழுவினால்—

(i) மொத்த மதிப்பிடப்பட்ட செலவினத்தையும் அரசிறையையும் கணக்கிடுவதற்கான அடிப்படையாக பயன்படுத்தப்பட்ட அரசிறை நிதிசார் மற்றும் பொருளாதார ஊகங்களின் மீதான; மற்றும்

(ii) நிதி ஒதுக்கீடு அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இசைவாதல் பற்றிய;

அறிக்கை முன்வைக்கப்பட வேண்டும்.

(6) அரசாங்க நிதி பற்றிய குழுவினால் அறிக்கையொன்று பாராளுமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படும்போது, அது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் அதன் பின் அவ்வறிக்கை தொடர்பில் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் எட்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(7) அரசாங்க நிதி பற்றிய குழுவினால் ஆட்களை அழைப்பதற்கும் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வரவழைப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் பிரேரணைகள் மற்றும் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை சாட்சிக் குறிப்புகளுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(8) கூட்ட நடப்பெண் நான்கு அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.]

## வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு

†**122**. [(1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) இலங்கையின் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் ஏனைய நிதியியல்துறை சேவைகளின் தொழில்வாண்மை ரீதியான நியமங்கள் மற்றும் கலாசாரம் பற்றி பரிசீலித்தல் மற்றும் அறிக்கையிடுதல்;

(ஆ) சட்டவாக்க மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தும் செயற்பாடுகளுக்காக நியமங்களை மேம்படுத்துவதற்கும் விதப்புரைகளை ஏற்பாடு செய்வதற்கும் இந்நிறுவனங்களின் நுகர்வோர்களுக்கு வலுவூட்டுவதற்கும் அதிகரித்த ஒழுக்கநெறியை ஏற்பாடு செய்வதற்கும் மேம்பட்ட தொழிற்பாடு மற்றும் பன்முகத்தன்மையான வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் ஏனைய நிதித்துறைகளை உருவாக்குவதற்குமான மறுசீரமைப்புகள் பற்றிய விதப்புரைகளை மேற்கொள்ளுதல்;

(இ) சர்வதேச பொருளாதார கொள்கை, வெளிநாட்டு நிதிச் சேவைகள் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் இலங்கையின் நாணய விவகாரங்கள், கடன் மற்றும் நிதிச் சேவைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி மீதான அவற்றின் விளைவுகள் பற்றி ஒரு விரிவான அடிப்படையில் கற்கையை மேற்கொள்ளுதல் மற்றும் மீளாய்வு செய்தல்;

(ஈ) இலங்கை மத்திய வங்கி ஒதுக்கு முறைமை, ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு வர்த்தக ஊக்குவிப்பு, ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், வணிக, கைத்தொழில் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதியுதவி, நிதியியல் சந்தை, நிதி நடவடிக்கைமுறைகள், நிதி நிறுவனங்களின்

---

† 2022 நவம்பர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக புதிய பாராளுமன்ற நிலையியற் கட்டளை உட்புகுத்தப்பட்டது.

செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம், நாணயத் தாள்கள், நாணயக் குற்றிகள் மற்றும் நாணயம் ஆகியவற்றினை பகிர்ந்தளித்தல் மற்றும் மீட்பு, கடன் கொடுத்தல் மற்றும் அறவிடல் தொடர்பான விடயங்கள் ஆகியவை உள்ளடங்கலாக நாணயக் கொள்கையுடன் தொடர்பான விடயங்களை தொடர்ச்சியான ஓர் அடிப்படையில் மீளாய்வு செய்வதற்கும் மற்றும் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டையும் தொடர்ச்சியையும் உறுதிப்படுத்துவதற்கும் விதப்புரைகளை ஏற்பாடு செய்தல் உட்பட நாணயக் கொள்கை தொடர்பான விடயங்களை தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்தல்;

(உ) இலங்கையில் வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதங்களை (Sri Lanka Inter Bank Offered Rate (SLIBOR)) நிர்ணயிக்கும் செயற்பாட்டின் போது ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் வணிகப் போட்டி தொடர்பாக விசாரனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பரிசீலித்தல்;

(ஊ) காப்புறுதி உள்ளடங்கலாக அரச நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிச் சேவைகளை ஏற்பாடு செய்தல் தொடர்பாக கூட்டிணைந்த ஆளுகை, செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் அக்கறைகளின் முரண்பாடு ஆகியவற்றை மீளாய்வு செய்தல்;

(எ) காப்புறுதி உள்ளடங்கலாக நிதிக் கொள்கை மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பாக அரசாங்கம் மற்றும் எதிர்கால அரசாங்கங்கள் மற்றும் பாராளுமன்றத்தின் பொறுப்புகளைப் பற்றி கொள்கை மீளாய்வுகளை மேற்கொள்ளுதல்;

(ஏ) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம் மற்றும் மூலதனச் சந்தை முன்னேற்றங்கள் பற்றி பரிசீலித்தல் மற்றும் அறிக்கையிடுதல்; மற்றும்

(ஒ) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம் பற்றி பரிசோதனை செய்தல் மற்றும் அறிக்கையிடுதல்.

(3) அரசுக்குச் சொந்தமான ஏதேனும் வங்கி அல்லது காப்புறுதி உட்பட நிதிச்சேவைகளை வழங்கும் ஏதேனும் வேறு நிறுவனம் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள வேறு நிறுவனங்கள் பற்றிய கண்டறிதல்களையும் அத்துடன் அதிலிருந்து எழும் ஏதேனும் விடயத்தையும் குழு மூன்று மாதங்களுக்கொரு தடவை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். இவ்வறிக்கை பரிகார நடவடிக்கைகள் தேவைப்படும் விடயங்கள் மற்றும் ஏதேனும் விதப்புரைகள் இருப்பின் அவை பற்றிய அவதானிப்புக்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(4) வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக்

காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேணடும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்குப் பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும்.

(5) (அ) குழு, தேவைக்கேற்றவாறு ஏனைய நிறுவனங்களைப் பரிசீலிப்பதற்கு அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமித்தல் வேண்டும். இருப்பினும், ஏனைய குழு உறுப்பினர்கள் விரும்பினால் இவ்வாறான ஏதாவது குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். குழு அவசியமானது எனக் கருதும் அவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவ்வாறான உப குழுக்கள் குழுவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(ஆ) குழு அல்லது குழுவினால் நியமிக்கப்படும் உப குழு தேவைக்கேற்றவாறு குழுவினால் தீர்மானிக்கப்படும் சம்பந்தப்பட்ட ஏதாவது நிறுவனங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அமர்வுகளை நடாத்துதல் வேண்டும்.

(6) குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(7) வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு அல்லது அதன் உப குழு எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும், பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(8) வங்கி மற்றும் நிதிச் சேவைகள் குழுவின் கூட்ட நடப்பெண் ஆனது ஐந்து உறுப்பினர்களாக இருக்கும். குழுவால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய உரிய காரணமின்றி அக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.]

## பொருளதார உறுதிப்படுத்தல் பற்றிய குழு

†**123.** [(1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவின் பணிகளாவன:–

(அ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை, முகாமைத்துவம், தொழிற்பாட்டு வினைத்திறன், கொள்கைச் சட்டகம், சட்டச் சட்டகம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றைப் பரிசீலித்தல்;

(ஆ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதி உறுதிப்பாடு, கடன் முகாமைத்துவம், இலாபம் மற்றும் முதலீட்டு முகாமைத்துவம் ஆகியவற்றைப் பரிசீலித்தல்;

(இ) சொத்துக்களின் உரிமை நீக்கத்துக்கான தேவைப்பாடுகளையும் அரச – தனியார் பங்குடைமைகளுக்கான வாய்ப்புகளையும் இழப்புகளைக் குறைத்து அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இலாபங்களை அதிகரிப்பதற்கான உபாயமார்க்கங்களையும் பரிசீலித்தல்;

(ஈ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளால் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்கள் தொடர்பான மனித வள முகாமைத்துவம், மிகை அல்லது தேவைக்கு மேற்பட்ட பணியாளர் குறைப்பு, ஊதியங்கள் மற்றும் நியதிச்சட்டக் கொடுப்பனவு நிலுவைகளை செலுத்தாதிருத்தல் மற்றும் ஊதியங்கள் மற்றும் படிகளை மேலதிகமாகச் செலுத்துதல் ஆகியவற்றைப் பரிசீலித்தல்.

(3) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினாலும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தினாலும் ஆளுகை செய்யப்படும் அரசுக்குச் சொந்தமான ஏதேனும் தொழில்முயற்சிகள் பற்றிய கண்டறிதல்களை, குழு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேணடும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை

---

† 2022 நவம்பர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக புதிய பாராளுமன்ற நிலையியற் கட்டளை உட்புகுத்தப்பட்டது

சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்குப் பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும்.

(5) (அ) குழு தேவைக்கேற்றவாறு, ஏனைய நிறுவனங்களைப் பரிசீலிப்பதற்கு அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமித்தல் வேண்டும். இருப்பினும், ஏனைய குழு உறுப்பினர்கள் விரும்பினால் இவ்வாறான ஏதாவது குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். குழு அவசியமானது எனக் கருதும் அவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவ்வாறான உப குழுக்கள் குழுவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(ஆ) குழு அல்லது குழுவினால் நியமிக்கப்படும் உப குழு தேவைக்கேற்றவாறு குழுவினால் தீர்மானிக்கப்படும் சம்பந்தப்பட்ட ஏதாவது நிறுவனங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அமர்வுகளை நடாத்துதல் வேண்டும்.

(6) குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(7) பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழு அல்லது அதன் உப குழு எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும், பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(8) பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவின் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். குழுவினால் ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான காரணமின்றி அக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.]

## வழிவகைகள் பற்றிய குழு

†**124.** [(1) நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துகையில் அரசாங்கத்திற்கு மேலதிக வருவாயைத் திரட்டுவதற்கும் அரசாங்கத்தின் செலவினங்களைக் கருத்தில் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும் நோக்கத்திற்காக தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும்

† 2022 நவம்பர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக புதிய பாராளுமன்ற நிலையியற் கட்டளை உட்புகுத்தப்பட்டது

அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட வழிவகைகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அரசாங்க வரிவிதிப்பு, இறுப்பு மற்றும் அரசாங்கத்தின் வருமானங்களை அதிகரிக்கும் வழிகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் பரிசீலனை செய்வதற்கும் அவசியம் ஏற்படும் போது தேவையானவிடத்து வரிவிதிப்பு மற்றும் இறுப்புகள் பற்றிய தற்போதுள்ள கொள்கைகளுக்கான மாற்றங்களை முன்மொழிவதற்கான தத்துவத்தையும் இக்குழு கொண்டிருத்தல் வேண்டும்.

(3) குழுவின் கடமைகளை நிறைவேற்றும் போது, குழு பின்வருவன பற்றி பரிசீலனையை மேற்கொண்டு விதப்புரைகளை வழங்குதல் வேண்டும்:—

(அ) பயனுறுதியான வருமானச் சேகரிப்புப் பொறிமுறைகள்;

(ஆ) உள்நாட்டு இறைவரிச் சட்டங்களுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் ஏனைய சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள வருமான வழிகள்;

(இ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளில் ஏற்புடையதாகவுள்ள இறுப்பு, சுங்கச் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை உள்ளடக்கிய சுங்கம் மற்றும் சுங்க நிர்வாகம் தொடர்பான விடயங்கள்;

(ஈ) அனைத்து வகையான வர்த்தக உடன்படிக்கைகள், பண்ட உடன்படிக்கைகள் மற்றும் அவற்றின் நடைமுறைப்படுத்தல் அதேபோன்று இவ்வுடன்படிக்கைகளின் சர்வதேச விதிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அம்சங்கள் தொடர்புடைய விடயங்கள்;

(உ) இறக்குமதிக் கைத்தொழிலின் தாக்கங்கள், இறக்குமதிக் கொள்கைகள், போட்டித்தன்மையான இறக்குமதிச் சந்தையை ஊக்குவிப்பதற்கான பொறிமுறைகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் மற்றும் நேர்மையற்ற இறக்குமதிகள் மற்றும் அத்தகைய இறக்குமதி நடைமுறைகளை உள்ளடக்கிய இறக்குமதிக் கைத்தொழிலுடன் தொடர்புடைய விடயங்கள்;

(ஊ) ஏற்றுமதிக் கொள்கைகள், ஏற்றுமதி ஊக்குவிப்புப் பொறிமுறைகள், சந்தை நுழைவு மற்றும் போட்டி, கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களின் தொடர்ச்சியான விநியோகம், இருதரப்பு மற்றும் பல்தேசீய வர்த்தக உறவுகளை உள்ளடக்கிய வர்த்தகக் கைத்தொழிலுடன் தொடர்புடைய குறித்த விடயங்கள்;

(எ) அனைத்து அரசாங்க ஓய்வூதியங்கள், சுகாதாரப் பராமரிப்பு, நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், அவற்றின் கொடுப்பனவுகள் மற்றும் கொள்கைகள், சிறுவர்பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளிட்ட அரசாங்க சமூக சேவை நிகழ்ச்சித் திட்டங்கள், உடல் அல்லது உள குறைபாடுள்ள ஆட்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள், புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்பான விடயங்கள்;

(ஏ) அவசரகால நிவாரணங்களை வழங்குதல் மற்றும் தொடர்பான கொள்கைகள் சம்பந்தமான விடயங்கள்.

(4) தற்போதுள்ள சட்டங்களுக்கு வரையறுக்கப்பட்டு குழுவின் நோக்கெல்லைக்குள் அடங்கும் அனைத்து விடயங்கள் மீதும் குழு பொதுவான மேற்பார்வை தொடர்பில் தத்துவமுடையதாக இருத்தல் வேண்டும்:

ஆயினும், குழுவின் நோக்கெல்லைக்குள் வரும் விடயங்கள் பற்றிய தற்போதுள்ள சட்டங்களில் திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கு அல்லது நீக்குவதற்கு புதிய சட்டவாக்கம் பற்றிய விதப்புரைகளை குழு மேற்கொள்ளலாம்.

(5) குழு தமது கண்டறிதல்கள் பற்றிய அறிக்கையை மூன்று மாதத்துக்கு ஒரு தடவை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதுடன் ஏதாவது பரிகார நடவடிக்கை மற்றும் விதப்புரைகள் தேவைப்படும் விடயங்கள் ஏதேனும் இருப்பின் அவை பற்றிய அவதானிப்புகளையும் அவ்வறிக்கை உள்ளடக்குதல் வேண்டும்.

(6) வழிவகைகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேணடும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்குப் பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும்.

(7) குழு தேவைக்கேற்றவாறு, ஏனைய நிறுவனங்களைப் பரிசீலிப்பதற்கு அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமித்தல் வேண்டும். ஆயின், ஏனைய உறுப்பினர்கள் விரும்பினால் இவ்வாறான ஏதாவது குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். அந்த உப குழு அவசியமானது எனக் கருதும் அவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவ்வாறான உப குழுக்கள் குழுவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(8) வழிவகைகள் பற்றிய குழுவிற்கும் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட எந்தவொரு உப குழுவிற்கும் தேவையானபோது பாராளுமன்றத்தில் அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு சம்பந்தப்பட்ட நிறுவனத்திலும் கூட்டத்தை நடாத்துவதற்கு சந்தர்ப்பமளிக்க முடியும்.

(9) குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(10) வழிவகைகள் பற்றிய குழு அல்லது அதன் உப குழு எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும், பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(11) வழிவகைகள் பற்றிய குழுவின் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். குழுவினால் ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான காரணமின்றி அக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.]

## பொது மனுக்கள் பற்றிய குழு

*125. [(1)தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட பொது மனுக்கள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) முப்பதாம் நிலையியற் கட்டளையின் (10) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களைக் கவனத்திற்கொள்ளுதல் அதன் கடமையாதல் வேண்டும்.

(3) பகிரங்க அலுவலரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை அல்லது அதேபோன்ற பிற நிறுவனமொன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை ஏதேனும் மனு வெளிக்காட்டுகின்றதென பொது மனுக்கள் பற்றிய குழு கருதுமிடத்து, பொது மனுக்கள் பற்றிய குழு அத்தகைய மனுபற்றி விசாரணை செய்யலாம் அல்லது அத்தகைய மனுவை விசாரித்து அறிக்கையிடுவதற்காக நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தலாம்.

(4) பொது மனுக்கள் பற்றிய குழு, மனு ஒன்றை விசாரணை செய்த பின்னர் அல்லது பொது மனுக்கள் பற்றிய குழுவினால் நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரிற்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தப்பட்ட மனுவொன்று தொடர்பில் அவரது நுண்ணாய்வு முடிவுற்றதன்மேல் அவரால் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைக் கவனத்திற் கொண்டதன்பின்னர், அத்தகைய மனு அல்லது அறிக்கைமீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைபற்றி அதன் அபிப்பிராயத்தைப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலாம்.

(5) பொது மனுக்கள் பற்றிய குழு, அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றிய அதன் அபிப்பிராயத்தை, காலத்துக்குக்காலம் தகுதியானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய

---

* 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் ஊடாக ஏற்கனவே வலுவில் இருந்த பாராளுமன்ற நிலையியற் கட்டளை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பதிலீடு செய்யப்பட்டது.

மனுக்கள் மீதான அத்தகைய வேறு அவதானிப்புக்களுடன் சேர்த்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(6) அறிக்கையானது சபாபீடத்தில் இடப்படும்போது, சபாநாயகர் அத்தகைய அறிக்கையின் உள்ளடக்கத்தினை உரிய அமைச்சருக்கு அவரது அவதானிப்பு களுக்காக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வவதானிப்புகள் எட்டு வாரக் காலப்பகுதியினுள் அமைச்சரினால் எழுத்துமூலம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்.

(7) உரிய அமைச்சரின் அவதானிப்புகளைப் பெற்றபின்னர் சபாநாயகர் அத்தகைய அவதானிப்புகளின் பிரதியொன்றைத் தவிசாளருக்கும் மனுவைச் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். வழங்கப்பட்ட பதில் தொடர்பில் திருப்தியடைய முடியாதவிடத்து தகுந்த தீர்வுகளை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் கோரப்பட வேண்டும். அமைச்சரினால் ஒரு மாதகாலத்திற்குள் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன் அதனை நிறைவேற்றாமைக்கான காரணங்களை எழுத்துமூலம் முன்வைப்பதுடன் நிவாரணம் வழங்குவதற்காகக் கருத்திற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கை குறிப்பிடப்பட வேண்டும்.

(8) பொது மனுக்கள் பற்றிய குழு, அவசியமென அது கருதும்போது அக்குழுவின் உறுப்பினர்களிலிருந்து பொது மனுக்கள் பற்றிய குழுவினால் பணிக்கக்கூடியவாறான அத்தகைய மனுக்களை அல்லது அறிக்கைகளைப் பரிசோதனை செய்து அறிக்கையிடுவதற்காக பொது மனுக்கள் பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களைக் கொண்ட உபகுழுக்களை நியமிக்கலாம்.

(9) பொது மனுக்கள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழு ஏதேனும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசீலனை செய்வதற்கும், களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடுவதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(10) பொது மனுக்கள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். பொது மனுக்குழுவின் அனுமதியின்றி தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

## அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய குழு

**126.** (1) சபாநாயகரைத் தவிசாளராகவும் மற்றும் பிரதம அமைச்சர், பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உட்பட சபாநாயகரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு மூன்று உறுப்பினர்களையும் கொண்டுள்ளதுமான அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 41ஆ ஆம் உறுப்புரையின் அட்டவணையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களும் அவற்றின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் பிரயோகம், செயலாற்றுகை மற்றும் நிறைவேற்றுகை உள்ளடங்கலாக அவற்றின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையினை ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்திற்காகவும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(4) குழு, ஆணைக்குழுக்களின் வருடாந்த அறிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்பதுடன் அதன் கடமையை நிறைவேற்றும்போது ஆணைக்குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் அலுவலர்களையும் அழைப்பதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இக்குழு, சந்தேகங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக, ஆணைக்குழுவினால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள விடயங்கள் எவையேனுமிருப்பின் அவை தொடர்பான எந்த விளக்கத்தையும் கோராது.

## உயர் பதவிகள் பற்றிய குழு

**127.** (1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பன்னிரெண்டு உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட உயர் பதவிகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட்ட அல்லது ஏதேனும் பதவியில் பதவி வகிப்பதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளின் தகுதியை ஆராய்ந்து அத்தகைய ஆட்கள் தொடர்பாக விதப்புரைகள் செய்தல் உயர் பதவிகள் பற்றிய குழுவின் பணியாகும்.

(3) அமைச்சுக்களின் செயலாளர்கள், வெளிநாட்டு தூதரகங்களின் தலைவர்கள் மற்றும் உயர் பதவிகள் மீதான குழுவின் தீர்மானத்திற்கேற்ப தெரிவுசெய்யப்பட்ட கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் போன்ற பதவிகளிற்கு நியமிக்கப்பட்ட அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்களின் தகுதி தொடர்பாக மூன்று மாத காலப்பகுதியினுள் பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும்

(4) உயர் பதவிகள் பற்றிய குழு அதன் கடமைகளைப் புரிவதற்காக, எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து விசாரணை செய்வதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தை வரவழைத்துப் பரிசோதனை செய்வதற்கும் (2) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய எவரேனுமாளின் தகுதியை முழுமையாகப் பரிசீலனை செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும்.

(5) பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும், குழுவானது காலத்திற்குக்காலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கை செய்வதற்கும் அதன் பரிசோதனையைத் தொடர்ந்து நடாத்துவதற்கும் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும்.

(6) உயர் பதவிகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

## இணைப்புக் குழு

**128.** (1) சபாநாயகர் புதிய பாராளுமன்றமொன்றின் தொடக்கத்தில் இணைப்புக் குழுவை நியமித்தல் வேண்டும்.

(2) இணைப்புக் குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்: -

(அ) சபாநாயகர் - குழுவின் தவிசாளராக இருக்க வேண்டும்;

(ஆ) பிரதிச் சபாநாயகர்;

(இ) குழுக்களின் பிரதித் தவிசாளர்;

(ஈ) பாராளுமன்றச் சபை முதல்வர்;

(உ) பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்;

(ஊ) அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான்;

(எ) எதிர்க்கட்சியின் முதற்கோலாசான்;

(ஏ) ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு, அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்க நிதி பற்றிய குழு,† [வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு, பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு], சட்டவாக்க நிலையியற் குழு, துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள், பொது மனுக்கள் பற்றிய குழு, உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும் பின்வரிசை உறுப்பினர் குழு என்பவற்றின் தவிசாளர்கள்.

(3) இணைப்புக் குழுவானது பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்:-

(அ) குழுக்களின் வசதிகள் மற்றும் அவற்றின் பணியாட்டொகுதி பற்றிய எவையேனும் கருமங்கள்;

(ஆ) குழுக்களின் கூட்டங்களிற்காக குழு அறைகள் கிடைக்கக்கூடிய தன்மை;

(இ) குழுக்களிற்கான நிபுணர்களும் ஆராய்ச்சியாளர்களும் கிடைக்கக்கூடிய தன்மை;

(ஈ) குழுக்களின் கூட்டங்களிற்கு குழு உறுப்பினர்களின் வருகை; அத்துடன்

(உ) குழுக்களின் அறிக்கைகளை விவாதிப்பதற்கான நேர ஒதுக்கீடு.

(4) இணைப்புக் குழுவானது, ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களிற்கு ஒருதடவையாவது கூடுதல் வேண்டுமென்பதுடன் தவிசாளர் குழுவின் கூட்டங்களை அழைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.

---

† 2022 நவம்பர் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் விளைவாக ஏற்பட்ட இடைநேர் திருத்தம்.

(5) இணைப்புக் குழுவானது ஆட்களையும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் அழைப்பதற்கும், காலத்திற்குக்காலம் அமர்வதற்கும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும் தத்துவங்கொண்டதாதல் வேண்டும்.

## பின்வரிசைக் குழு

**129.** (1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பின்வரிசைக் குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பின்வரிசைக் குழு அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான், அரசாங்கக் கட்சியின் மூன்று பின்வரிசை உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சியின் மூன்று பின்வரிசை உறுப்பினர்களைக் கொண்டமைதல் வேண்டும்.

(3) எதிர்க்கட்சியிலிருந்து தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களாக இருப்பின் ஓர் இடம் எதிர்க்கட்சியிலுள்ள மிகப்பெரிய கட்சிக்கு குறித்தொதுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இன்னோரிடம் எதிர்க்கட்சியிலுள்ள இரண்டாவது மிகப்பெரிய கட்சிக்குக் குறித்தொதுக்கப்படுதலும் வேண்டும்.

(4) அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் தவிர அமைச்சரவையின் அமைச்சர்கள், அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் இக்குழுவின் உறுப்பினராகவிருப்பதற்கு தகுதியுடையவர் அல்லர்.

(5) அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் இல்லாத சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

(6) பின்வரிசையாளர் அலுவல்களிற்காக குறித்தொதுக்கப்பட்ட நாட்களில் எடுக்கப்படவேண்டிய அலுவல்களைத் தீர்மானித்தல் பின்வரிசைக் குழுவின் கடமையாதல் வேண்டும்.

(7) பின்வரிசைக் குழுவானது, விசேட நோக்கங்களிற்காகத் தாபிக்கப்பட்ட வேறேதேனும் குழுவிற்கான அதே தத்துவங்களையும் சிறப்புரிமைகளையும் உரிமைகளையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், குழுக்களிற்கான பொது விதிகள் ஏற்ற மாற்றங்களுடன் இக்குழுவிற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) பின்வரிசைக் குழுவானது அதன் கூட்டங்களிற்கு வருகைதரும்படி அரசாங்க அலுவலர்களை அழைக்கலாம்.

(9) ஏதேனும் கருமத்தின்மீது விவாதமொன்றை விரும்புகின்ற பாராளுமன்றத்தின் எவரேனும் பின்வரிசை உறுப்பினர் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டி பின்வரிசைக் குழுவிற்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்:-

(அ) ஒரு விவாதத்தை நடாத்துவதற்கான முக்கியத்துவம்;

(ஆ) பங்குபற்றக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை; அத்துடன்

(இ) அக்கருமமானது நடப்பு அமர்வுத்தொடரில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுள்ளதா அல்லது விவாதிக்கப்படுவதற்கு

அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதா அல்லது விவாதிக்கப்படும் சாத்தியமுள்ளதாவென்பது.

(10) பின்வரிசைக் குழுவானது இந்நிலையியற் கட்டளையின் (9) ஆம் பந்தியின்கீழ் எவரேனும் உறுப்பினரினால் செய்யப்பட்ட வேண்டுகோள் பொருத்தமானதெனக் கருதினால், அத்தகைய ஒரு விவாதத்திற்கான நேரத்தைக் குறித்தொதுக்குமாறு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினைக் கோரவேண்டும்.

(11) பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு அதன்பின்னர், அத்தகைய விவாதத்திற்கான பொருத்தமான நாளையும் நேரத்தையும் குறித்தொதுக்குதல் வேண்டும்.

## சிறப்பு நோக்கங்களிற்கான குழுக்களின் நடைமுறை

**130**. (1) நிலையியற் கட்டளைகளில் வேறுவகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, சிறப்பு நோக்கங்களிற்கான ஒவ்வொரு குழுவும், அதன் முதலாவது கூட்டத்தில் அலுவல்களைத் தொடங்குவதற்கு முன்னர், தவிசாளராக அதன் உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) தவிசாளருக்கு முதல் வாக்கொன்றும் அளிக்கப்பட்ட வாக்குகள் சமமாகவிருக்கும் சந்தர்ப்பத்தில் தீர்வு வாக்கொன்றும் இருத்தல் வேண்டும்.

(3) நிலையியற் கட்டளைகளில் வேறுவகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, வெற்றிடங்கள் தெரிவுக் குழுவினால் நிரப்பப்படுதல் வேண்டும். ஒரு குழுவில் காணப்படும் அத்தகைய ஒவ்வொரு வெற்றிடமும் நிரப்பப்படும்போது அது பற்றிப் பாராளுமன்றத்தின் அடுத்துவரும் கூட்டத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) நிலையியற் கட்டளைகளில் வேறுவகையாகக் குறிப்பிட்டிருந்தாலன்றி கூட்டநடப்பெண்ணானது மூன்று உறுப்பினர்களாதல் வேண்டுமென்பதுடன், தேவையான கூட்டநடப்பெண் இல்லாதபோது கூட்டமொன்றை நடாத்தாமலிருப்பது அத்தகைய குழுவின் தவிசாளரினது கடமையாதலும் வேண்டும்.

(5) குழுவொன்றின் கூட்டங்கள் தவிசாளரினால் கூட்டப்படுதல் வேண்டும்.

(6) தவிசாளர் இல்லாதபோது குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறெவரேனும் உறுப்பினர் தலைமைதாங்குதல் வேண்டும்.

(7) உரிய குழுவின் முன்னனுமதியைப் பெறாமல் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள குழுவின் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயினும், அவ்வுறுப்பினர் முன்கூட்டியே பெறப்பட்ட பாராளுமன்ற அனுமதியுடன் பாராளுமன்றத்தின் அமர்வுகளிற்குச் சமுகமளிக்காதிருக்கும் காலப்பகுதிக்குள் ஒரு தினத்தில் அத்தகைய குழுவின் ஏதாவது கூட்டம் நடைபெறுமானால் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.

## குழுக்களிற்கான பொது விதிகள்

**131**. (1) 85 ஆம் நிலையியற் கட்டளையின் (1)(அ) பந்தியின் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழுவைத் தவிர, செயலாளர் நாயகம் அல்லது செயலாளர் நாயகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பாராளுமன்றத்தின் வேறெவரேனும் உத்தியோகத்தர் ஒவ்வொரு குழுவிற்குமான செயலாளராதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு குழுவும் அவசியமென அது கருதும்போது, அத்தகைய குழுவினால் குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினுள் அத்தகைய கருமங்களைப் பரிசோதனை செய்து அத்தகைய குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அதன் சொந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய உபகுழுக்களை நியமிக்கலாம். அத்தகைய குழுவானது அவசியமென அது கருதும்போது உபகுழுவானது அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்களை முழுமையாகப் பரிசீலிப்பதற்குத் தேவையான கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து விசாரணை செய்வதற்கும் ஏதேனும் பத்திரத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தை வரவழைத்துப் பரிசோதனை செய்வதற்கும் பரிசீலனைக்காக இடத்துக்கிடம் செல்வதற்கும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் கூடுவதற்கும் அத்தகைய உபகுழுக்களிற்கு அதிகாரமளிக்கலாம்.

(3) மேற்படி இரண்டாம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உபகுழுவும் ஒரு தவிசாளரையும் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கு அதிகமான உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உபகுழுவின் கூட்டநடப்பெண் தவிசாளருட்பட இரு உறுப்பினர்களைக் கொண்டமைதல் வேண்டும்.

(4) ஏதேனும் குழுவிற்கான செயலாளர் குழுவின் பணியாட்டொகுதியினரிடையேயிருந்து ஒவ்வோர் உபகுழுவிற்கும் அலுவலர் ஒருவரைக் கையளிக்கலாம் என்பதுடன், அவர் அத்தகைய ஒவ்வோர் உபகுழுவினதும் கூட்ட அறிக்கைகளைத் தயாரித்துப் பேணுதலும் வேண்டும்.

(5) ஏதேனும் குழுவின் அல்லது உபகுழுவின் அறிக்கை தவிசாளரினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், தவிசாளர் சமுகமளித்திராத சந்தர்ப்பத்தில், தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் வேறு எவரேனும் உறுப்பினரினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) ஓர் உபகுழுவின் தவிசாளராகப் பணியாற்றுகின்ற குழுவின் எவரேனும் உறுப்பினர் ஒரே சந்தர்ப்பத்தில் அதே குழுவின் வேறேதேனும் உபகுழுவில் தவிசாளராகப் பணியாற்றுதலாகாது.

(7) குழுவொன்றின் ஏதேனும் அறிக்கை சபாபீடத்தில் இடப்படும்போது, பாராளுமன்றம் அத்தகைய அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பாக உரிய அமைச்சரவையின் அமைச்சர் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பதிலளித்தல் வேண்டுமெனக் கட்டளையிடலாம். அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினதும் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினதும் ஏதேனும் அறிக்கை தொடர்பாக நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அரசாங்கத்தின் பதிலைச் சபாபீடத்தில் இடுதல் வேண்டும். ஏனைய குழுக்களின் அறிக்கைகள் தொடர்பில் உரிய அமைச்சர்கள் பதிலளித்தல் வேண்டும்.

(8) ஒரு குழுவும் அத்தகைய குழுவினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் உபகுழுவும் பாராளுமன்றத்திற்கு வெளியே கூடுவதற்குச் சபாநாயகரிடம் அனுமதிபெறுதல் வேண்டும்.

(9) குழுவொன்று அதன் கட்டளை நியதிகளிற்குட்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தகவல் வழங்குவதற்கோ அல்லது சிக்கலான கருமங்களைத் தெளிவுபடுத்துவதற்கோ விசேட அறிவைக் கொண்ட ஆட்களை சபாநாயகரின்

அங்கீகாரத்திற்கமைய நியமிப்பதற்கும் அத்தகைய ஆட்களுக்கு ஊதியமளிப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(10) ஒவ்வொரு குழுவும் அத்தகைய குழுவினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் உபகுழுவும் குழுவினால் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டபோது, சபாநாயகரின் அங்கீகாரத்துடன் தமது கூட்டங்களிற்குப் புறத்தோரை அனுமதிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய புறத்தோர் அக்குழு அல்லது உபகுழு கலந்துரையாடும்போது விலக்கப்படலாம்.

(11) அத்தகைய குழுவின் அல்லது உபகுழுவின் தவிசாளர், கூட்டத்திற்குப் புறத்தோரை அனுமதிப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையைத் தீர்மானித்தல் வேண்டும்.

(12) பாராளுமன்ற கலரிக்கு வருகின்ற பார்வையாளர்கள் தொடர்பில் பிரயோகிக்கப்படும் விதிகள், ஒரு குழுவின் அல்லது உபகுழுவின் கூட்டங்களிற்கு அனுமதிக்கப்பட்ட புறத்தோருக்கும் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

(13) குழுவின் அல்லது உபகுழுவின் கூட்டங்களில் ஒழுங்கைப் பேணுவது தொடர்பில் சபாநாயகருக்குள்ள அதே தத்துவங்களை விடயத்துக்கேற்ப ஒரு குழுவின் அல்லது உபகுழுவின் தவிசாளர் கொண்டிருத்தல் வேண்டும்.

## குழுக்களின் தவிசாளர்கள் பதவி விலகுதல் அல்லது அகற்றப்படுதல்

**132.** (1) விசேட குழு தவிர்ந்த வேறு ஒவ்வொரு குழுவினதும் விடயத்தில்-

(அ) தவிசாளரின் உறுப்பினர் பதவி முடிவுறுத்தப்பட்டால்; அல்லது

(ஆ) தவிசாளர் பதவியிலிருந்து விலகுதல் தொடர்பான தமது விருப்பத்தைத் தவிசாளர் எழுத்துமூலம் சபாநாயகருக்கு அறிவித்திருந்தால்; அல்லது

(இ) இந்நிலையியற் கட்டளையின் (2) ஆம், (3) ஆம் பந்திகளின் ஏற்பாடுகளிற்கிணங்க, குழுவானது, தவிசாளர் தொடர்பில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை ஏற்றுக்கொண்டிருந்தால்,

தவிசாளர் பதவி வெற்றானதெனச் சபாநாயகர் பிரகடனப்படுத்த வேண்டுமென்பதுடன், செயல்முறைக்குகந்தவரை விரைவாகவும் ஆனால், அப்பிரகடனத்தின் பின்னர் ஏழு அமர்வு நாட்களிற்குக் குறைவாகவில்லாமலும் அக்குழுவின் தவிசாளர் தெரிவு பற்றிய திகதியை அறிவித்தல் வேண்டும்.

(2) தவிசாளருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, அப்பிரேரணை கொண்டுவரப்படவுள்ள கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது ஏழு கூட்ட நாட்களிற்கு முன்னர் அப்பிரேரணை பற்றிய அறிவித்தல் அக்குழுவின் தவிசாளருக்கும் எல்லா உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தாலொழிய, சமர்ப்பிக்கப்படுதலாகாது.

(3) குழுவொன்றினால் அதன் தவிசாளருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான தீர்மானத்தின்போது,-

(அ) வாக்கெடுப்பின்றி குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலன்றி; அல்லது

(ஆ) குழுவிலுள்ள அரசாங்கத்தரப்பு உறுப்பினர்களில் ஆகக்குறைந்தது இருவர் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் ஆகக்குறைந்தது ஒருவர் உட்பட, குழுவின் உறுப்பாண்மையின் பெரும்பான்மையானோர் அப்பிரேரணைக்குச் சாதகமாக வாக்களித்திருந்தாலன்றி,

அப்பிரேரணை இந்நிலையியற் கட்டளையின் (1)(இ) பந்தியின் நோக்கங்களிற்காக பயனெதுவும் கொண்டதாதலாகாது.

(4) தவிசாளருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, குழுவினால் தவிசாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதனை அடுத்துப் பின்வரும் ஆறு மாதங்களில் அல்லது அத்தவிசாளருக்கெதிரான அத்தகைய பிரேரணையின் மீதான வாக்கெடுப்பை அடுத்துப் பின்வரும் ஆண்டிற்குள் அல்லது தவிசாளர் தொடர்பில் அவ்வாறான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று குழுவினால் செய்யப்படுதலாகாது.

## ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் அட்டவணைகள் மீது முழுப் பாராளுமன்ற குழுவின் நடைமுறை

**133.** (1) ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தினதும் தலைப்பை தவிசாளர் குறிப்பிடும்போது அந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் காணப்படும் ஏதாவதொரு கருத்திட்டத்திற்கு அல்லது செலவுவிடயத்திற்குரிய தொகையைக் குறைக்குமாறு அல்லது நீக்குமாறு ஒரு பிரேரணையைப் பிரேரிக்கலாம். அவ்வாறு பிரேரிக்கப்படும் பிரேரணை "............ என்னும் செலவுவிடயத்திற்கான (அல்லது........................ என்னும் கருத்திட்டத்திற்கான) ................ நிகழ்ச்சித்திட்டம் ............... ரூபாவால் குறைக்கப்படுமாக" என அமைதல் வேண்டும்.

(2) ஒரு கருத்திட்டத்திற்கான அல்லது செலவுவிடயத்திற்கான தொகை குறைக்கப்பட வேண்டுமென அல்லது நீக்கப்படவேண்டுமென ஒரு பிரேரணை பிரேரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அது முடிவுறும்வரை உறுப்பினர்கள் அந்தப் பிரேரணைமீது மட்டுமே உரையாற்ற வேண்டும்.

(3) ஒரே நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பல பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் அக்குறிப்பிட்ட கருத்திட்டங்களோ செலவுவிடயங்களோ எவ்வொழுங்கு முறையில் காணப்படுகின்றதோ அவ்வொழுங்குமுறையிலேயே மேற்கொள்ளப்படும்.

(4) ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரே கருத்திட்டத்திற்கு அல்லது செலவுவிடயத்திற்குப் பல பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மிகக்குறைந்த குறைப்பு தொடர்பான பிரேரணை முதலில் முன்மொழியப்பட வேண்டுமென்பதுடன், குறைப்புக்களிற்கான எல்லாப் பிரேரணைகளும் முடிவாக்கப்பட்ட பின்னரே ஒரு கருத்திட்டத்தை அல்லது செலவுவிடயத்தை நீக்கவேண்டுமென்ற ஒரு பிரேரணை பிரேரிக்கப்படல் வேண்டும்.

(5) எந்தவொரு கருத்திட்டத்திற்கான அல்லது செலவுவிடயத்திற்கான தொகை குறைக்கப்படவேண்டும் அல்லது நீக்கப்படவேண்டுமெனத் தவிசாளரால் பிரேரணை ஒன்று எடுத்தியம்பப்பட்ட பின்னர் அதற்கு முந்திய ஏதாவதொரு கருத்திட்டத்தின் அல்லது செலவு விடயத்தின்மீதான எந்தவொரு பிரேரணையும் பிரேரிக்கப்படவோ விவாதிக்கப்படவோ அனுமதிக்கப்படுதலாகாது.

(6) எந்தவொரு கருத்திட்டத்திற்கான தொகை குறைக்கப்படவேண்டும் அல்லது நீக்கப்படவேண்டுமென அக்கிராசனத்தினால் பிரேரணை ஒன்று எடுத்தியம்பப்பட்ட பின்னர் அந்தக் கருத்திட்டத்தில் எந்தவொரு விடயத்திற்கான தொகையும் குறைக்கப்படவோ நீக்கப்படவோ வேண்டுமெனப் பிரேரணையெதுவும் பிரேரிக்கப்படலாகாது.

(7) ஒரு நிகழ்ச்சித்திட்டம், கருத்திட்டம் அல்லது செலவுவிடயத்திற்கான செலவுத் தொகை அதிகரிக்கப்படவேண்டுமென்ற பிரேரணை, முன்னறிவித்தலின் பின்னர் ஓர் அமைச்சரவையின் அமைச்சராலன்றி வேறு எவராலும் பிரேரிக்கப்படலாகாது என்பதுடன் அம்முன்னறிவித்தல், பிறவிடயங்களினூடே, அந்நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினத்தை எவ்வளவு தொகையால் அதிகரிக்க பிரேரிக்கப்பட்டதென்பதையும் அவ்வதிகரிப்பிற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்பதையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(8) நிகழ்ச்சித்திட்டத்தின் எந்தவொரு கருத்திட்டத்தின் அல்லது செலவுவிடயத்தின் தொகைக் குறைப்பிற்கான அல்லது நீக்கத்திற்கான பிரேரணை எதுவும் இல்லாத சந்தர்ப்பத்தில் அல்லது அத்தகைய பிரேரணைகள் அனைத்தும் முடிவாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அக்கிராசனத்திலிருந்து "............... நிகழ்ச்சித்திட்டத்திற்கான தொகையான ரூபா .................. (அல்லது ................ நிகழ்ச்சித்திட்டத்தில் குறைக்கப்பட்ட தொகையான ரூபா ................) அட்டவணையில் சேர்க்கப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்படும். அப்பிரேரணை அக்கிராசனத்திலிருந்து சபைக்கு விடப்பட்டபின் அந்நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள தனிப்பட்ட கருத்திட்டங்கள் அல்லது செலவுவிடயங்கள் மீது மேலும் விவாதிக்க அனுமதிக்கப்படுதலாகாது.

(9) 28 ஆம் நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவை எவ்வாறிருப்பினும் எந்தவொரு நிகழ்ச்சித்திட்டம், கருத்திட்டம் அல்லது செலவுவிடயம் தொடர்பான தொகைக் குறைப்பு பிரேரணைக்கு முன்னறிவித்தல் தேவைப்படும்.

### மிகைச் செலவுகள்

**134.** (1) இந்நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் தவிர ஏற்கனவே முடிவுற்ற நிதியாண்டின் சேவைக்குப் பணம் வழங்குவது பற்றிய (இதனகத்துப் பின்னர் மிகைச் செலவு எனப்படும்) பிரேரணை எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(2) ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் ஏதேனும் கருத்திட்டத்தின்மீதான மிகைச்செலவை ஆராய்ந்து அம்மிகைச்செலவு அந்நிகழ்ச்சித்திட்டதின் மீதானதா அல்லது அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கருத்திட்டங்களின் மீதானதா என்பதைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்க வேண்டுமென்பது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள கட்டளையாகும்.

(3) ஒன்று அல்லது ஒன்றிற்குமேற்பட்ட கருத்திட்டங்கள்மீது மட்டுமே மிகைச்செலவுகள் ஏற்பட்டிருந்தால் மிகைச்செலவுகள் முறையான அதிகாரத்துடனும் பொருளாதாரத்திற்கு உரிய கவனம் செலுத்தியும் செய்யப்பட்டனவா என குழு விசாரித்து அவை பற்றித் திருப்தியடைந்தால் அவ்வாறு அறிக்கையிடவேண்டும்; அத்தகைய மிகைச்செலவிற்கு மேற்கொண்டு அங்கீகாரம் பெறத்தேவையில்லை:

ஆயினும், ஆட்களுக்குரிய வேதனாதிகள் கருத்திட்டம் எதன்மீதிலும் மிகைச்செலவு எவையேனும் செய்யப்பட்டிருந்தால் அவ்வாறு செய்யப்பட்ட செலவு அப்போது நடைமுறையிலுள்ள சம்பள அளவுத்திட்டங்களின்படி செய்யப்பட்டுள்ளனவென்றும் தனி ஒருவருக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில்

செய்யப்படவில்லை என்றும் குழு திருப்தியடைதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு திருப்தியடைந்தால் அப்படியே அறிக்கையிடுதலும் வேண்டும்.

(4) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அவ்வாறு திருப்தியடையாவிட்டால் குழு தகுதியானதெனக் கருதுகின்ற மிகைச்செலவிற்கு அல்லது மிகைச்செலவில் குறிப்பிட்ட தொகைக்கு அனுமதி வழங்கப்படவில்லையென அறிக்கையிடலாம்.

(5) ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் மிகைச்செலவு ஏற்பட்டிருப்பதாகவோ குறித்த செலவின விடயங்களை அனுமதித்திருப்பதாகவோ அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அறிக்கையிடும் சந்தர்ப்பத்தில் அம்மிகைச்செலவை அல்லது அனுமதிக்கப்படாத அத்தகைய விடயங்கள் மீதான செலவை ஈடுசெய்வதற்கான வழங்குகையொன்று அளிக்கப்படுவதனைப் பரிசீலனை செய்யும் வகையில் பாராளுமன்றத்தை ஒரு குழுவாகக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கும் பிரேரணை ஒன்று நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் நிர்ணயிக்கப்படும் ஒரு திகதியில் பரிசீலிக்கப்படுவதற்காக ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறல் வேண்டும்;

ஆயினும், அத்தகைய பிரேரணையில் குறிப்பிடப்படும் மிகைச்செலவு எதுவும் எவ்வாண்டிற்குரியதோ அதையடுத்துவரும் ஆண்டிற்கு அடுத்த ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதிக்குப் பின் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(6) முறையான அதிகாரம் பெறப்படாத செலவு எதையும், அது ஒரு மிகைச் செலவு சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அனுமதிக்காதிருப்பதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்குள்ள அதிகாரத்தை இந்த நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்படும் எதுவும் குறைக்காது என்பதுடன் (5) ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள நடைமுறை அத்தகைய அனுமதி மறுப்பிற்கு ஏற்புடையதாகும்.

**135.** (1) எந்த நிதியாண்டிலும் (இதனகத்துப்பின்னர் “முற்பணக் கணக்கு எல்லைகளிற்கு இணங்கியொழுகாமை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள முறையில் ஆகக்கூடிய எல்லைகள் விஞ்சப்பட்டுள்ள அல்லது ஆகக்குறைந்த எல்லைகள் இணங்கியொழுகப்படாத முற்பணக் கணக்கு செயற்பாடு எதனதும் தொடர்பிலான பிரேரணையெதுவும் இந்த நிலையியற் கட்டளையின் (4) ஆம் பந்தியிற் தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் தவிர ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

